விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

உலகெங்குமுள்ள உறவு
களுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-3230)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 14 புதன்கிழமை (30.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 011

# தமிழ் மக்கள் பேரவையில் இணைய அணி திரள்வீர்!

## ஏற்பாட்டுக்குழு அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

அரசியல் என்ற எல்லை கடந்து தமிழ் மக்களின் உரிமைகளை; நலன்களை வென்றெடுப்பதற்காக மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள், பிரதிநிதிகளை ஒன்றிணைத்து வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் இணைத்தலைமையில் உருவாகியுள்ள தமிழ் மக்கள் பேரவைக்கு தமிழர் தாயகமெங்கும் ஆதரவு பெருகி வருகின்றது. இந்த தக்க தருணத்தில் எம் உறவுகளுக்கான களப் பணிகளை சேவை மனப்பாங்குடன் தலைநிமிர்ந்து ஒன்றுபட்டு பணியாற்றிட தமிழ் உறவுகள் அனைவரும் தமிழ் மக்கள் பேரவையில் அணிதிரள வேண்டும் என பேரவை ஏற்பாட்டுக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

03ஆம் பக்கம் பார்க்க....

## வலி.வடக்கு மற்றும் கிழக்கில்
# 700 ஏக்கர் காணி விடுவிப்பு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்டிருந்த 700 ஏக்கர் காணி மீள்குடியேற்றத்துக்காக நேற்று செவ்வாய்க்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வலி.வடக்கு உயர்

23ஆம் பக்கம் பார்க்க....

## உ/த பரீட்சை பெறுபேறுகள் இன்று வெளியிடப்படும்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை - 2015 பெறுபேறுகள் இன்றையதினம் நள்ளிரவுக்கு முன்னதாக வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சைகளில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட தொழில்

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்கள் பேரவையை இழிவுபடுத்திக் கூறவில்லை

### ரெலோ செல்வம் எம்.பி பளிச்

(மன்னார்)

எதிரிகள் - துரோகிகளுடன் தமிழ் மக்கள் பேரவை: ஒருபோதும் இணையோம் என்ற தலைப்புடன் உள்ளூர் பத்திரிகை ஒன்றிலும் சில இணையத்தளங்களிலும் வெளிவந்த செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற

23ஆம் பக்கம் பார்க்க....



## பிரசாந்தன், ஹரிதாஸுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(மட்டக்களப்பு)

இரட்டைக் கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் உட்பட இருவரின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசா

23ஆம் பக்கம் பார்க்க....

டபிள்யு.எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சைகளில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட தொழில்

23ஆம் பக்கம் பார்க்க....

எதிரிகள் - துரோகிகளுடன் தமிழ் மக்கள் பேரவை: ஒருபோதும் இணையோம் என்ற தலைப்புடன் உள்ளூர் பத்திரிகை ஒன்றிலும் சில இணையத்தளங்களிலும் வெளிவந்த செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற

23ஆம் பக்கம் பார்க்க....



க்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசா

23ஆம் பக்கம் பார்க்க....

# அரசியல் தீர்வை அரசிடம் பேசிப் பெற தமிழ் மக்கள் பேரவை நல்ல அழுத்தம்

## சம்பந்தனின் கருத்துடன் சிறிதரன் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

பல இயக்கங்களை தடை செய்து ஒரு தேசிய விடுதலை இயக்கத்தை உருவாக்கிய தலைவர் வே.பிரபாகரன் கூட, இயக்கங்கள் பலவற்றை ஒன்றிணைத்து கட்சியொன்றினை உருவாக்கியிருந்தார். ஆகையால் தமிழ் மக்கள் பேரவையினை பார்த்து நாம் அஞ்சத்தேவையில்லை.

அவர்களும் எமது மக்கள் மத்தியிலிருந்தே உருவாகியுள்ளனர்.

**" இயக்கங்கள் பலவற்றை பிரபாகரன் கூட ஒன்றிணைத்தார்"**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூட இப்பேரவை நல்ல முயற்சி என தன்னிடம் தெரிவித்ததாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று வலம்புரிக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுடைய அரசியல்

23ஆம் பக்கம் பார்க்க....

# நசுக்குவது என்னையல்ல; நாட்டின் கலாசாரத்தை

## ஜனாதிபதி மைத்திரி கருத்து

(கொழும்பு)

தம்மை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் சில பிரசாரங்கள் தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பத்தரமுல்லயில் கருத்துத் தெரிவித்தார்.

அவர் அங்கு கூறுகையில்,

கொழும்பு இசை நிகழ்ச்சி தொடர்பில் அண்மையில் நான் தெரிவித்த

24ஆம் பக்கம் பார்க்க....



# வடக்கு அமர்வு இன்று

## பேரவை குறித்து பேசப்படலாம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபையின் 42-வது அமர்வு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள சபை மண்டபத்தில் சபையின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் கூடவுள்ளது.

இந்த அமர்வில் குறிப்பாக தமிழ் மக்கள் பேரவை சம்பந்தமான சலசலப்புக்கள் வட மாகாண முதலமைச்சருக்கு எதிராகவும் ஆதரவாகவும் உறுப்பினர்களினால் முன்வைக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

ஏற்கெனவே வட மாகாண முதலமைச்சரின் நடவடிக்கைகள் சம்பந்தமாக சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தி காணப்படும் நிலையில் தற்போது தமிழ் மக்கள் பேரவை

23ஆம் பக்கம் பார்க்க....

## மற்றொரு சடலமும் கரையொதுங்கியது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை முனை கடற்பரப்பில் படகு கவிழ்ந்ததில் உயிரிழந்த மீனவர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் கரையொதுங்கியிருந்த நிலையில், மற்றுமொருவரின் சடலம் நேற்று கரையொதுங்கியுள்ளது.

கடலுக்கு சென்ற மூன்று மீனவர்களில் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் கரையொதுங்கியிருந்

24ஆம் பக்கம் பார்க்க....

# யாழில் அதிக மழை வீழ்ச்சி பல இடங்களில் வெள்ளம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தென்மராட்சி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த இரு நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக பல்வேறு பகுதிகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன.

தென்மராட்சியில் நேற்று முன்தினம் தொடக்கம் பெய்த கடும் மழை காரணமாக அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது.

குறித்த பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியுள்ளதாகவும், இதன்காரணமாக தொற்றுநோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 24 மணித்தியாலங்களில் யாழ்ப்பாணத்தில் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகி

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கடற் பாதுகாப்பு கவசங்களை வழங்காததால் கடற்றொழிலாளர்களின் உயிர்கள் பல காவு

## யாழ்.கடற்றொழிலாளர் சம்மேளனம் சாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு கடற் பாதுகாப்பு கவசங்கள் வழங்கப்படாமையினாலேயே அனர்த்தங்களின்போது கடற்றொழிலாளர்களின் உயிர்கள் காவுகொள்ளப்படுவதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத்தின் உப தலைவர் வே.தவச்செல்வம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளன அலுவலகத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது கடற்றொழிலாளர்கள் பலரின் உயிர்களை இழக்க நேரிட்டது.

எமது மக்களை யுத்தம் மற்றும் சுனாமி போன்ற பல்வேறு அனர்த்தங்கள் தாக்கியபோதும் மீண்டும் அவர்களை இயற்கையும் இயற்கைக்கு மாறான பல்வேறு செயற்பாடுகளும் தாக்கத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் கடந்த 3 நாட்களுக்கு முன்னர் பருத்தித்துறை கடற்பகுதியில் இடம்பெற்ற அனர்த்த மொனறில் மூன்று மீனவர்கள் அனர்த்தத்தில் சிக்குண்டு இரண்டு மீனவர்கள் உயிரிழந்துள்ளதுடன் ஒரு மீனவர் கரையிலிருந்த மீனவர்களால் காப்பாற்றப்பட்டிருக்கின்றார்.

இதேபோன்று தொண்டைமானாற்றுப் பகுதியில் அதேதினம் மீனவரொருவரின் படகு கவிழ்ந்து அந்த மீனவர்களும் கரையில் இருந்த மீனவர்களால் காப்பாற்றப்பட்டதுடன் அவர்களின் கடற்தொழில் உபகரணங்கள் அனைத்தும் உடைந்து சேதமாகியுள்ளன. இதனைவிட நெடுந்தீவுப் பகுதியிலும் அண்மையில் படகொன்று விபத்துக்குள்ளாகி அப்பிரதேச மீனவர்கள் மட்டுமட்டாக உயிர் தப்பியுள்ளனர்.

இவ்வாறு கடற்தொழிலாளர்கள் உயிரிழப்பதற்கு பிரதான காரணம் கடற்பாதுகாப்புக் கவசம் வழங்கப்படாததாகும். தென் பகுதியில் இந்த கடற் பாதுகாப்பு கவசங்கள் அனைத்து மீனவர்களுக்கும் வழங்கப் பட்டிருக்கின்ற போதிலும் யாழ். மாவட்டத்திலும் ஒரு தொகுதி பாதுகாப்பு கவசங்கள் கடற்தொழில் நீரியல்வளத் துறைத திணைக்களத்திடம் வழங்கப்பட்டிருக்கின்றது.

அவ்வாறு வழங்கப்பட்ட ஒரு தொகுதியைக் கூட கடற்தொழில் திணைக்களம் சில சங்கங்களுக்கு வழங்கியுள்ளதுடன் பெரும்பாலானவர்களுக்கு வழங்கவில்லை. அவற்றை கடற்றொழில் திணைக்களத்திலேயே 2 வருடங்களாக வைத்திருக்கின்றனர். ஆனால், அதனை வழங்கியிருந்தால் தொழிலாளர்களின் உயிர்களை ஓரளவுக்கு காப்பாற்றியிருக்க முடியும்.

திணைக்களத்தின் பொறுப்பற்ற செயல் காரணமாக இந்த மீன்வர்கள் இறந்து கொண்டிருக்கின்றார்கள்.

எனவே, குறித்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனம் பேரவைக்கு ஆதரவு

மக்கள் நலனுக்காக உருவாகியுள்ள தமிழ் மக்கள் பேரவைக்கு எமது பூரண ஆதரவை வழங்குவதாக யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளன அலுவலகத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்கள் இதனை அறிவித்துள்ளனர்.

மேலும் அவர்கள் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் நலனை முன்னுரிமைப்படுத்தி தமிழ் மக்கள் பேரவை உருவாகியுள்ளதை அறிகிறோம். அதனை நாம் வரவேற்கின்றோம்.

உண்மையில் மக்களின் நலனுக்காக அந்த அமைப்பு செயற்பட்டு மக்களின் நலன்களை முன்னெடுக்குமாகவிருந்தால் எமது ஒத்துழைப்பை தொடர்ச்சியாக வழங்கத் தயாராகவுள்ளோம்.

அவர்கள் அனைத்து சமூகத்தினரையும் சந்தித்து வருவதாக கூறியுள்ளனர். மீனவ சமூகத்தினரையும் சந்தித்து எமது பிரச்சனைகள் தொடர்பாகவும் ஆராய வேண்டும் என அவர்களிடம் கோரிக்கை விடுகின்றோம்.

கட்சி சார்ந்த செயற்பாடுகள் இல்லாமல் சமூகநலன் சார்ந்த விடயங்களை முதன்மைப்படுத்தி அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக செயற்படுவதால் இந்த அமைப்புக்கு எமது ஆதரவு வழங்குகின்றோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (செ-9)

**North Ceylon Pharmacist Union**

வட இலங்கை மருத்தியலாளர் சங்கமானது தனது முதலாவது ஆண்டு நிறைவுடன் மருத் துவக் கருத்தரங்கு (**Continuing Professional Development**) மற்றும் 2016ஆம் ஆண்டிற்கான பொதுக் கூட்டத்தையும் (**AGM**) எதிர்வரும் 03.01.2016 ஞாயிற்றுக்கிழமை **9.00 am - 4.00 pm** மணிவரை யாழ்ப்பாணக் கல்லூரி, வெளிவாரி பட்டப்படிப்பு பகுதியில் மருந்தியலாளர் கல்வி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வட மாகாணத்திலுள்ள அனைத்து மருந்தியலாளர்களையும், மருந்தியலாளர் பயிலுநர்களையும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தலைவர் : இ.குமாரதாஸன்** **செயலாளர் : ப.ஆர்த்திக்**

அனுசரணை :- NOVARTIS Pharma Sevices AG
C/O A.BAUR & CO. (PVT) LTD

(3010)

மனமார வாழ்த்துகின்றோம்

மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கும் கௌரவ அங்கஜன் இராமநாதனுக்கும் கோடான கோடி நன்றிகள்.



2010இல் இளையோனாக அரசியல் பிரவேசம் மூலம் எம்மிடம் வந்த அங்கஜன் இராமநாதன் இன்று அவர் பணி செயல் என்ன என்பதனை பாராளுமன்ற உறுப்பினராக நிருபித்துள்ளார்.

வலி வடக்கு மக்களின் பிரச்சினைகளை தெளிவாக மேன்மை தங்கிய ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறி கடந்த 20.12.2015 அன்று தம்பி அங்கஜனின் ஏற்பாட்டில் எமது மக்களை ஜனாதிபதியுடன் சந்திக்க வைத்ததன் ஊடாக எமது வலிகளை நேரடியாக உணர்ந்த ஜனாதிபதி 15 நாட்களுக்குள் எமது பிரதேசத்தை விடுவித்தமைக்கு மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அங்கஜன் இராமநாதன் அவர்களுக்கும் எமது கோடான நன்றிகளும் வாழ்த்துக்களும்.

(3011)

வலி வடக்கு வாழ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள்

# மரண அறிவித்தல்

## திருமதி சிற்றம்பலம் சின்னப்பிள்ளை

வத்திராயன் தெற்கு தாளையடி
(சுண்டிக்குளம் சந்தி, பிரதான சாலை - தருமபுரம்)



வத்திராயன் தெற்கு தாளையடியை நிரந்தர முகவரியாகவும் சுண்டிக்குளம் சந்தி, முல்லை வீதி தருமபுரத்தை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிற்றம்பலம் சின்னப்பிள்ளை 28.12.2015 திங்கட்கிழமை இயற்கை எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - கதிராத்தை தம்பதிகளின் மூத்த புதல்வியும் அமரர் கணபதிப்பிள்ளை சிற்றம்பலத்தின் (மணியம்) அன்புத் துணைவியும் பாலச்சந்திரன் (ஜேர்மனி), மாசிலாமணி (ஜேர்மனி), நாகலிங்கம் (நோர்வே), பரமசிவம் (பூசகர் உடுத்துறை ஐந்தாம் பனைப் பிள்ளையார் ஆலயம்), புஸ்பமலர் (ஹொலண்ட்), கணேசலிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - கிளிநொச்சி), அமரர் ஜெயலட்சுமி, பரமேஸ்வரி (டென்மார்க்), அன்னலிங்கம் (பாடகர் சிட்டு) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி பா.சூரியா (ஜேர்மனி), திருமதி மா.றஞ்சிதமலர் (ஜேர்மனி), திருமதி நா.சகுந்தலாதேவி (நோர்வே), திருமதி ப.றஞ்சிதமலர், ப.குணரத்தினம், திருமதி க.மனோரதி (ஆசிரியர் - இராமநாதபுரம் ம.வி), ம.விஜயகுமார் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும் அமரர் திருமதி இராசையா பொன்னம்மா, அமரர் திருமதி சோதிநாதன் சின்னக்குட்டி, திருமதி கந்தையா சரஸ்வதி, சின்னத்தம்பி சாமிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுஜாத்தா (ஜேர்மனி), சகிதா (ஜேர்மனி), மைதிலி (ஜேர்மனி), தனுசா (ஜேர்மனி), தயாபரன் (நோர்வே), அரவிந்தன் (நோர்வே), அனுஷன் (நோர்வே), கல்யாணி (நோர்வே), நித்திலா, நிரோஜன், நிருபன், நிமலன், கவிதா (ஹொலன்ட்), அபிமன்யு (ஹொலன்ட்), ஜினேசன் (ஹொலன்ட்), கம்சா (ஹொலன்ட்), அமிலினி (கிழக்கு பல்கலைக்கழகம்), வகிந்தன், புகழினி, அஜந் (டென்மார்க்), வினிதன் (டென்மார்க்), துஷா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.12.2015 காலை 8 மணிக்கு அவரது தற்போதைய வதிவிடமான இல.236, சுண்டிக்குளம் சந்தி, தருமபுரத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விசுவமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
திரு.சி பரமசிவம் (மகன்)
திரு.சி.கணேசலிங்கம் (மகன்)

(C-3244)

# தமிழ் மக்கள் பேரவையில் இணைய அணி திரண்டு வாருங்கள்

## ஏற்பாட்டுக்குழு அறைகூவல்



அரசியல் என்ற எல்லை கடந்து தமிழ் மக்களின் உரிமைகளை, நலன்களை வென்றெடுப்பதற்காக மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் இணைத் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பேரவைக்கு தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தமிழ் உறவுகள் வாழும் இடங்களிலும் பலத்த ஆதரவு கிடைத்து வருகிறது.

நாளுக்குநாள் தமிழ் மக்கள் பேரவைக்கு வருகின்ற தொலைபேசி அழைப்புகள், மின்னஞ்சல் செய்திகள், குறுஞ்செய்திகள், முகநூல் கருத்துக்கள் தமிழ்மக்கள் பேரவை மிக விரைவில் அனைத்துத் தமிழ் உறவுகளையும் ஒன்றிணைத்து மக்கள் இயக்கமாகப் பரிணமிக்கப்போவதைத் கோடி காட்டியுள்ளது.

இதேவேளை எங்களையும் தமிழ்மக்கள் பேரவையில் சேருங்கள். நாங்கள் இழந்தது ஏராளம். அரசியல் என்ற பெயரால் எங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை இழந்து, தருவதைப் பெற்று வாழ்வோம் என்ற தமிழ் அரசியல்வாதிகளின் புரியாமையை, அறியாமையை தொடர்ந்தும் நாம் பார்த்திருக்க முடியாது என்று தத்தம் ஆதங்கத்தைத் தெரிவித்து நிற்கும் தமிழ் நெஞ்சங்களால் தமிழ்மக்கள் பேரவை நெக்குருகி நிற்கிறது.


அன்பார்ந்த தமிழ் உறவுகளே! நீங்கள் அனைவரும் தமிழ்மக்கள் பேரவையில் இணைந்து மக்கள் இயக்கமாகப் பேரவையை உலகுக்கு காட்ட முன்வாருங்கள்.

2016 இல் சப்புச் சவலான தீர்வுக்கு ஆமாம் போடும் தமிழ் அரசியல் தலைமைக்கு ஒரு செய்தியைச் சொல்லுங்கள்.

தீர்வு உங்களுக்கானது அல்ல அது தமிழ்மக்களுக்கானது. எனவே எங்கள் பிள்ளைகள் செய்த தியாகம், நாங்கள்பட்ட துன்பம், வன்னிப் பெருநிலப் பரப்பில் எங்களுக்கு ஏற்பட்ட பேரிழப்புகள் யாவற்றுக்கும் கிடைக்கின்ற தீர்வு என்பது நாம் எதிர்பார்ப்பதாக இருக்க வேண்டும்.

நாங்கள் அரசியல் தலைமையில் இருக்கும்போது ஏதோ ஒரு தீர்வைப் பெற்றுவிட்டால் அது போதும் என்று நினைப்பது எங்கள் இனம் தொடர்ந்தும் அவலப்படவே வழிவகுக்கும்.

ஆகையால் அடையப்படும் தீர்வு எங்களுக்கு நிரந்தரமான தீர்வாக அமைய வேண்டும். எங்கள் எதிர்கால சந்ததி எங்களைப் போல அல்லற்படாமல் நிம்மதியாக வாழக்கூடியதாக இருக்கவேண்டும். இதை வலியுறுத்துவது எங்கள் கடமை. இச்சந்தர்ப்பத்தை நாம் நழுவ விட்டால் நிலைமை மோசமாகிவிடும்.




அன்பார்ந்த தமிழ் மக்களே! பொது அமைப்புகளின் பிரதிநிதிகளே! தமிழ் மக்கள் பேரவையோடு இணைந்து கொள்ளுங்கள். உங்களுக்காக பேரவையின் கதவுகள் திறந்திருக்கின்றன. வடக்கு கிழக்கு மக்கள் கைகோர்த்து நிற்கின்ற இந்த அமைப்பை மக்கள் இயக்கமாக மாற்றுவது உங்கள் கைகளில் என்பதை மறந்து விடாதீர்கள்.

அன்பார்ந்த தமிழ் இளைஞர்களே! ஜனநாயக வழியில் எங்கள் உரிமைகளை கேட்பதில் எந்தத் தவறும் இல்லை. இந்த நாட்டில் ஜனநாயகம் தழைக்க வேண்டுமாயின் ஜனநாயகத்தின் பெயரால் தமிழ் மக்களின் குரல்கள் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

விவேகம் மிக்க தமிழ் இளைஞர்களாகிய உங்கள் உணர்வுகள் மௌனிக்கப்பட்டுள்ளன.

நீங்களே இந்த நாட்டின் வலிமைமிகு சக்தி. நீங்கள் பேசவேண்டும். உங்கள் கருத்துக்கள் வெளிவர வேண்டும். முதுமை என்பது இளைஞருக்கு வழிகாட்டவேண்டுமாயினும் எங்கள் அரசியலில் அதற்கு ஒருபோதும் இடமில்லை.

ஆனால் தமிழ் மக்களின் அமைப்பாகிய தமிழ் மக்கள் பேரவையில் உங்களுக்கே முன்னுரிமை என்பதால் பேரவையுடன் இணையுங்கள். உங்கள் கருத்துக்களைப் பதிவு செய்யுங்கள். பேரவையின் செயற்பாடுகளை விஸ்தரியுங்கள், கிராமங்கள் தோறும் சென்று மக்கள் பணி செய்யுங்கள். எங்கள் தமிழ் இனத்தின் பெற்றோர்களே! அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்று வீட்டில் இருந்து வீணாகிறது நேரம் என்ற கவலைகள் இனி வேண்டாம். தமிழ் மக்கள் பேரவையுடன் இணையுங்கள். மக்கள் பணி செய்ய வாருங்கள்.

எங்கள் மக்கள் படும் துன்ப துயரங்களை அறியுங்கள். வாருங்கள் உங்கள் முதுமையின் பட்டறிவைத் தாருங்கள். அரசியல் என்ற எல்லையைத் தாண்டி தமிழ்மக்களுக்கான பணி என்பது பற்றி சிந்தியுங்கள். எங்கள் மக்களுக்கு எங்களால் முடிந்த சேவையைச் செய்வோம் என்று திடசங்கற்பம் கொள்ளுங்கள். உங்கள் தமிழ் மக்கள் பேரவையில் இணையுங்கள்.

ஜனநாயகத்தோடு - ஆன்மீகத்தின் பலத்தோடு, பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு தமிழினமே பலம் என்ற மனவுறுதியோடு அனைத்து தமிழ்மக்களும் பொது அமைப்புகளும் தமிழ் மக்கள் பேரவையுடன் இணையுங்கள். எல்லாம் நல்லதாக நடக்கும். இறைவன் நிச்சயம் எங்கள் தமிழினத்திற்கு உதவுவான். நாங்கள் நேர்மைத் திறத்துடன், உறுதி கொண்ட நெஞ்சுடன் செயற்படுவோம். எங்கள் தமிழினத்திற்காக பாடுபடுவோம். வாருங்கள் தமிழ் மக்கள் பேரவையில் இணையுங்கள்.

**ஏற்பாட்டுக் குழு - தமிழ் மக்கள் பேரவை**

**தொடர்பு :- +94 75 6993211**

email :- contact@tamilpeoplescouncil.org

### 20 ஆண்டுகளாக தொடரும் ஆதிக்கம்

# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தி புதிய சாதனை படைத்தது ஆஸி

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் அவுஸ் திரேலிய அணி 177 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற் றுள்ளது.

அவுஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதிய 2ஆவது டெஸ்ட் போட்டி மெல் போர்ன் மை தானத்தில் நடந்தது.

இதில் அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 3 விக்கெட் இழப் புக்கு 551 ஓட்டங்கள் எடுத்து டிக் ளேர் செய்தது. மேற்கிந்திய தீவுகள் முதல் இன்னிங்சில் 271 ஓட்டங் களில் சுருண்டது.

பின்னர் பொலோ ஒன் கொடுக் காமல் 280 ஓட்டங்கள் முன்னிலை யுடன் 2வது இன்னிங்ஸை தொடங் கிய அவுஸ்திரேலிய அணி 3 விக் கெட் இழப்புக்கு 179 ஓட்டங்கள் எடுத் திருந்தபோது டிக்ளேர் செய்தது.

இதனால் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு 460 ஓட்டங்கள் என கடினமான இலக்கு நிர்ணயிக்கப் பட்டது.

2ஆவது இன்னிங்சை தொடங் கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சு தாக்குதலை சமாளிக்க முடியாமல் திணறியது.

முன்னணி வீரர்கள் அனை வரும் சொற்ப ஓட்டங்களில் வெளி யேறினார்கள்.

இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணி 282 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல் வியை தழுவியது.

அதிகபட்சமாக ராம்டீன் 59 ஓட்டங்களும், அணித் தலைவர் ஹோல்டர் 68 ஓட்டங்களும் எடுத் தனர்.


அவுஸ்திரேலியா சார்பில், மிட்சல் மார்ஷ் 4, நோதன் லயன் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றி னர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் நேதன் லயன் தெரிவானார். இந்த வெற்றி



யின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை ஒரு போட்டி மீதமிருக்கையில் அவுஸ்திரேலிய அணி 2:0 எனக் கைப்பற்றியுளளது.

மேலும், 1995ஆம் ஆண்டு முதல் 2015வரை பிராங்க் வொரல டெஸ்ட் வெற்றிக் கிண்ணத்தை தக்கவைத்து அவுஸ்திரேலியா சாதனை புரிந்துள்ளது. (க)



# இங்கிலாந்து சிறப்பாட்டம் போராடுகிறது தெ.ஆபிரிக்கா

ஸ்ரீபன் பின்னின் அசத்தலான வேகப் பந்து நேற்றைய 4ஆம் நாள் ஆட்டத்தில் கைகொடுக்க, இங் கிலாந்து அணி கிங்ஸ்மீட், டேர் பன் டெஸ்ட் போட்டியை வெற்றி கொள்ள அரிய சந்தர்ப்பம் வாய்த் துள்ளது.

மறுபுறத்தில் தென்னாபிரிக்க அணி, அணித் தலைவர் ஹசிம் அம்லா, டு பிளசிஸ் ஆகியோரின் மோச மான துடுப்பாட்டம் தொடர தடு மாற்றமான நிலையில் உள்ளது.

எனினும் அனுபவ வீரர் டி வில் லியர்ஸ் சிறப்பாக துடுப்பெடுத் தாடுவதால் தென்னாபிரிக்க அணி நம்பிக்கையுடன் உள்ளது.

தென்னாபிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி கிங்ஸ்மீட் டேர் பனில் நடைபெற்று வருகிறது.

முதல் இன்னிங்சில் இங்கி லாந்து 303 ஓட்டங்களும் தென்னா பிரிக்கா 214 ஓட்டங்களும் எடுத்தன. 89 ஓட்டங்கள் முன்னிலையுடன இங்கிலாந்து அணி 2ஆவது இன் னிங்ஸை தொடங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரர் கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டம் இழந்த போதிலும், நம்பிக்கை நட்சத்திரம் ரூட் 73, கொம்ப்டன் 49 ஓட்டங்களும் எடுத்து அணிக்கு வலுச் சேர்த்தனர்.

அதன்பின் வந்த பேயர்ஸ்ஸோ அதிரடியாக 79 ஓட்டங்கள் குவிக்க, இங்கிலாந்து அணி 2ஆவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 326 ஓட்டங்கள் குவித்தது.

ஸ்ரெய்ன் இல்லாத நிலைமை பந்துவீச்சில் தெரிய, சுழல்பந்து வீச்சாளர்கள் பியட் (5), வான் சைல் (3) இருவரும் இணைந்து இங் கிலாந்தின் 8 விக்கெட்டுக்களைக் கொய்தனர்.

இங்கிலாந்து அணியால் நிர்ண யிக்கப்பட்ட 416 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி தமது 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்த தென்னாபிரிக்க அணிக்கு,

ஆரம்ப வீரர்களான வான் சைல் - எல்கர் இணை சிறப்பான ஆரம்பம் கொடுத்தது. இருவரும் இணைந்து ஆரம்ப விக்கெட்டுக் காக 53 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில், அதிரடியாக ஆடிய வான் சைல் 33 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார்.

கடந்த சில போட்டிகளாக மோச மாக துடுப்பெடுத்தாடிவரும் அனு பவ அம்லா இந்த இன்னிங்ஸிலும் சோடை போனார். அவர் 12 ஓட் டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன்பின் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த எல்கரும் 40 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இவர்கள் இருவரினதும் விக் கெட்டுக்களை பின் கைப்பற்றினார்.




தொடர்ந்து களமிறங்கிய இன் னொரு நட்சத்திர வீரர் டு பிளசிஸ், இவரும் கடந்த சில போட்டிகளாக தனது ஆட்டத்திறனை இழந்திருந் தார். இதனால் இப்போட்டியில் சிறப்பாக துடுப்பெடுத்தாடி தனது பழைய ஆட்டத்திறனை வெளிப் படுத்துவார் என்று எதிர்பார்த்த போதிலும் இந்த இன்னிங்ஸில் பந்துகளை தின்றுதீர்த்தாரே தவிர ஓட்டங்களைப் பெற முயலவில்லை.

66 பந்துகளைச் சந்தித்து வெறு மனே 09 ஓட்டங்களை மாத்தி ரமே எடுத்து பின்னின் பந்தில் குக் கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

நைட்வோட்ச்மனாக ஸ்ரெய்ன் களமிறங்கினார். மறுமுனையில் டி வில்லியர்ஸ் சிறப்பாக துடுப் பெடுத்தாடிக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் நேற்றைய 4ஆம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது தென்னாபிரிக்க அணி தனது 2ஆவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களை எடுத்துள்ளது. களத் தில் டி வில்லியர்ஸ் 33 ஓட்டங் களுடன் உள்ளார். பந்துவீச்சில் பின் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

இன்று ஆட்டத்தின் இறுதி நாளாகும். இந்நாளில் தென் னாபிரிக்க அணி வெற்றிக்கு 6 விக் கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் 280 ஓட்டங்களை பெற வேண்டும். (க)

# 2016-ம் ஆண்டு வெளியாகிறது தோனியின் வாழ்க்கைப் படம்

தோனியின் வாழ்க்கை வர லாற்றை மையப்படுத்திய திரைப் படம் வெளியாகும் திகதி அறிவிக் கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் சாதனை தலைவரான தோனி, இந்திய அணிக்கு 2 உலகக் கிண் ணங்களை வென்று கொடுத்தவர்.

கடந்த ஆண்டு அவர் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்று விட்டநிலையில், தற்போது இரு பது-20 மற்றும் ஒருநாள் போட்டி தலைவராக உள்ளார்.

இந்த நிலையில் அவரது வாழ்க்கை வரலாறு பற்றி 'சொல்ல மறந்த கதை' (M.S. Dhoni – The Untold Story) என்ற பெயரில் திரைப்படம் ஒன்று தயாராகிறது.

நீரஜ் பாண்டே இயக்கத்தில் தயாராகியுள்ள இந்த படத்தில் சுவாந்த் சிங் ராஜ்புத் (தோனி), கயாரா அத்வானி (சாக்ஷி), அனுபம் கெர் (தோனி தந்தை) ஆகியோர் நடிக்கின்றனர்.




ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர் பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்த திரைப்படம் எதிர்வரும் 2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி வெளியாகும் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (க)

# ஹிருணிகா எம்.பியை கைது செய்ய முடியாது

## குற்றத் தடுப்புப் பிரிவு

தெமட்டகொட பிரதேச இளைஞர் கடத்தல் சம்பவம் தொடர்பில் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகாவை கைது செய்ய போதிய சாட்சிகள் காணப் படாதுள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்த கடத்தல் சம்பவம் தொடர்பில் ஹிருணிகா கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு இரு தடவைகள் அழைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது, இவர் நேரடியாக இதில் சம்பந்தப்பட்டதற்கான போதிய ஆதாரங்கள் தென்படவில்லையெனவும் அப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.(இ-7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் நடராஜா நாகரத்தினம்

தோற்றம்-1925.12.17

மறைவு-2015.01.10



அன்புக்கோர் அன்னையாய்
கருணைக்கோர் தெய்வமாய்
பண்புக்கோர் உத்தமியாய்
வாழ்க்கைக்கோர் இலக்கணமாய்
தியாகத்துக்கோர் உதாரணமாய்
மனிதருள் மாணிக்கமாய்,
காவியமாய் வாழ்ந்தீர்கள்
உங்களை காலமெல்லாம்
நினைத்திருப்போம்
ஆண்டொன்று ஆனாலும்.
ஆறாதம்மா
உங்கள் பிரிவின் வலி
ஆண்டவன் காலடியில்
உங்கள் ஆத்மா
சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

VH லேன்,
இருபாலை,
கோப்பாய்.

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக உள்ளூராட்சி தேர்தலை நடத்த வேண்டும்

## தினேஷ் குணவர்த்தன வலியுறுத்து



(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டுமென கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ குணவர்த்தன தெரிவித்துள் ளார்.

நாளுக்கு நாள் அரசாங்கத்தின் மீதான மக்கள் எதிர்ப்பு அதிகரித்து செல்கின்றது.

தோல்விக்கு அஞ்சி ஜனநாயக விரோதமாக செயற்படாது ஏற்கனவே கூறியதனைப் போன்று தேர்தலை நடத்த வேண்டும்.

கூட்டு எதிர்க்கட்சி யாகிய நாம் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல் நடத்தப்படும் என நாம் நம்புகின்றோம்.

எனினும், உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றின் பதவிக்காலம் மேலும் ஆறு மாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

வரி செலுத்துதல் உள்ளிட்ட மக்களின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு இணங்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக நடத்தப்பட வேண்டுமென சிங்கள பத்திரிகை யொன்றுக்கு தினேஸ் குண வர்த்தன நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். (இ-7)

## பெயர் மாற்ற அறிவித்தல்

இணுவில் தெற்கில் வசிக்கும் செல்வி ஞா.மனோகரி ஆகிய எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் எனது பெயர் ஞா.மணோகரி என பதியப்பட்டுள்ளது. எனது மற்றைய ஆவணங்களில் ஞா. மனோகரி என பதியப்பட்டுள்ளது. ஆகவே இன்றிலிருந்து ஞா.மணோகரி என பதியப்பட்டுள்ள பெயரை ஞா.மனோகரி என சகல ஆவணங்களிலும் கையொப்பமிடுவேன் என அறியத்தருகின்றேன்.

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள
ஞா.மனோகரி

(3006)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்லூரியின் ஆலயக் குருக்கள் திரு. இ. மகாலிங்க சர்மா அவர்களின் தந்தையார் **அமரர் சுப்பையர் இரத்தின ஐயா** அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**-யா/ மகாஜனக் கல்லூரி-**

(சி-3238)

## அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் இலட்சார்ச்சனை பெருவிழாவில் இசை ஆராதனை செய்யும் கலைஞர்கள்

### இசை ஆராதனை

**நிகழ்ச்சி**

30.12.2015 புதன்கிழமை

**பாட்டு:-** திரு.ந.பரந்தாமன் (விரிவுரையாளர், இசைத்துறை)
**தபேலா:-** திரு.எஸ். விமல்சங்கர் (விரிவுரையாளர், இசைத்துறை)
**வயலின்:-** திரு.அ.ஜெயராமன்

### இசை ஆராதனை

அனுசரணை வழங்குவோர்
என்.பாலகிருஸ்ணன் வேல்முருகன் சைவ உணவகம்,
திருநெல்வேலி சந்தி, யாழ்ப்பாணம்.

(2901)

# இராசி பலன்

30.12.2015
(மார்கழி 14, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21மணிக்கு,
பஞ்சமி முன்னிரவு 6.53மணிவரை
மகம் பிற்பகல் 5.03மணிவரை
இராகுகாலம் 12.29-1.59மணிவரை
சுபநேரம் 4.59-6.29மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தராடம்,திருவோணம் | | |
| | | | சந் |
| சூரி புத | சனி சுக் | செவ் | குரு ராகு |

**மேடம்:** தொட்ட காரியங்கள் கைகூடும், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம்,சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப் புண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**இடபம்:** தனவரவில் இருந்த தடைகள் அகலும்,தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்,பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும்.

**மிதுனம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர்,பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்,நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும்.

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்,குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்,கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்,திடீர் பயணங்கள் ஏற்படலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்,போசன சுகமுண்டு.

**கன்னி:** தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, விரதங்களில் நம்பிக்கை கூடும்.

**துலாம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள்,உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்,எந்தக் காரியத்தையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

**கும்பம்:** விட்டுச் சென்ற உறவுகள் மீண்டும் வந்து சேரலாம்,குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு,புதிய தொழில் வாய்ப்புக்கள் வந்து சேரலாம்.

**மீனம்:** நிர்வாகத் திறமை வெளிப்படும் நாள்,நல்லவர்களின் தொடர்புகள் நன்மை தரும்,பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள்.

# எமது பிரச்சினைகள் தொடர்பில் கரிசனை காட்டத்தவறிவிட்டனர்

## மக்கள் பிரதிநிதிகள் மீது குற்றச்சாட்டு

பனை-தென்னை வள கூட்டுறவுத்துறை தொடர்பில் எமது மக்கள் பிரதிநிதிகள் கரிசனை காட்டத் தவறி விட்டனர்.எமது பிரச்சினைகளை புரிந்து உரிய நேரத்தில் சரியான உதவிகளை செய்ய வேண்டும் என யாழ்.மாவட்ட பனைதென்னைவள கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் நாகன் கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில்பனைதென்னை வளத்தை தமது வாழ்வாதாரமாக கொண்டுபலர்வாழ்கின்றனர். ஆனால் இதில் உள்ள பிரச்சினைகளை பற்றி கலந்துரையாடுவதற்கு எமக்கென ஒருவரும் இல்லை என்றே கூற முடியும்.

யாழ்.மாவட்டத்தில்பனைதென்னை கூட்டுறவு சங்கங்கள் 19 காணப்படுகின்றன. இதில் 6 ஆயிரம் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்களை நம்பி 50ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வாழ்ந்து வருகின்றனர். இது ஒரு பகுதி மக்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய துறையாக காணப்படுகின்றது.

புதிய அரசின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் கள் போத்தலில் அடைக்கும் நிலையங்களுக்கான வரியை 2இலட்சம் ரூபாவில் இருந்து 10 இலட்சம் ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

இந்த வரி அதிகரிப்பு எமது தொழிலாளர்களை மிகவும் பாதித்துள்ளது. அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக எமது மக்கள் பிரதிநிதிகள் அரசிடம் கோரிக்கைகள் மற்றும் அழுத்தங்களை கொடுத்தால் மட்டுமே எமது பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என நம்புகிறோம்.

எமது பிரதிநிதிகளிடம் எம் பிரச்சினையை போய் கூறினால் அவர்கள் எம்மிடம் மதுவில் இருந்து மாற வேண்டும் எனகூறுகிறார்கள்.

இது காலம் காலமாக எமது சமுதாயத்தில் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான தொழிலில் ஒன்றாக செய்து வருகின்றோம். இதில் இருந்து மாற வேண்டுமென்றால் அதில் தங்கி வாழும் மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

தென்னிலங்கையில் இருந்து வரும் மதுபானங்களுடன் எமது உற்பத்திகளை சமப்படுத்தி பார்ப்பது தவறு. பல்வேறு சிரமங்களின் மத்தியில் தான் எமது சங்கங்களை கொண்டு நடத்தி வருகின்றோம்.

கள் போத்தலில் அடைக்கும் நிலையங்களின் வரிகுறைப்பு தொடர்பாக வரையறுக்கப்பட்ட இலங்கை நுகர்ச்சி கூட்டுறவு சங்க சம்மேளனத்திடம் வட மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களை சேர்ந்த பனை தென்னை கூட்டுறவு சங்கங்களில் இருந்து 10 பேர் வரையில் கொழும்பிற்கு சென்று கலந்துரையாடலை மேற் கொண்டோம். வரி குறைப்பு தொடர்பாக குறித்த சம்மேளனத்தினூடாக நிதி அமைச்சருக்கு மகஜர் ஒன்றினை கையளித்துள்ளோம்.

எனினும் எமது பிரச்சினைக்கு வெகு விரைவில் தீர்வு கிடைக்க வேண்டுமென்றால் எமது மக்கள் பிரதிநிதிகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளில் ஒன்றாக இது காணப்படுவதனை புரிந்து கொண்டு எமக்கு உதவி செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

### ஆட்சேர்ப்பு செய்வதற்கான

# நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் கலாசார உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 22.11. 2015 ஆம் திகதி அன்று மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு வினால் நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்ற 20 பேருக்கான நேர்முகப் பரீட்சை 2016. 01.04 ஆம் திகதி வட மாகாண கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளதாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் வட மாகாண கல்வி அமைச்சினால்அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடிதம் அனுப்பி வைக்கப்பட்டவர்களது பெயர் விபரங்கள் வருமாறு,

ச.மயூரன் -853561452V, த.கீதரோகினி- 875860135V, தே. நிரூபணா- 907202216V,அ.மேரி மிலோசா டயஸ் -896540564V, ப.கிரிஷாந்-873140623V, ச.அருள் மொழிவேந்தன்- 871732817V, சோ.சஞ்ஜீவன்- 851660054V, மு.கோபாலகிருஷ்ணன்- 811292931V, சு.கஜனி- 915013040V, அ.இர்பான்-870051921V, தே.லியுக்ஸ்பேட்-852762071V, கு.நிருஜா-896520300V, சி.ஜதுசன்- 900793057V,கே.சுபாஜினி- 875161075V, ம.மேரி சிபில்லா சில்வ- 888130543V, இ.கிஷாந்தி- 877593240V,கு.பகீரதி-906372487V,சு.சர்மிளா- 856442233V,மு.முகமது நிஹ்மத்-890071813V, ஜெ.அபிராமி -905182129V,



நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும், நல்லூர் பிரதேச செயலகமும் இணைந்து அண்மையில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்திய பண்பாட்டுப் பெரு விழாவின் போது நல்லைக் குருமணியின் பிரதமவாரிசு சங்கீத கதாப்பிரசங்க வித்துவான் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவினது கலைச் சேவையை பாராட்டி கலை ஞானச்சுடர் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவ் விருதினை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு நேற்று தகரங்கள் வழங்கப்பட்டன



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களிற்கு யாழ். பிரதேச செயலகத்தினால் நேற்றையதினம் யாழ்.இணையும் கரங்கள் சனசமூக நிலையத்தில் வைத்து தகரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஜே-87 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் 40 முஸ்லிம் குடும்பங்களிற்கு சுமார் 480 தகரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. பாதிப்பின் அடிப்படையில் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 8 தொடக்கம் 12 வரையான தகரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த மக்களின் நிலை தொடர்பாக அரசஅதிபர்நா.வேதநாயகனிடம் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் ரஹீம் கோரிக்கை விடுத்திருந்தமையை அடுத்து இந்த உதவி வழங்கப்பட்டுள்ளன. இத் தகரங்களை பயனாளிகளுக்கு முஹம் மதியா ஜும்மா பள்ளி வாசல் பிரதம இமாம் மஹ்மூத் பலாஹி, கிராம சேவகர் கீ.சேந்தன், சமூக சேவகர்களான கே.எம் நிலாம், எம்.நஷீர்.எம் அனஸ், எம்.எம் பாபு ஆகியோர் வழங்கிவைத்தனர்.(இ-9)

# இரு கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்தில் சுன்னாகம் மற்றும் கந்தரோடை தொழிற்பயிற்சி நிலையங்களில் அலுமினியம் பொருத்துநர், விவசாய இயந்திர உபகரணங்கள் திருத்துநர் உள்ளிட்ட கற்கை நெறிகள் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக் கற்கை நெறிகளை கற்க விரும்புவர்கள்யாழ்ப்பாணம்வீரசிங்கம்மண்டபத்தில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் 06.01.2016 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

இக் கற்கை நெறியை பயிலும் பயிலுநர்களுக்கு போக்குவரத்து பருவகால சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# கணிதபாடப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுச் செயலாளரின் 15.12.2015 ஆம் திகதிய சுற்றுநிருப இலக்கம் 2015/20 இதற்கமைவாக இவ் வருடம் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி காலை 9 மணிக்கு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்துடன் இணைந்து நடத்தும் கணிதபாடப் பரீட்சையானது வடமாகாணப் பாடசாலைகள் அனைத்திலும் நடைபெறவுள்ளது என வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ-7)

## செயன்முறைப் பரீட்சையும் நேர்முகத் தேர்வும் விரைவில்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் விளையாட்டு உத்தியோகத்தர் வகுப்பு III தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக கடந்த 19.12.2015 ஆம் திகதி அன்று மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்ற 46 பேருக்கான செயன்முறைப் பரீட்சையும், நேர்முகத் தேர்வும் 2016 ஜனவரி மாதம் 2, 4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக வட மகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய செயன்முறைப் பரீட்சைகள் 2 ஆம் திகதி வவுனியா கல்வியியல் கல்லூரி மைதானத்திலும், நேர்முகத் தேர்வு 4 ஆம் திகதி வட மாகாண கல்வி அமைச்சிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் வட மாகாண கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் பெயர் விபரம் தொடர்பாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

வெளியிடப்பட்டுள்ள பெயர் விபரங்கள் வருமாறு,

சி.பவகணேஷ்-903540753V, தெ.நிஷாகரன்-782860402V,கு.மலரவன்-872101802V, யோ.டினோஜன்- 931231065V, ந.கஜனி-926543539V, வி. பிறிற்றோ லம்பேட்- 810875160V, ம.அன்ரனீஸ்-911631148V, த. தர்மிகன்-960301846V, சி. சினாஜினி-945463686V, பா. யூலியன் டில்சன்-803344728V, ச. வரதன்-940834335OV, ம. மயூரன்-901153477V, மு.முகம்மது முஸ்வீக்-932021528V, வி. மதனராஜன்-902921494V, க. கருணாதேவி-825902295V, சி. சிவபாலன்-921203780V, மோ. கபிலன்-952343050V, சி. நிஷாந்தன்-872760326V, த. கோகுலன்-891880685V, வி.ரேகன்-810694874V, ஆ.சமிந்தகுமார்-891931557V, ம.மஷீன்-920030670V, த.நிமல்ராஜ்-892402930V, சி.யசோதரா-915413420V,யோ.நிரோசன்-921850336V, செ.சத்தியன்-862903838V, தொ.அன்ரனி டினோசன்-890802613V,சி.ஜிவிந்தன்-921240805V, ஜெ.விஜசன்-890320295V, வ.ஹரிகரன்-912762238V, க. நிருஜன்-922230862V, ஜெ.குபிதா-896202723V, ப.பசில்-93 2802104V, த.விந்துஜன்-941881220V, ஜமீல்மொகமட் நுஹ்மான்-951821730V, ச.கபில்ராம்-900060629V, ச.சுகந்தா-86 6781079V, செ.ரம்யராகுலன்-871843996V, பேட் நிஜாந்-952762427V, இ.ஸ்ரீகாந்தன்- 880234374V, மொ.மொகமட் தஸ்நீம்-863513510V, சி.தயானி-957003036V, இ.டலினி-917221910V, செ.திவிராஜ்-892972218V, அ.விதன்-921611609V, மொ.நஸ்ரின்-920130240V (இ-5)




# இலங்கையில் ஜனநாயக வெற்றி 2015 ஆம் ஆண்டில் கிடைத்தது

## அமெ. இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**2015ஆம் ஆண்டு இலங்கையிலும் உலகின் ஏனைய சில நாடுகளிலும், மிகவும் முக்கியமான ஜனநாயக வெற்றிகள் கிடைத்திருப்பதாக, அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.**



2015ஆம் ஆண்டு நிறைவடையும் நிலையில், பொஸ்டன் குளோப் இதழுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே ஜோன் கெரி இவ்வாறு கூறியுள்ளார்.

கொந்தளிப்பும், துன்பங்களும் இருந்த போதிலும், கடினமான பிரச்சினைகளையும் சமாளிக்க உலக சமூகம் ஒன்றிணையும் என்ற நம்பிக்கையைத் தந்த ஆண்டாக 2015 ஆம் ஆண்டு அமைந்திருக்கிறது.

நைஜீரியா, பர்மா, இலங்கை வெனிசுவேலா உள்ளிட்ட நாடுகளில் மிகவும் முக்கியமான ஜனநாயக வெற்றிகள் கிடைத்திருக்கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## இலங்கை மீன்பிடித்துறைக்கு ஆதரவளிக்க ஆஸி இணக்கம்

இலங்கை மீன்பிடித் துறை அபிவிருத்திக்கு ஆதரவு வழங்க அவுஸ்திரேலியா இணக்கம் தெரிவித்துள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய வர்த்தக ஆளுநர் க்ரேய்சன் பெரி (Grayson Perry) தலைமையிலான அவுஸ்திரேலிய வர்த்தக பிரதிநிதிகள் குழுவுக்கும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலின் போது கருத்து தெரிவித்த அவுஸ்திரேலிய வர்த்தக ஆளுநர், மீன்பிடி கைத்தொழில் துறையில் தேவையான அறிவு மற்றும் பயிற்சி நெறிகள், அத்துடன் அவுஸ்திரேலியாவில் பின்பற்றப்பட்டு வரும் முறைகள், என்பவற்றினை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலர்களுக்கும், இவ் அமைச்சின் கீழ் பணியாற்றி வரும் திணைக்கள அலுவலர்களுக்கும் மீன்பிடித்துறையில் பணியாற்றி வரும் அனைத்து அதிகாரிகளுக்கும் வழங்க தாம் தயாராகவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்து தெரிவித்த அமைச்சர், இது குறித்து தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்ததுடன், இதன்மூலம் இருநாடுகளுக்கிடையிலும் தொழில்நுட்ப ரீதியிலான ஒத்துழைப்புக்கள் அதிகரிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திருமதி டபிள்யூ.எம்.எம். ஆர்.அதிகாரி, அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயத்து ஆலோசகர் சார்லேங் புலுன்டல் (Charlotte Blundell), NARA திணைக்களத்தின் தலைவர் கலாநிதி அனில் பிரேமரத்ன மற்றும் பல அதிகாரிகள் எனப்பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலங்கையுடன் சுதந்திர வர்த்தக உடன்பாடு அடுத்த ஆண்டில் பேச்சு நடத்தவுள்ளது சீனா

சுதந்திர வர்த்தக உடன்பாடு செய்து கொள்வது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் அடுத்த ஆண்டு பேச்சு நடத்தப்படும் என்று சீன அரசாங்கம் அறிவித்துள்ளது.

சீனாவின்சின்ஹுவா செய்தி நிறுவனத்திடம், சீன வர்த்தக அமைச்சர் கோஹு செங் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

"அடுத்த ஆண்டில் தென் கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் விரிவான பிராந்திய பொருளாதாரக் கூட்டு உடன்பாட்டைச் செய்து கொள்வது குறித்தும், இலங்கை மற்றும் மாலைதீவுடன் சுதந்திர வர்த்தக உடன்பாடு செய்து கொள்வது குறித்தும், பூகோள பங்காளர்களுடன் வலுவான வர்த்தக முதலீட்டு உறவுகளை கட்டியெடுத்து உதவுவதற்கும் பேச்சுக்கள் நடத்தப்படும்.பூகோள சந்தையில், விற் பனை வழிகளைக் கையாள வசதியாக, சீன நிறுவனங் கள் வெளிநாடுகளில் முதலீடு செய்வதற்கு ஊக்கம் அளிக்கப்படும்" என்றும் அவர தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜனவரி 8 முதல் தேசிய வெற்றி வாரம்; தேசிய கொடியை ஏற்றுங்கள் - ராஜித

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஒரு வருடம் நிறைவடைவதை முன்னிட்டு எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி முதல் ஒரு வாரத்தை தேசிய வெற்றி வாரமாக அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல்திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இவ்வாரத்தில் நாட்டிலுள்ள சகலரும் தங்களது வீடுகளில் தேசியக் கொடியை பறக்க விடுமாறும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். அத்துடன், அரச நிறுவனங்கள் அனைத்திலும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கருத்தொற்றுமையே கிடையாது

### மகிந்த கண்டுபிடிப்பு



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கிடையில் எந்த வகையிலும் கருத்தொற்றுமை கிடையாது என்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறை அக்குரஸ்ஸ பிரதேசத்தில் நடைபெற்ற ஆடைத்தொழிற்சாலையொன்றின் திறப்பு விழா வில் நேற்று முன்தினம் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டிருந்தார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் என்னைத் தோற்கடிக்கும் ஒரே நோக்கிலேயே ரணிலும் மைத்திரியும் ஒன்றிணைந்து செயற்படத் தொடங்கினர். மற்றபடி அவர்கள் இருவருக்கும் எந்த விடயத்திலும் கருத்து ஒருமைப்பாடு இல்லை.

நான் எப்போதும் கூறுவதைப் போன்று ஒரே நேரத்தில் இரண்டு தலைவர்களால் நாட்டை ஆளமுடியாது.

ஒன்றில் ரணில் இந்நாட்டை ஆளவேண்டும். இல்லையேல் மைத்திரிபால நாட்டை ஆள வேண்டும். ஆனால் என்னைத் தோற்கடிப்பதில் ஒன்றுபட்டு செயற்பட்டதைப் போன்று இந்த வடயங்களில் எல்லாம் அவர்களால் ஒரு முடிவில் இணக்கத்தை எட்டமுடியாது.

சுதந்திரக் கட்சி எங்கள் அனைவருக்கும் சொந்தமான கட்சி. அதனை யாருக்காகவும் விட்டுக் கொடுக்க முடியாது என்றும் மகிந்த ராஜபகஷ தெரிவித்துள்ளார்.(இ-7)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:25<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:MBA/தனியார் தொழில்<br>தொ.இ: B/5334 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 19செவ் 7 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில்<br>தொ.இ: G/5363 |
| பிறப்பு: 1982RC<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSC/கனடா PR<br>தொ.இ: B/5335 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 8<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் : A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5368 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 28செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:AAT/அரசதொழில்<br>தொ.இ: B/5336 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 12செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5370 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 62செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் : A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5337 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 19<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்:AAT, CIMA<br>தொ.இ: G/5375 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# மருந்தகங்களில் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்கள் கட்டாயம் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும்

## இந்நடவடிக்கை அடுத்தாண்டு முதல் அமுல்-முல்லைத்தீவு மாவட்ட சுகாதார பணிப்பாளர் உத்தரவு

(வற்றாப்பளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கி வருகின்ற மருந் தகங்களில் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட மருந் தாளர்கள் கட்டாயம் பணிக்கு அமர்த்தப்பட வேண் டும்.இந் நடவடிக்கை அடுத்தாண்டிலிருந்து நடை முறைப்படுத்தப்படும் என முல்லைத்தீவு பிராந்திய சுகாதார பணிப்பாளர் திருமதி த.பூங்கோதை உத்தர விட்டுள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்ட மருந்தக உரிமை யாளர்களுக்கும் பணிப்பாளருக்கும் இடை யில் சந்திப்பொன்று கடந்த 15ஆம் திகதி பிற்பகல் 3.30மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையில் வைத்து நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அடுத்தாண்டில் இருந்து மருந்தகங்க ளுக்கான அனைத்து சட்ட விதிமுறைகளும் மிகவும் இறுக்கமான முறையில் நடைமுறை ப்படுத்தப்படும்.

சட்ட விதிமுறைகளை மீறுவோர் மீது கடு மையான நடவடிக்கை எடுக்கப்படும்.

சிகிச்சை நிலையங்களாக இயங்கி வரு கின்ற மருந்தகங்கள் உடனடியாக சிகிச்சை நிலையம் தனியாகவும் மருந்தகம் தனியாக வும் பதிவு செய்யப்பட வேண்டும்.

அனைத்து மருந்தகங்களிலும் குளிரூட்டி வசதி அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.


மருந்தகங்களில் பேணப்பட வேண்டிய அனைத்து வகையான பதிவு ஆவணங்க ளும் எவ்வேளையும் மருந்தகங்களில் தயா ராக வைத்திருக்க வேண்டும்.

இது இவ்வாறு இருக்க முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கும் பெரும்பாலான மருந் தகங்கள் பதிவு செய்யப்படாத நிலையிலேயே இதுவரை காலமும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-310)




# வீசிய பலத்த காற்றினால் 12 வீடுகளின் கூரைகள் சேதம்

## இத்தாவில் கோவில் காட்டில் சம்பவம்



(மல்லாவி)

கிளிநொச்சி பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் கோவில் காட்டு பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு வீசிய பலத்த காற்றினால் 12 குடியி ருப்புகள் சேதமடைந்துள் ளன. அத்துடன் காற்றுடன் பலத்த மழையும் பெய்துள் ளது. வீசிய காற்றினால் 12 குடியிருப்புக்களின் கூரை களும் தூக்கி வீசப்பட்டுள் ளன. குறித்த சம்பவத்தில் எவருக்கும் எவ்வித பாதிப் புக்களும் ஏற்படாத போதிலும், வீடுகளும், பொருடகளும் சேதமடைந்துள் ள்ன. தொடர்ந்தும் மக்கள் பாதுகாப்பாக தமது உறவினர் வீடுகளில் தங்கியுள் ளனர். (2-15)

# ஊடகவியலாளரை தாக்கிய நபர் சரீரப் பிணையில் செல்ல அனுமதி

வவுனியா மாவட்ட ஊடகவியலாளரை தாக்கிய சந்தேகநபரை பிணையில் செல்ல வவுனியா நீதிமன்றம் நேற்று அனுமதித் துள்ளது.

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர் ஒருவர் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த போது அவரை தாக்கிய நபர் கைது செய்யப் பட்டு வவுனியா நீதவான் முன் முன்னிலைப் படுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக் குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மீண்டும் வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அடையாள அணி வகுப்பு இடம்பெற்ற நிலையில் ஊடகவியலாளர் தாக்கிய நபரை அடையாளம் காட்டியிருந்தார்.

இதனையடுத்து, சந்தேக நபரை 25 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்ததுடன், எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதிக்கு வழக் கிற்காக திகதி குறிக்கப்பட்டது.

இதேவேளை ஊடகவியலாளர் சார்பில் சட்டத்தரணி திருவருள் முன்னிலையாகிய துடன், சந்தேகநபர் சார்பில் பல சட்டத் தரணிகள் முன்னிலையாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2-281-250)

# சீருடைத்துணி கொள்வனவின் போது மேலதிகமாக பணம் அறவிடப்படுகின்றது

## பெற்றோர் விசனம்


பாடசாலை சீருடை வவுச்சருக்கான துணி கொள்வனவு செய்ய சென்றவர்களிடம் புடைவைக்கடை உரிமையாளர் 250 ரூபாவை அதிகமாக கேட்பதாக பெற்றோர் கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் கிளிநொச்சி கனகபுரம் வீதியில் உள்ள சீருடை துணி விற்பதற்காக வலயக்கல்வி திணைக்களத் தின் அனுமதி பெற்ற புடைவை கடைகளில் இடம்பெற்று வருகின்றன.

தரம் 4 இல் கல்வி கற்கும் மாண்வன் ஒருவன் சீருடை கொள்வனவுக்கென் சென்ற போது வவுச்சரில் உள்ள துணி அளவு தைப்பதற்கு காணாது எனவும், சேட் துணிக்கு 150ரூபாவும் காற்சட்டை துணிக்கு 100ரூபாவும் தந்தால் போதுமான அளவில் துணி தருவதாக கடை உரிமையாளர் தெரிவித்ததாக பெற்றோர் தெரிவித்தனர்.

அதேபோல் வேறொரு பெற்றோர் தெரிவிக்கையில்,தரம்3 இல் கற்கும் பெண் பிள்ளை சீருடை வவுச்சருக்கு துணி கொள்வனவுக்கென சென்ற வேளை தர மான துணி தருவதற்கு மேலதிகமாக 80ரூபா கேட்டதாகவும் குறிப்பிட்டார். இவ்வாறு வவுச்சருக்கான இலவச சீருடை துணி பெறுவதில் பெற்றோர் பல இடை யூறுகளை எதிர்கொள்வதாகவும், பணம் செலுத்த முடியாதவர்கள் திரும்பி செல் வதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் பாடசாலையில் சீரு டை துணி வழங்கப்படும் போது சீருடை தைப்பதற்கு போதுமானதாக இருந்ததாகவும், இவ்வாறான நெருக்கடிகளை சந்திக்கவில் லை எனவும பெற்றோர் குறிப்பிட்டனர்.இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் எடுக்குமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-300)



அனர்த்தம் ஒன்றின் போது கொல்லப்பட்ட முத் துக்குமார்-சிவபாலன் ஞாபகார்த்தமாக வட்டு இந்து வாலிபர் சங்கத்தி னால் முல்லைத்தீவு மாவட் டத்தில் பெற்றோரை இழந்த 40 மாணவர்களுக்கு நிதியுதவியும் கற்றல் உபகரணங்களும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் வைத்து அண்மையில் வழங்கப் பட்ட நிகழ்வின்போது.... (படம்:-மல்லாவிசெய்தியாளர்)

# வீதி புனரமைப்புப் பணியை துரிதகதியில் மேற்கொள்க

## பொதுமக்கள் கோரிக்கை



(உருத்திரபுரம்)

கிளிநொச்சி நகரப் புறத்திலுள்ள கணேச புரம் கிராமத்தையும் பிரதான வீதியையும் இணைக்கும் கணேசபுரம் வீதி புனரமைக் கப்படாமையால் சாதாரணமாக மோட்டார் சைக்கிளில் பயணிக்க் முடியாத அளவிற்கு வீதி சேதமடைந்துள்ளதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வீதியை கிளிநொச்சி,கணேசபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்க்ளும் மாண வர்கள்,விவசாயிகள் எனப்பலதரப்பினரும் பயணிக்கின்றனர்.

அத்துடன் கிளி/சென் திரேசா பெண்கள் கல்லூரி, கிளி/இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலை சீருடையுடன் தினமும் பய ணிக்கின்றனர்.

இவ்வீதியில் கால்நடை அபிவிருத்தித்திணைக்களம், கணக்காய்வுத் திணைக் களம்,கிளிநொச்சி கல்வி வள ர்ச்சி அறக்கட்டளை, விஞ்ஞா னக்கல்விநிலையம் என்பன அமைந்துள்ளன.

தமது அன்றாட தேவைகளின் நிமிர்த்தம் இவ்வீதி வழியாக பெருமளவிலான மக்கள் பயணித்து வருகின்றனர்.

யுத்தம் முடிவடைந்து மக்கள் மீள்குடியமா ந்த நிலையிலும் வீதிக்கான திருத்த வேலை கள் இதுவரை இடம்பெறவில்லை.

எனவே காலம் தாழ்த்தாது வீதியை செப்ப னிடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொது மக்கள், மாணவர்கள் வேண்டுகோள் விடுக்கின்ற னர். (2-298)

# ஆடை வடிவமைத்தல் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அனுசரணையுடன் வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் ஆடை வடிவ மைத்தலுக்கான தேசிய தொழில்தகைமை சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

தையல் பயிற்சியில் அனுபவம் பெற்ற 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இக்கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி ஜனவரி மாதம் 7ஆம் திகதி யாகும்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்பு வோர் 021 228 5069 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள் ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)

# எதிர்காலத்தில் மாகாண புனர்வாழ்வு அமைச்சின் பங்களிப்புடன் மீள்குடியேற்ற நடவடிக்கைகள்

## வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

**எதிர்காலத்தில் மாகாண புனர்வாழ்வு அமைச்சின் பங்களிப்புடனேயே மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இடம் பெறும் என வடக்கு மாகாண சுகாதார, புனர்வாழ்வு அமைச்சர் வைத்தியர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.**

வவுனியா மீள்குடியேற்ற கிராமங்களான கல்மடு. மறவங்குளம் ஆகிய இடங்களில் அந்திம கிரியைகள் செய்வதற்கான தகரப்பந்தல்களை அண்மையில் வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் மத்திய அரசு நேரடியாகவே வடக்கில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததாகக் குறிப்பிட்ட அவர்.




குறித்த கிராமங்கள் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் இந்தியா மற்றும் உள்ளக இடப்பெயர்விற்கு உள்ளானவர்களை குடியேற்றிய கிராமங்கள் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பலவருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட வீடுகள் தற்போது சேதமடைந்துள்ளதை அறிவதாகவும் இவற்றை மீள திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



இவ்வளவு காலமும் மத்திய அரசானது நேரடியாகவே மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததாகவும் குறிப்பாக 2013 ஆம்ஆண்டில் மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னரும் மகிந்த அரசு மாகாண சபையை புறக்கணித்தே மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அதிலும் குறிப்பிட்ட அரசியல்வாதிகள் தமது விருப்பு வெறுப்பிற்கேற்ற வகையில் பயனாளிகளை தெரிவுசெய்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது அரசியல் புறசூழல் சிறிதளவில் மாறியதாகவே கருதுவதாகக் குறிப்பிட்ட அவர். அண்மையில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் இனிவரும் காலங்களில் வடக்கு மாகாணசபையின் பங்களிப்புடனேயே மீள்குடியேற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பணித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்றம் தொடர்பான மாகாண கொள்கையொன்றை தற்போது தயாரித்து வருவதாகவும் இதற்கான ஆலோசனைகளை பொது அமைப்புகளிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும்பெறுவதற்கு உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த கால கசப்பான அனுபவங்களை புறந்தள்ளி புதியமீள்குடியேற்றக் கொள்கை வகுக்கப்படும் எனக் குறிப்பிட்ட அவர். இதன்மூலம் இன மதபேதமின்றி எதிர்காலத்தில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்துள்ளார். (2-281-250)

## இயங்காத நிலையிலுள்ள 120 சனசமூக நிலையங்களுக்கு மானியம்



வவுனியா மாவட்டத்தில் இயங்காத நிலையில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு மானியம் வழங்கும் நிகழ்வு நேற்று பிராந்திய உள்ளூராட்சி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. வவுனியா மாவட்டத்தில் இயங்காத நிலையில் உள்ள 120 சனசமூக நிலையங்களுக்கே பிராந்திய உள்ளூராட்சி திணைக்களத்தினால் மானியம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர்களின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் ஒவ்வொரு சனசமூக நிலையங்களுக்கும் பத்தாயிரம் ரூபாய் வீதம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில். வவுனிய நகர சபைக்குட்பட்ட 17. வவுனியா வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட 11, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபைக்குட்பட்ட 10. வெண்கல செட்டிகுளம் பிரதேச சபைக்குட்பட்ட 24. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட 58 சனசமூக நிலையங்களுக்கே இவ்வாறு மானியம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் பி.எம். ஏ.கே.குமார. வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராசா. ஜி.ரி.லிங்கநாதன், எம்.பி. நடராஜ். தர்மபால செனவிரட்ன. ஜெயதிலக. வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன். சனசமூக நிலைய பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (2-250-281)

### சீருடைத்துணி பணவவுச்சர்களுக்கு

## தரம் குறைந்த துணியும் உள்ளாடையும் வழங்கப்படுகின்றது

**பெற்றோர் விசனம்**

பாடசாலை மாணவர்களிற்கான சீருடைத் துணி பண வவுச்சர்களுக்கு முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பெண் பிள்ளைகளிற்கான 600 ரூபா பெறுமதியான வவுச்சருக்கு 450 ரூபா பெறுமதிக்குதரம்குறைந்த இரண்டரை மீற்றர் துணியும் மிகுதி 150 ரூபாவிற்கு ஒரு உள்ளாடை வழங்கப்படுவதாகவும் 500 ரூபா பெறுமதியான வவுச்சருக்கு 460 ரூபா பெறுமதிக்கு தரம் குறைந்த இரண்டரை மீற்றர் துணியும் மிகுதி 40 ரூபாவிற்கு இரண்டு கைக்குட்டைகள் வழங்கப்படுவதாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெறுமதியான வவுச்சர்களுக்கு தரமான துணிகளை கொள்வனவு செய்து ஏன் வழங்க முடியவில்லையெனவும் எனவும் குற்றம் சாட்டுகின்றனர். இதே நேரம் ஒரே கடையிலேயே ஒரே அளவைக் கொண்ட துணிகளிற்கு மாறுபட்ட விலைகளில் அதாவது 450ரூபாவிற்கும் 460ரூபாவிற்கும் சிட்டைகள் வழங்கப்படுவது ஏன் என புரியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (2-302)

## சிவில் பாதுகாப்பு குழுக்களை மீளவும் இயங்க வைக்க நடவடிக்கை எடுங்கள்

**பொதுமக்கள் கோரிக்கை**

(வற்றாப்பளை)

இயங்காத நிலையில் இருக்கும் சிவில் பாதுகாப்பு குழுக்களை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட 21 கிராமங்களைச் சேர்ந்த சிவில் பாதுகாப்பு குழுக்களில் அநேகமானவை இயங்காமல் இருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த குழுக்களை இயங்க வைக்க முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பாக தெரிய வருவதாவது, குறித்த குழுக்களின் செயற்பாடுகள் இயங்காத நிலை காரணமாக பின்னடைவை சந்தித்துள்ளன.

இதனால் பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான சமூக உறவுகள் இல்லாமல் போவதுடன் பொலிஸாருடன் இணைந்து பொதுமக்கள் செயற்பட முடியாமல் இருப்பதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேற்படி சிவில் பாதுகாப்புக் குழுக்களை வழிப்படுத்தும் கிராம அலுவலர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் அக்கறை இன்மையே இவ்வாறான குழுக்கள் இயங்காமல் இருக்க காரணம் எனவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் கவனமெடுத்து சிவில் பாதுகாப்புக் குழுக்களை சிறந்த முறையில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-310)



வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் அமைக்கப்பட்டுள்ள புதுப்பாலம் சேதம் அடைந்து காணப்படுவதால் அதனூடாக போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் விபத்துக்களை எதிர்கொள்கின்றன. சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் பாலத்தை புனரமைத்து போக்குவரத்தை இலகுபடுத்துவார்களா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (படம்:-எஸ்.சுரேந்திரா)

## வீட்டின் கூரையை பிரித்து உள்நுழைந்த திருடர்களுக்கு திருட்டு கைகூடவில்லை

வீட்டின் உரிமையாளர் வெளி மாவட்டத்திற்கு சென்றதை சாதகமாகப் பயன்படுத்தி கூரையைப் பிரித்து அதன் ஊடாக உள்நுழைந்து தமது கைவரிசையை திருடர்கள் காட்டியுள்ளனர். இச்சம்பவம் முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேசத்தில் முள்ளியவளை வடக்கு கிராமத் தில் கடந்த 27 ஆம் திகதி காலை 9 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பட்டப்பகலில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

வீட்டின் உரிமையாளர் வவுனியா சென்ற சமயம் பார்த்து கூரை பிரித்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டை சல்லடை போட்டு தேடியுள்ளனர்.

நகையோ பணமோ கிடைக்கப் பெறாமையால் அங்கிருந்த மடிக்கணனியொன்றை எடுத்து சென்று அதனை கையாளத் தெரியாத காரணத்தால் வீட்டின் அருகில் மறைவான இடத்தில் வைத்து விட்டு சென்றுள்ளனர். வீடு சேர்ந்த உரிமையாளர் ஓடு பிரிக்கப்பட்டதை அவதானித்து விட்டு முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்தார். அதன் பின்னர் வீட்டின் உரிமையாளர் அயலில் தேடிய போது மறைவான புதர் பகுதியில் போடப்பட்ட மடிக்கணனியை கண்டெடுத்தார்.

மறுநாள் பொலிஸார் கிளிநொச்சியிலிருந்து கொண்டு வரப்பட்ட விசேட மோப்ப நாயின் உதவியுடன் தேடிய போது அதே இடத்தைச் சேர்ந்த இளைஞன் கைது செய்யப்பட்டு முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டான். ஆனால் கைது செய்யப்பட்ட பிரஸ்தாப இளைஞன் திருடன் இல்லையெனவும் தம்முடன் சேர்ந்து தேடலில் ஈடுபட்டார் எனவும் அவ்வேளை மடிக் கணனியை கண்டுபிடித்த போது தனது கைகளினால் தொட்டார் என்றும் இதன் காரணத்தால் மோப்ப நாய் அவரை அடையாளம் காட்டியதாகவும் இளைஞரை விடுதலை செய்யுமாறும் பொலிஸாரிடம் வீட்டின் உரிமையாளர் கேட்டுக் கொண்டார்.

எனினும் மேலதிக விசாரணைக்காக இளைஞன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவு மாவட்ட நீதிமன் றில்பிரஸ்தாப நபர் நேற்றையதினம் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-310-301)

## வில்பத்துவில் முஸ்லிம் காலனியை உருவாக்குவதற்கு விடமாட்டோம்

(கொழும்பு)

வில்பத்துவில் முஸ்லிம் காலனி உருவாக விடமாட்டோம். இது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் என சங்க சம்மேளனத்தில் பொதுச் செயலாளர் சாகர தேரர் தெரிவித்தார்.

வல்பத்து விவகாரம் தொடர்பில் நேற்று முன்தினம் தனியார் தொலைக்காட்சி அலைவரிசையில் இடம்பெற்ற சலகுன நிகழ்வில் கலந்துகொண்டு அமைச்சர் ரிசாத் பதியுதீனுடன் விவாதிக்கும் போதே தேரர் இதனைத் தெரிவித்தார்.

குடியேற்றத்தின் போது ஒரு இனம் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படக் கூடாது. புலிகளின் 30 வருட கால யுத்தத்துக்கு காரணமாக அமைந்தது தனி இனம் அங்கு காணப்பட்டமையே ஆகும்.

இலங்கையில் ஐ.எஸ். ஐ.எஸ். இருப்பதாக புலனாய்வுத் துறை தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தப் பயங்கரவாதம் காலனிகளில் தான் முதலில் இடம்பிடிக்கும் எனவும் தேரர் சுட்டிக்காட்டினார். (இ-7)

### பல்லேகலே பிரதேசத்தில் நள்ளிரவு நிலநடுக்கம்


கண்டி, பல்லேகலே பிரதேசத்தில் நேற்று முன்தினம் நில நடுக்கம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு 10.16 அளவில் பல்லேகலே பிரதேசத்தில் நில அதிர்வு ஏற்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

நிலத்தின் கீழ் பாரிய பிளவடையும் சத்தம் கேட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த சத்தம் காரணமாக பிரதேச மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இந்த சத்தம் நில அதிர்வாக இருக்கலாம் என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)




# தமிழ் மக்கள் தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி பொறுப்புடன் செயற்படும்

## மனோ கணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

**முழு பாராளுமன்றத்தையும் அரசியல் நிர்ணய சபையாக மாற்றும் யோசனையை முன்வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனவரி ஒன்பதாம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார். இச்சூழ்நிலையில், புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் தேசிய செயற்பாட்டில் வடகிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் 16 லட்சம் தமிழ் மக்கள் தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி பொறுப்புணர்வுடன் செயற்பட்டு கொண்டிருக்கின்றது என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

கடந்த காலங்களின் தூரநோக்கற்ற அரசியல் அக்கறையீனம் காரணமாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வேளைகளில் மலையக தமிழ் மக்கள் உதாசீனப்படுத்தப்பட்ட வரலாற்றில் இருந்து மாறுபட்ட புதிய வரலாறு ஆகும்.

வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்திடும் மற்றும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்திடும் கட்சிகளுடன் இணைந்து உத்தேச அரசியலமைப்பில் நாம் பிரதிநிதித்துவம் செய்திடும் மக்களின் அபிலாஷைகளையும் உள்ளடக்கிடும் பணிகளை நாம் அமைதியாகவும், காத்திரமாகவும் செய்து வருகிறோம்.

இதற்கான ஆரம்ப கட்ட பிரதிநிதிகளை சம்பந்தப்பட்ட குழுக்களில் தற்சமயம் நாம் நியமித்துள்ளோம்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக அமைச்சரவை அனுமதியுடன் உருவாக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுவினால், எதிர்கால பாராளுமன்ற தேர்தல்முறை தொடர்பில் ஆராய்ந்து உரிய ஆலோசனைகளை சமர்ப்பிக்கும் நோக்கில், "தேர்தல் முறைமை குழு" நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவுக்கு சமூக செயற்பாட்டாளர் பி. முத்துலிங்கம் எம்மால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல் நாடு முழுக்க பயணித்து பொதுமக்களிடமும், சமூக அமைப்புகளிடமும் இருந்து, புதிய அரசியலமைப்பு தொடர்பில் கருத்துகளை உள்வாங்கி அவற்றை ஆராய்ந்து எமது அமைச்சரவை உபகுழுவுக்கு சமர்ப்பிக்கும் நோக்கில், "பொது பிரதிநிதித்துவ குழு" நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவுக்கு பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். விஜயசந்திரன் எம்மால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை தற்சமயம் ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறும் போது, நமது மக்களின் பிரதிநிதித்துவங்கள் நியாயமான முறையில் நிர்ணயிக்கப்படுவதை உறுதிப்படுத்தப்படும் முகமாக புதிய உள்ளூராட்சி வட்டார எல்லைகளை வகுத்து அவற்றை உள்ளூராட்சி வட்டார மீள் நிர்ணய குழுவுக்கு சமர்ப்பிக்க நாம் முடிவு செய்துள்ளோம்.

இது தொடர்பில் நமது கூட்டணியின் நிபுணர் குழு, கண்டி, நுவரெலியா, கொழும்பு, பதுளை, களுத்துறை, கேகாலை, மாத்தளை, கம்பஹா, புத்தளம், மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு பயணித்து கட்சி பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கருத்துகளை உள்வாங்கி பணிகளை முன்னெடுக்கும்.

தற்போது கண்டி, நுவரெலியா, மாத்தளை, பதுளை ஆகிய மாவட்ட பணிகளை முடிவுகக்கு கொண்டு வந்துள்ள இக்குழு ஏனைய மாவட்டங்களுக்கு எதிர்வரும் நாட்களில் பயணிக்க உள்ளது. இந்த நிபுணர் குழுவில், பி. முத்துலிங்கம், எஸ். விஜயசந்திரன், ஆர். ரமேஷ், வி. நந்தகுமார் ஆகியோரை நாம் நியமித்துள்ளோம்.

அதேவேளை, மலையக தமிழ் மக்கள் உள்ளடங்கலான வடக்கு கிழக்குக்கு வெளியே ஏழு மாகாணங்களில் வாழும் 16 இலட்சம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தொகுத்து அவற்றை உத்தேச புதிய அரசியலமைப்பில் உள்வாங்கச் செய்யும் முகமாக, ஒரு நிபுணர் குழுவை நியமிக்க முடிவு செய்துள்ளோம்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நிதியமைச்சர் ரவி பதவி விலக வேண்டும்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க அந்த பதவியில் இருந்து விலக வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

முன்நோக்கி சென்றுகொண்டிருந்த நாடு அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் வரவு செலவுத்திட்டம் காரணமாக மீண்டும் ஸ்திரமற்ற நிலைமைக்குள் சென்றுள்ளதாக சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் மருத்துவர் நவீன் டி சொய்சா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

மின்சார கார்களை இறக்குமதி செய்வோருக்கு அப்போது பிரச்சினை இருந்தது. நிதியமைச்சர் என்ற வகையில் எப்படியான தீர்மானங்களை எடுத்தார் என்பது எங்களுக்கு தெரியாது.

சுற்றாடல் அமைச்சு என்ற வகையில் தன்னிடம் கேட்காமல் நிதியமைச்சர் மின்சார கார் இறக்குமதிக்கு வரி விதிக்கும் யோசனையை முன்வைத்துள்ளதாக ஜனாதிபதி எம்மிடம் கூறிய விடயத்தையே ஊடகங்களிடம் கூறியிருந்தார்.

நாம் கூறிய விடயங்களில் எந்தளவு உண்மை இருக்கின்றது என்பதை ஜனாதிபதி தற்போது தெரிவித்து வருகிறார். வரவு செலவுத் திட்டத்தில்தான் இந்த பிரச்சினை கொண்டு வரப்பட்டது என்றும் ஜனாதிபதி கூறுகிறார். அப்படியானால் நாங்களும் அதனைத்தான் கூறினோம்.

அரச சேவை நன்றாக இயங்கி கொண்டிருந்தது. நாடும்நன்றாக சென்று கொண்டிருந்தது. நன்றாக சென்று கொண்டிருந்த நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்கு கொண்டு செல்ல எவராவது சூழ்ச்சி செய்திருந்தால், அதனை முதலில் நிதியமைச்சரே செய்தார்.

நிதியமைச்சரே அரசாங்கத்தின் ஸ்திரமற்ற நிலைமைக்கு மூல காரணகர்த்தா. அவருக்கு நிதியமைச்சராக பதவி வகிக்க தகுதியில்லை. அவர் பதவிவிலகுவது சிறந்தது எனவும் மருத்துவர் நவீன் டி சொய்சா தெரிவித்தார். (இ-7)

## கொம்பனைக் கொன்றவர் விளக்க மறியலில் வைப்பு

சக்தி வாய்ந்த மின் கம்பியொன்றில் மின்னோட்டத்தைப் பாய்ச்சி கொம்பன் யானையொன்றைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் ஜனவரி மாதம் 4ம் திகதி வரை விளக்கமறியலில் வைககுமாறு கெக்கிராவ மாவட்ட நீதிமன்ற நீதிபதி புத்தினி அமரசூரிய உத்தரவிட்டார்.

வலகம்பாகுவ, மரதன் கடவல பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டவராவார. இவரது சோளச் செய்கைக்குள் நுழைய முனைந்த போதே குறித்த கொம்பன் யானை இவரால் பொருத்தப்பட்டிருந்த மின் கம்பியில் சிக்கி உயிரிழந்ததாக வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

சுமார் ஒரு அடி நீளம் கொண்ட கொம்புகள் உள்ள இந்த யானை முப்பது (30) வயதுடையதாகும் இதன் உயரம் 12 அடியாகும். இந்த யானை இறந்த விடயம் கிராம வாசிகளுக்கு தெரியவரவே சந்தேக நபர் வெளியில் தென்படாமல் வீட்டுக்குள் ஒளிந்திருந்துள்ளார். குறித்த கொம்பன் யானையை திட்டமிட்டு கொன்றுவிட்டு அதன் கொம்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தேக நபர் திட்டமிட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

சந்தேகநபருடன்யானையை கொல்ல பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் மின்சாரம் பாய்ச்சப் பயன்படுத்தப்பட்ட கம்பி, வயர் என்பனவற்றையும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். (இ-7)



## புதிய நகர அபிவிருத்தியை எதிர்த்து அம்பாறையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

புதிய நகர அபிவிருத்தி திட்டத்தை எதிர்த்து அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கமும் விவசாயிகள் அமைப்புகளும் இணைந்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப்பேரணியை நடத்தினர். இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் உத்தேச புதிய நகர அபிவிருத்தி திட்டத்தினால் பாதிப்படையக்கூடிய பொதுமக்களும் பேரணியாகச் சென்று சம்பந்தப்பட்ட மாநகரசபை உத்தியோகத்தர்கள் பிரதேச செயலாளர்களிடம் மகஜரை கையளித்தனர். வாழ்வாதாரத்திட்டங்களை அழிக்கும் புதியநகரமய மாக்கல் திட்டத்தை எதிர்க்கிறோம்என்ற பதாகைகளை பேரணியில் கலந்து கொண்டோர் தாங்கியிருந்தனர். (இ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சித்த மருத்துவ அடிப்படையில் தொற்றா நோய்களுக்கும் உணவுப் பழக்கவழக்கத்திற்குமான தொடர்பு

சித்த மருத்துவ அடிப்படையில்

**உணவே மருந்து**
**மருந்தே உணவு**

எனும் கோட்பாட்டிற்கு அமைய ஒவ்வொருவரும் தமது உடல்வாகிற்கு (ஜாக்கையின் இலக்கணம்/ பிரக்கிருதி) அமைய தமது உணவு முறைகளை தெரிவு செய்து உண்ணும்போது பல தொற்றா நோய்களின் தாக்கத்திலிருந்து எம்மை விடுவித்துக் கொள்ளமுடியும்.

அத்துடன் பத்தியாபத்தியம் எனும் சிகிச்சை முறையும் சித்தமருத்துவத்துள் அடங்கியுள்ளது. பத்தியாபத்தியம் எனும் போது பத்தியம்+ அபத்தியம் என்பதாகும். இது நோய்க்கு, மருந்திற்கு என்ற முறையில் அடங்கும். நோயை மேலும் விருத்தி செய்யக்கூடியதும் அல்லது மருந்தை முறிக்கும் திறன் கொண்ட பதார்த்தங்களும் செய்கைகளும் நோயாளிக்கு அபத்தியம் எனவும் நோயை ஆற்றக்கூடியதும் மருந்தின் செயற்றிறனைக் கூட்டுவதுமானபதார்த்தங்கள், செய்கைகள் என்பன பத்தியம் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளன. இன்றைய தொற்றா நோய்களின் தாக்கத்தை இப்பத்திய முறைகள் பெரும்பாலும் கட்டுப்பாட்டினுள் வைத்துக் கொள்கின்றதென்பது கண்கூடு.

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு**
**அருந்தியது அற்றது போற்றி உணின்**


முன்னுண்டது அற்றதை அறிந்து மிகவும் புசித்து உடலிலே மாறுபாட்டைச் செய்யாத உணவுகளைத்தெரிவு செய்து உண்டுவருதலினால்அதாவது அளவாக உண் போமானால் நாம்மருந்துஉண்ணும்நிலை வாழ்க் கையில் ஏற்படாது.

**இலங்கணம் பரம் ஔடதம்** என்பதற்கமைய நீராகாரங்களுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. நீராகாரம் எனும்போது இலகுவில் சமிபாடடைந்து அகத்துறிஞ்சக்கூடிய கஞ்சி, கூழ் போன்றனதயாரித்துஉண்ண வேண்டும்.

மேலும் காய்கறிகளை பச்சையாக (மருந்தடிக்கப்படாத வீட்டுத் தோட்டங்களில் தயாரித்த) தயாரித்து உண்ணப்பழக வேண்டும். உதாரணமாக பானங்கள், சலாட், சூப், கஞ்சிவகைகளாகும்.

காய்கறி உணவுகளுக்கு முன்னுரிமை கொடுத்து மீன் உணவுகள் குறிப்பாக சிறிய மீன்களை பயன்படுத்தி எண்ணெயில் வேகவைத்த உணவுகளை முடியுமானவரை தவிர்த்துக்கொள்ளல்அவசியமாகும்.

ஆகவே எமது பாரம்பரிய உணவுக் கலாசாரங்களை மீள்நோக்கிப் பார்த்து கேழ்வரகுக்கூழ், வரகரிசிக்கஞ்சி, தினைக்கஞ்சி, இலைப்பிட்டு, இலைசேர்களிபோன்றஉணவு முறைகளை கடைப்பிடித்தல் அவசியமாகும்.




முடியுமானவரை காய்கறிகள், பழங்களை உடனுக்குடன் வாங்கிப் பயன்படுத்தல் வேண்டும். கீரைகளைப் பச்சடி, துவையல், மசியலாக பயன்படுத்த வேண்டும். கீரைகள் எதுவாகிலும் எண்ணெயில் பொரிக்கும்போது உயிர்ச் சத்து A சிதைவடையும்.

கூட்டாஞ்சோறு/ கூட்டுக் கலவைப் பொங்கல் இவ் உணவு முறையில் பல வகையான காய்கறி. இலை வகைகளைச் சேர்த்துக் கூட்டுக் கலவையாக தயாரிக்கும் போது போசணை மிக்கதாக அமைவதுடன் மட்டுமன்றி பெரும்பாலும்மஞ்சள்பூசணி, வாழைக்காய், கறிமுருங்கை போன்ற வற்றை தோல் நீக்காமல்சேர்க்கப்படுகிறது. தோலை நீக்கின் முக்கிய உணவுக் கூறுகளை வெளியேற்றுகின்றோம். தோல் நீக்காமல் சமைப்பது நல்லது.

தொற்றாத் தன்மை தொடர்பான நோய்த் தாக்கங்களுக்கு முதன்மை வகிப்பன,

1.பிழையான கலாசார முரண்பாடானதும் பருவகால மாற்றத்திற்கு அமையாததுமான உணவுப்பழக்கவழக்கம்.

2. உடற்பயிற்சியின்மை

3. அமைதியற்ற வாழ்வியல் முறை– இதனால் மன அழுத்தம் அதிகரிக்கின்றது .

எமது தின வாழ்க்கையை சரிவரத் திட்டமிட்டு முன்னெடுப்போமாகில் தொற்றாநோய்களிலிருந்து எம்மை விடுவித்துக்கொள்ள முடியாது. இதற்கு எமது மருத்துவத்தில் தின ஒழுக்கம், பருவகால ஒழுக்கங்கள் என பல நோயில்லா நெறிகள்பரிந்துரைக்கப்படுகின்றன. இவ் எளிய முறைகள் பின்வருவனவற்றுள்அடங்குகின்றன.

1.மிகஎளிமையானஉணவு முறைகள்

2. சுறுசுறுப்பான வாழ்க்கை முறை

நடைப்பயிற்சி உட்பட மன அமைதியை பேணிய வாழ்க்கை முறை. இதனுள் ஆன்மீக நலமேம்பாடு, சமய அனுட்டானங்கள், கூட்டுப் பஜனைகள், தியானம், மந்திர உச்சாடனங்கள், யோகாப் பயிற்சி முதலியனஅடங்குகின்றன.

எமது உணவு முறைகளில் சுவைக்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு நேர உணவிலும் அறு சுவைகளுள் கைப்பு சுவை அத்தியாவசியமாகச் சேர்க்கப்படுகிறது. உடற்கலங்களின் தேய்மாணங்களை புதுப்பிக்க கைப்புச் சுவையும் அவசியமாகும்.

பருப்பு வகை, தானியங்களை பயன்படுத்தும்போது முளைவிட்டு பயன்படுத்த வலியுறுத்தப்படுகின்றது. உதாரணமாகபாசிப்பயறு,உழுந்து, கடலை, துவரை போன்றவற்றை முளைவிட்டுப் பயன்படுத்தும்போது மேலும் அதன் ஊட்டம்மேம்படுவதோடல்லாமல் இலகுவில் சமிபாடடைய முடியும். இவ்வுணவுகளை கோதுடன் சேர்த்து உண்பதன் காரணமாக கனியுப்புக்கள், உயிர்ச்சத்துக்கள், நார்ப்பொருட்கள் அதிகூடியளவில் பெறமுடியும். மேலும் பத்திய உணவுகளாக சுரைக்காய், வெள்ளரிக்காய், பீர்க்கங்காய், புடோல் முதலானவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றில் குறைந்தளவு சக்தியுடன் அதிகளவு உயிர்ச் சத்துக்கள், கனியுப்புக்கள், நார்ப்பொருட்களைப் பெற முடியும். இவை தினம் சரிவரப் பாவிப்போமாகில் மலச்சிக்கல் ஏற்பட வாய்ப்பில்லை. அதேவேளை போதியளவு கனியுப்புக்கள், உயிர்ச்சத்துக்களும் கொண்டதாகும்.

பல பழங்களை கற்ப மூலிகைகளாகவும் ஒருநேர உணவாகவும் சிபாரிசு செய்யப்படுகின்றது. இவற்றுள் நெல்லிக்கனி, கொய்யா, எலுமிச்சை, தோடை, பப்பாசி, பேரீச்சம்பழம்முதலியனஅடங்குகின்றன. இவைகளைப் பாவிப்பதன் மூலம் சிறு அளவில் தேவையான போசணைக் கூறுகளை (Micro Nutrients) பெற முடியும்.

தானிய உணவுகள், பத்திய உணவு வகைகளாகக் கொள்ளப்படுகின்றன. தவிடு நீக்காத அரிசி, குரக்கன், வரகு, தினை மிகவும் உகந்த உணவுகளாகும். தானியங்களில் கூடுதலாக நார்ச்சத்து, காபோவைதரேற்று முதலியன தேவையான, போதியளவாக உள்ளதால் இவ்வுணவு இலேசாக ஜீரணிப்பதாக அமைகிறது. இவை நீரிழிவு வரக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ள வர்களுக்கு மாத்திரமல்ல எம் அனைவருக்கும் அதி சிறந்தவையே.

பொதுவாக நீரிழிவு நோயாளிகளுக்கு எள்ளுப்புண்ணாக்கு பல குடிநீர், வேறு மருந்துகளில் செகராஜசேகரம் நூல்களில் குறிப்பிடப்படுகின்றது. எள்ளு, எள்ளுப் புண்ணாக்கு உணவு முறைகளாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. எள்ளில் காணப்படும் கொழுப்பானது உறையாத தன்மையுடைய அதியுயர் கொழுப்பாகும். (Un saturated fat). எனவேதான் இதில் தயாரிக்கும் சகல உணவுகளும் (எள் ளுருண்டை, எள்ளுப்புண் ணாக்கு, எள்ளுத் துவையல்) சிறந்தவையாக அமைகின் றன. இதில் **உயிர்ச்சத்து A** இற்கு முன்னோடியான கரோட்டீன் போதியளவு காணப்படுகின்றது. அத்துடன் தயமின் 1010 மைக்ரோகிராமும் உண்டு.

எள்ளுப்புண்ணாக்கு துப்புரவாக தயாரிக்கப்படல் வேண்டும். எள்ளை நன்றாக கழுவிக் காய வைக்க வேண்டும். அதன் பின் துப்புரவாக துவைக்கப்பட்டு எண்ணெயைப்பெற்றபின் பெறப்படுபவையே எள்ளுப் புண்ணாக்கு என்போம். எள்ளுப் புண்ணாக்கில் 40-48% புரதம் உண்டு.

மேலும் தின ஒழுக்கத்தில் காலையில் கொதித்தாறிய நீர் அருந்துவதும் அதே வேளை உண்ணும்போது நீர் அருந்தவும் கூடாது எனக் கூறப்படுகிறது. உண்ணும் போது நீர் அருந்துவதனால் இரும்புச்சத்து முதலான நுண்ணிய போசணைக் கூறுகள் (Micro Nutrients) உறிஞ்சப்படுதல் தடைப்படுகிறது. பொதுவாக எமது பத்தியாபத்தியத்தில் உப்பு தவிர்க்கப்படல் வேண்டும் என குறிப்பிடப்படுகிறது.

உப்பை எமது தேவைக்கு அதிகமாக எடுக்கும் போது உப்பில் சோடியம் உண்டு. கூடியளவு சோடியம் எடுப்போமாகில் எமது உடலில் கூடியளவு நீர்த்தேக்கம் பெறுவதாகலாம். இந்நிலை இதயத்திற்கு பெரிய பாரமாக அமையும். உணவில் உப்பின் அடர்த்தி கூடுவதால் இலகுவில் அதி இரத்த அமுக்கம் ஏற்படலாம்.

உணவுகளைப் பதப்படுத்தி உண்ணுவதை தவிர்க்க வேண்டும். பதப்படுத்தி உண்பதால் உணவுக் கூறுகளில் அடங்கியுள்ள நார் மூடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. இதுவே இன்றைய பிரச்சினைக்குரிய அடிப்படைச்சிக்கலாகும். தாவர உணவில் உள்ள போசணைக் கூறுகள் இத்தடித்த நுண்மூடிக்குள் அடைத்து வைக்கப்படுவதால் இவ் உணவுக் கூறுகளை வாயினால் நன்றாக மென்று சாப்பிடுதல் அவசியமாகும். பின்பு இவை இரைப்பையிலுள்ள அமிலத்தாலும் உடைக்கப் பட்டு குடலால் அகத்துறிஞ் சக்கூடிய நிலைக்குமாற்றப்படுகின்றன.

எமது வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்துகிறோம் எனச் சிந்தித்து செயற்கையாக தயாரித்த உணவுகள், பானங்களை உண்பதை முழுமையாக தவிர்த்து வாழ்வியல் விழுமியங்களையும் அடிப்படையாகக் கொண்டு தினசரி உணவுப் பழக்க வழக்கங்களாக முன்னெடுத்துவரின் பல தொற்றா நோய்களின் தாக்கத்திலிருந்து எம்மை விடுவித்துக்கொள்ள முடியும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்



புங்குடுதீவில் நெல் வயல்களுக்குப் பாதுகாப்பு வேலிகளை அமைப்பதற்காக வடக்கு விவசாய அமைச்சு முட்கம்பிச் சுருள்களை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. புங்குடுதீவு கமநல சேவைகள் திணைக்கள அலுவலகத்தில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு முட்கம்பிச்சுருள்களை விவசாயிகளிடம் வழங்கி வைத்துள்ளார். இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# போகோஹராம் தீவிரவாதிகள் மீண்டும் வெறியாட்டம்

## 80 பேர் உயிரிழப்பு

**ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள மாய்துகுரி நகரில் போகோஹராம் தீவிரவாதிகள் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் 80 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டுள்ளனர். ரொக்கெட் மூலம் கையெறி குண்டுகளை வீசியும் பல்வேறு தற்கொலைப் படை வெடிகுண்டு மூலமும் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.**

தாக்குதலுக்கு உட்பட்ட மாய்துகுரி நகரம் போகோஹராம் தீவிரவாதிகளின் பிறப்பிடம் என்று சொல்லப்படுகிறது. 2009 ஆம் ஆண்டு நைஜிரியன் பாதுகாப்பு படையினர் நடத்திய தொடர் நடவடிக்கையில் 700 பேர் கொல்லப்பட்டனர். அதன்பிறகு அங்கு தீவிரவாதம் தழைத்தோங்கியது.

நைஜிரிய படைகளை இடைமறித்து 10 இற்கும் மேற்பட்ட தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டதாகவும், மேலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், தவாரி கிராமத்தில் தீவிரவாதிகள் நடத்திய காட்டுமிராண்டி தனமான துப்பாக்கிச் சூட்டுத்தாக்குதலில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர்.

இந்த பல்வேறு தாக்குதல்களில் 10 குழந்தைகள் உட்பட 80இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-7)




## ஐ.எஸ்.தீவிரவாத தலைவன் பக்தாதி இஸ்ரேலுக்குத் தாக்குதல் மிரட்டல்

ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் தலைவன அபுபக்கர் அல் பக்தாதி இஸரேலுக்கு தாக்குதல் மிரட்டல் விடுத்துள்ளான்.

ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் தலைவன் அபுபக்கர் அல்பக்தாதி. கடந்த 7 மாதங்களுக்கு முன்பு அமெரிக்கா நடத்திய குண்டுவீச்சில் சிக்கி படுகாயம் அடைந்தான். அதை தொடர்ந்து தலைமறைவாக இருந்து சிகிச்சை பெற்று வந்தான்.

இந்த நிலையில் அவனது பேச்சு அடங்கிய காணொலி ஒன்று இணையத்தளத்தில் வெளியானது. அதில், ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக குண்டுவீச்சு நடத்து ம் சவுதி அரேபியாவை கடுமையாக சாடியுள்ளான். அதற்கு கண்டனம் தெரிவித்து அந்நாட்டு அரச குடும்பத்துக்கு எதிராக பொது மக்கள் புரட்சி செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளான்.

அதே நேரத்தில் அவன் இஸ்ரேலுக்கு எதிராக தாக்குதல் நடத்தப் போவதாக மிரட்டல் விடுத்துள்ளான். பாலஸ்தீனத்தை ஐ.எஸ். இயக்கம் ஒருபோதும் மறக்காது. கடவுள் அனுமதியுடன் மிக விரைவில் உங்கள் மீது (இஸ்ரேல் மீது) தாக்குதல் நடத்துவோம். அதற்காக உங்களை நாளுக்கு நாள் நெருங்கிக்கொண்டே இருக்கிறோம் என்று பேசியுள்ளான். (இ-7)

## எபோலா வைரஸ் ஒழிக்கப்பட்ட நாடாக கினியா அறிவிக்கப்பட்டது

எபோலா வைரஸ்க்கு சுமார் இரண்டாயிரத்து 500 உயிர்களை பறிகொடுத்த பின்னர் எபோலா வைரஸ் முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட நாடாக கினியா நாட்டை ஐ.நா. சுகாதார முகமை அறிவித்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளான நைஜரியா, கினியா, சியாராலியோன் உள்ளிட்ட நாடுகளில் எபோலா என்ற உயிர்க்கொல்லி நோய் கடந்த இரண்டாண்டுகளாக ஆட்டிப்படைத்தது. இந்த நோய்க்கு இதுவரை 11 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பலியாகியுள்ளனர். இதில் கினியாவில் மட்டும் 2,500 பேர் எபோலாவால் உயிரிழந்துள்ளனர். பெற்றோரை இழந்து சுமார் 6,200 குழந்தைகள அநாதைகளாகியுள்ளனர்.

இந்நிலையில், எபோலா வைரஸ முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட நாடாக கினியா நாட்டை ஐ.நா. சுகாதார முகமை அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பை தலைநகர் கோனாக்ரியில் வாழும் மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர். கடைசியாக எபோலாவுக்கு பலியானவர் அல்லது கடைசியாக எபோலா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டவர் தொடர்பான தகவல்கள் தொடர்ந்து 42 நாட்களுக்கு வராவிட்டால் அந் நாட்டில் இருந்து எபோலா நோய் தொற்று ஒழிந்துவிட்டதாக ஐ.நா. சுகாதார முகமை மதிப்பிடுகின்றது.

அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் தான் தற்போது, கினியாவை எபோலா வைரஸ் முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட நாடாக ஐ.நா. சுகாதார முகமை அறிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அகதிக்குழந்தைகளுக்காக 8500 ஆசிரியர்கள் தெரிவு

ஜேர்மனியில் அகதிக்குழந்தைகளுக்கு பாடம் நடத்துவதற்காக 8 ஆயிரத்து 500 ஆசிரியர்கள் உலக அளவில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

போர் மற்றும் வறுமையின் காரணமாக ஜேர்மனியில் உள்ள ஒரு இலட்சத்து 96 ஆயிரம் அகதிக் குழந்தைகளுக்கு 8,264 சிறப்பு வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்நிலையில், அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதால் உலக அளவில் 8,500 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜேர்மனியின் கல்வித்துறை வெளியிட்டுள்ள தகவலில், 2015 ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 25 ஆயிரம் படிக்கும் வயதுடைய குழந்தைகள் ஜேர்மனிக்குள் குடிபெயர்ந்தனர். இது இரண்டாம் உலகப்போரை விட மிகமோசமானதாகும்.


மேலும், 2015 ஆம் ஆண்டில் ஒரு மில்லியன் புகலிடக்கோரிக்கையாளர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர்களுக்காக சேவைகளை வழங்கு வதற்காக ஜேர்மன் அரசு தயாராக இருக்கிறது.

மேலும் பாடசாலைகள் மற்றும் கல்வி நிர்வாகங்கள் புதிய சவாலை ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் கல்வித்துறை தலைமை அதிகாரி Brunhild Kurth கூறியுள்ளார்.

ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் Heinz-Peter Meidinger இது குறித்து கூறுகையில், இனி வரவிருக்கும் புதிய குழந்தைகளுக்காக 20 ஆயிரம் ஆசிரியர்கள் எங்களுக்கு தேவைப்படுகிறார்கள், வருகின்ற கோடை காலத்திற்குள் நாங்கள் அதனை நிவர்த்தி செய்து விடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வெள்ளப் பாதிப்புக்களை பார்வையிட்டார் கமரூன்





இங்கிலாந்தில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால் பல நகரங்களில் வெள்ளம் சூழ்ந்தது. இந்த நிலையில் கிறிஸ்மஸ் அன்று விடாமல் ஒரு நாள் முழுவதும் மழை கொட்டியது. ஒரு மாதம் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில் கொட்டித் தீர்த்தது.

இதன் காரணமாக வடக்கு இங்கிலாந்தில் உள்ள ஓயூஸ், போஸ், ஏர், சால்டர், ரிப்பிள் உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. ஆற்றின் கரைகள் உடைந்து ஊருக்குள் வெள்ளம் புகுந்தது. இதனால் லங்கான ஷ்யா, யார்க் ஷையர் மான் செஸ்டர் உள்ளிட்ட நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

இதனால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து, தகவல் தொடர்பு, மின்சாரம் உள்ளிட்ட வசதிகள் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளன. ஆற்றின் கரையோரம் உள்ள ஆயிரக்கணக்கான வீடுகள் தண்ணீரில் மிதக்கின்றன.

இதனால் அங்கிருந்த பொதுமக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப்பணி தீவிரமாக நடக்கிறது.

இதற்கிடையே வெள்ளம் பாதித்த வடக்கு இங்கிலாந்து பகுதிக்கு நேற்று முன்தினம் டேவிட் கமரூன் அதிரடி பயணம் மேற்கொண்டார். அங்கு தண்ணீரில் இறங்கி நடந்து சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

இந்த வெள்ளம் எதிர்பாராது இருந்தாலும் தனது அரசு இதை சமாளித்து மக்களை காப்பாற்றும் என கமரூன் உறுதியளித்தார்.

மீட்புப்பணியல் நூற்றுக் கணக்கான இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மழை வெள்ளத்தில் இறங்கி சென்ற பிரதமர் கமரூன் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர்களை சந்தித்து அவர்களுக்கு பாராட்டு தெரிவித்தார். (இ-7)


# 2015 இல் அதிகம் பேசப்பட்ட விடயங்கள்

இன்னும் சில தினங்களில் 2016ஆம் ஆண்டை வரவேற்க காத்திருக்கும் நிலை யில், 2015இல் சமூக வலைத்தளங்களில் அதிகம் பேசப்பட்ட விடயங்கள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன.

### உலகை உறைய வைத்த அயிலானி


அய்லான் என்ற சிறுவன் அகதிகள் சென்ற கப்பலில் இருந்து தவறி விழுந்து பலியானான்.

அது தொடர்பான புகைப்படம் உலகின் மனச்சாட்சியையே உலுக்கியது. இந்த புகைப்படம் உலகம் முழுவதும் பலரால் பகிரப்பட்டதை அடுத்து பலரும் இரத்தக் கண்ணீர் வடித்தனர்.



### அசத்தல் மார்க் ஜீக்கெர்பெர்க

இந்தியாவின் தலைநகர் டில்லிக்கு கடந்த ஒக்டோபர் மாதம் வருகை தந்த பேஸ்புக் நிறுவுநர் மார்க் ஜீக்கெர்பெர்க் ஐஐடி மாணவர்களுடன் கலந்துரையாடினார், தனது வருகையை பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்ட மார்க் தாஜ்மஹாலில் எடுத்த புகைப்படத்தை பகிர்ந்திருந்தது குறிப்பிடத்தக்கது.




### பதற வைத்த பாரீஸ் தாக்குதல

கடந்தாண்டு ஐ.எஸ். அமைப்பின் அட்டூழியங்கள் அதிகரித்த நிலையில், ஐரோப்பிய நாடுகளை குறிவைத்து தாக்கின. குறிப்பாக பிரான்ஸ் மீதான திடீர் தாக்குதல் உலகையே உலுக்கியது. இதனையடுத்து ஐ.எஸ். அமைப்பின் மீது பிரான்ஸ் தாக்குதலை தீவிரப்படுத்தியது.



### ஒரு நிமிட மிஸ் யுனிவர்ஸ் 2015

2015ஆம் ஆண்டுக்கான மிஸ் யுனிவர்ஸ் அழகி போட்டியில முதலில் கொலம்பியா நாட்டைச் சேர்ந்த போட்டியாளர் தான் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு மிஸ் யுனிவர்ஸ் கிரீடம் சூட்டப்பட்டது. ஆனால் சில நிமிடங்களில் தான் அறிவிப்பாளர் செய்த தவறு தெரியவந்தது. உண்மையல் மிஸ் யுனிவர் ஸாக பிலிப்பைன்ஸ் நாட்டு பெண் தான் வெற்றி பெற்றுள் ளார். இதையடுத்து தன் தவறுக்காக அறிவிப்பாளர் வருத்தம் தெரிவித்தார். பின்னர் கொலம்பியா நாட்டு பெண்ணுக்கு சூட்டப்பட்ட கிரீடம் கழற்றப்பட்டு பிலிப்பைன்ஸ் நாட்டு பெண்ணுக்கு சூட்டப்பட்டது.




### ஏமாற்றிய வோல்க்ஸ்வேகன்

வோல்க்ஸ்வேகன் கார் நிறுவனம் சொப்ட்வேர் ஒன்றை பயன்படுத்தி எமிஷன் அளவுகளை ஏமாற்றி வந்ததை அமெரிக்காவில் வாழ்ந்து வரும் அரவிந்த் திருவேங்கடம் என்ற தமிழர்தான் முதன்முதலில் உலகறியச் செய்தார். இதையடுத்து அமெரிக்கா மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளிலும் இந்த ஏமாற்று வேலை நடந்தது அம்பலமானது.



### செவ்வாயில் பிரமிட்

செவ்வாய்க்கிரகத்தில் ஏற்கனவே பெண்மணி ஒருவர் நிற்பது போல் சிலை உள்ளதாகவும் மிகப்பெரிய எலி போன்ற உருவம் தெரிந்ததாகவும் பல புகைப்படங்கள் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் கடந்த வருடம் பிரமிட் உள்ளது போன்று ஒரு புகைப்படம் வெளியாகியது.



### நிர்பயா என்கிற ஜோதிசிங்

இந்தியாவையே உலுக்கிய 2012ஆம் ஆண்டு பேருந்தில் நடந்த கூட்டு பலாத்கார வழக்கில் பலியான 'நிர்பயா'வின் நிஜப்பெயர் ஜோதிசிங் தான் என அப்பெண்ணின் பெற்றோர் ஊடகங்களுக்கு தெரிவித்தனர். அந்த வழக்கில் தொடர்புடைய இளம் குற்றவாளி இந்த ஆண்டு விடுதலை அடைந்தது குறிப்பிடத்தக்கது.




### நோ ஷேவ் நவம்பர்

கடந்த நவம்பர் மாதம் "No shave november" என்ற விடயம் உலகம் முழுவதும் சமூக வலைத்தளங்களில் ட்ரெண்டாக இருந்தது. ஆண்கள் அந்த மாதம் முழுவதும் ஷேவ் செய்யாமல் தாடியுடன் திரிந்தனர். "No shave november" என்பதன் நோக்கம்: புற்று நோயால் பாதிக்கப்படுவர்கள் சிகிச்சையின் போது முடியை இழப்பதை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அந்த மாதம் முழுவதும் ஷேவ் செய்யாமல் இருப்பதால் சேமிக்கப்படும் பணத்தினை புற்று நோயால் பாதித்தவர்களுக்கு வழங்குவதே நோக்கமாகும்.




### கலாம் மறைவு

மக்களின் குடியரசுத்தலைவர் என அழைக்கப்பட்ட அப்துல் கலாம் இறந்த பின் அவரது உடல் இராமேஸ்வரத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அப்போது அவரது உடல் எடுத்து செல்லப்பட்ட வாகனத்தின் பின்னால், பல திசைகளில் இருந்தும் வந்த எண்ணற்ற இளைஞர்கள் பேரணியாக சென்றது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.



### இளவரசி சார்லோட் எலிசபெத் டயானா

மே மாதம் 2ஆம் திகதி இங்கிலாந்து அரச குடும்பத்தில் குட்டி இளவரசி பிறந்தார். குட்டி இளவரசிக்கு சார்லோட் எலிசபெத் டயானா என அரச குடும்பத்தினர் பெயர் சூட்டியுள்ளனர்.



### கேலிக்குள்ளான் டொனால்ட் டிரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் ஆட்சிக்காலம் முடியவுள்ள நிலையில், எதிர்வரும் 2016ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட டொனால்ட் ட்ரம்ப் முடிவெடுத்துள்ளார். டொனால்ட் ட்ரம்பையும் அவரது முடியையும் அமெரிக்கர்கள் கிண்டல் செய்து இணையத்தில் அதிகளவில் பரப்பி வந்தனர்.




### KFC இல் எலிக்கறியா?

உலகப்புகழ்பெற்ற உணவு நிறுவனமான KFC. எலிக்கறியை தனக்கு அளித்து விட்டதாக ஒருவர் புகார் அளித்ததை அடுத்து உலகம் முழுவதும் இந்த செய்தி பரவியது. ஆனால் அது பொய் என கூறிய KFC. பின்னர் அந்த நபர் வாங்கியதாக கூறிய கறியை சோதனை செய்து அது சிக்கன் தான் என அறிக்கை வெளியிட்டது.




### சாதனை படைத்த ஐபோன் 6S, ஐபோன் 6S Plரள

கடந்த செப்டெம்பர் மாதம் வெளியான ஐபோன் 6S, ஐபோன் 6S Plus மொடல் போன்கள் வெளியிடப்பட்ட மூன்றே நாட்களில் சுமார் 13 மில்லியன் என்ற எண்ணிக்கையையும் தாண்டி விற்பனையானதாக அப்பிள் தெரிவித்தது.



### த டிரெஸ்

பெப்ரவரி 2015ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட த டிரெஸ் எனப்படும் ஒரு குறிப்பிட்ட ஆடை சிலரது கண்களுக்கு கறுப்பும் நீலமுமாகவும், சிலரது கண்களுக்கு வெண்மையும் பொன்னிறமாகவும் தென்பட்டது. இந்த விடயம் இணையத்தில் அதிகளவில் உலாவந்தது.






# புத்தியா சொல்றே?

கணேஷ் ஆர்வமாக புத்தகம் படித்துக் கொண்டி ருந்தான். அப்போது அவன் நண்பன் ராஜா அங்கு வந்து அவனருகில் அமர்ந் தான். என்ன கணேஷ்! ரொம்ப மும்முரமா படிச்சிக்கிட்டு இருக்கே? அரையாண்டு தேர்வுகள் நெருங்கிடுச்சே! அதுக்கு தயார் ஆகிறாயா? என்று வினவினான் ராஜா.

ஆமாண்டா! அதுக்குத் தான் முழுவீச்சில் படிச்சிக் கிட்டு இருக்கேன்! இந்த முறை உன்னை விட அதிக மதிப்பெண் வாங்கிடனும்னு உறுதியா இருக்கேன்!

ரொம்ப சந்தோஷம்டா! படிப்பில இப்படி போட்டி இருந்தாத்தான் நல்லா படிக்கணுங்கிற உத்வேகம் வரும். யாரு முதல் மதிப் பெண் எடுக்கிறதுன்னு ஒரு சவால் இருக்கும். ஆமா! நீ எந்த சப்ஜெக்ட் இப்ப படிச்சிக் கிட்டு இருக்கே? நானும் ரிவிசன் பண்ண உதவ றேனே! என்றான் ராஜா.

கணேஷ் ராஜாவை மிதப்புடன் பார்த்தான். ராஜா! நீ நினைக்கிற மாதிரி நான் இப்ப எந்த சப்ஜெக்டையும் படிக்கலை ஆனா அதை விட முக்கியமான ஒண்ணை படிச்சிட்டு இருக்கேன்!

அப்படி என்ன முக்கியமா னது அது? இதுதான்! என்று கணேஷ் நீட்டிய புத்தகத்தை வாங்கி பார்த்தான் ராஜா! அது பரட்சையில் முதல் மதிப் பெண் பெறுவது எப்படி? என்ற புத்தகம். அதை பார்த்துவிட்டு ராஜாவிற்கு அழுவதா சிரிப் பதா என்று தெரிய வில்லை! ஏன் கணேஷ்! இந்த புத்த கத்தை படிச்சா மதிப்பெண் தானா வந்து விடுமா? நம்ம ளோட முயற்சியும் உழைப் பும் இருந்தா எளிதா முதல் மதிப்பெண் வாங்கிடலாம். அதை விட்டுட்டு இப்படி இந்த புத்தகத்தை போய் நம்புறியே?

டேய்! உனக்கு நான் முதல் மதிப்பெண் வாங்கிடு வேனனு பொறாமை! அதனால தான் இப்படி சொல்றே?

கணேஷ்! என்னைப் போய் இப்படி சொல்லிட்டியே!



நீ முதல் மதிப்பெண் வாங் கினா! நான் தான் அதிக சந்தோஷம் அடைவேன். ஆனா முதல் மதிப்பெண் பெற நீ தேர்ந்தெடுக்கிற வழி சரியில்லை! இந்த புத்த கத்தை படிக்கிற நேரத்துல நீ நம்ம பாடபுத்தகத்தை ஒழுங்கா படிச்சாலே நல்ல மார்க் வாங்கிடலாம்! இதையே தான் இந்த புத்தகதிலேயும் சொல்லி இருப்பாங்க! முதல்ல இதை மூடி வைச்சிட்டு பாடபுத்தகத்தை படி!

பெரிய புத்தரு இவரு! புத்தி சொல்ல வந்துட்டாரு! உன்கிட்ட சொன்னேன் பாரு! என்னை அழச்சிக்கிணும்! நீ உன் வழியை பாரு! நான் என் வழியை பார்க்கிறேன்! என்றான் கோபமாக கணேஷ்.

இவனை திருத்த முடியாது என்று அங்கிருந்து மௌனமாக அகன்றான் ராஜா. கணேஷ் மீண்டும் புத்தகத்தில் ஆழ்ந்தான்.

அரையாண்டுத் தேர்வுகள் முடிந்து திருத்திய விடைத்தாள்களுடன் ஆசி ரியர் உள்ளே நுழைந்தார். கணேஷ் மிகவும் ஆர்வமாக இருந்தான். எப்படியும் ராஜாவை முந்தி விட வேண்டும் என்று இருந்தான் அவன். ஆனால் அந்தோ பரிதாபம்! சென்ற தேர்வை விட இந்த தேர்வில் அனைத்து பாடங்களிலும் ஐந்து முதல் பத்து மதிப்பெண்கள் குறைவாக வாங்கி இருந் தான். வழக்கம் போல ராஜாவே வகுப்பில் முதல் மாணவனாக இருந்தான்.

கண்ணீருடன் கணேஷ் ராஜாவிடம் வந்தான். ராஜா! நீ சொன்னமாதிரியே நடந்து போச்சு! அந்த புத்தகம் சுத்த வேஸ்ட்! அதை படிச்சி மார்க் குறைஞ்சு போனதுதான் மிச்சம் என்றான்.

கணேஷ்! குறை அந்த புத்தகத்தில இல்லை! உன் கிட்டதான்! அந்த புத்தகத்தில மார்க் எடுக்கிற வழி முறைகளை சொல்லி இருப் பாங்க! அந்த புத்தகத்தை படிச்ச நீ அந்த வழி முறை களை பின்பற்ற தவறிட்டே! இதையேதான் நானும் சொன்னேன். அன்றைய பாடங்களை அன்றே படித்து தேர்வு சமயத்தில் மீண்டும் ரிவிசன் செய்தாலே போதும் மார்க்கை அள்ளிடலாம். ஆனா நீ அவ்வாறு செய் வதில்லை! தேர்வு சமயத்தில் தான் படிப்பாய்! இந்த முறை அதுவும் சரியாக படிக்க வில்லை! அந்த அதிக மதிப்பெண் பெறுவது எப்படி என்ற புத்தகத்தையே படித் துக்கிட்டு இருந்தாய். நம்முடைய முயற்சிதான் நமக்கு வெற்றி தரும். முயற்சியே இல்லாமல் வெற்றி தேடி வரும் என்று காத்திருந்தால் தோல்விதான் பரிசாக கிடைக்கும் என்றான் ராஜா.

உண்மைதான் ராஜா! இதை நான் உணராம உன்னையும் தப்பா பேசிட்டேன்! என்னை மன்னிச்சிருடா!

நண்பர்களுக்குள் எதற்கு கணேஷ் மன்னிப்பு! இனியாவது அன்றாடம் பாடங்களை படித்து இறுதி தேர்வில் என்னை முந்திக் காட்டு! அதுவே நீ எனக்கு செய்யும் மன்னிப்பு என்றான் கணேஷ்.

நிச்சயமா ராஜா! கண்டிப்பாக இனிமே நான் அன்றாட பாடங்களை அன்றாடம் படித்து அடுத்த தேர்வில் முதலிடம் வருவேன் என்றான் கணேஷ்.




1853 - ஐக்கிய அமெரிக்கா தொடருந்து போக்குவரத்துப் பாதை அமைப்பதற்காக மெக்சிக்கோவிடம் இருந்து 76,770 கிமீ. பரப்பளவு கொண்ட காட்சென் என்ற இடத்தை 10 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வாங்கியது.
1862 - வட கரொலைனாவில் ஐக்கிய அமெரிக்காவின் மொனிட்டர் என்ற கப்பல் மூழ்கியது.
1870 - ஸ்பெயின் பிரதமர் ஜுவான் பிறிம் சுட்டுக் கொல்லப்பட்டார்.
1880 - டிரான்ஸ்வால் குடியரசு ஆகியது.
1896 - பிலிப்பைன்சின் தேசியவாதி ஜோசே ரிசால் மணிலாவில் ஸ்பானிய ஆதிக்கவாதிகளால் மரணதண்டனைக்குட்படுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார். இந்நாள் பிலிப்பைன்சில் ரிசால் நாள் என்ற பெயரில் விடுமுறை நாளாகும்.
1903 - சிக்காகோவில் நாடக அரங்கு ஒன்றின் இடம்பெற்ற தீயினால் 600 பேர் இறந்தனர்.
1906 - அகில இந்திய முஸ்லிம் லீக் கட்சி டாக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.
1922 - சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம் உருவாக்கப்பட்டது.
1924 - யாழ்ப்பாணம் வாலிபர் சங்க மாநாட்டில் சாதி ஒழிப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.
1924 - பல நாள்மீன்பேரடைகளின் இருப்பு பற்றி எட்வின் ஹபிள் அறிவித்தார்.
1941 - மகாத்மா காந்தி காங்கிரஸ் தலைமைப் பதவி யிலிருந்து விலகினார்.
1943 - சுபாஷ் சந்திர போஸ் அந்தமான் தீவுகளின் போர்ட் பிளையர் நகரில் இந்திய விடுதலைக் கொடியை ஏற்றினார்.
1947 - ருமேனியாவின் மன்னர் மைக்கல் சோவியத் ஆதரவு கம்யூனிச அரசால் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
1949 - இந்தியா சீனாவை அங்கீகரித்தது.
1953 - உலகின் முதலாவது NTSC வர்ணத் தொலைக் காட்சிப் பெட்டி கூ1,175.00 விலைக்கு விற்பனைக்கு விடப்பட்டது.
1965 - பேர்டினண்ட் மார்க்கொஸ் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியானார்.
1972 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்கா வடக்கு வியட்நாம மீதான குண்டுத்தாக்குதல்களை இடைநிறுத்தியது.
1993 - இஸ்ரேலும் வத்திக்கானும் தூதரக உறவுகளை ஏற்படுத்தின.
1996 - அஸ்ஸாம் மாநிலத்தில் பயணிகள் தொடருந்து ஒன்றில் போடோ தீவிரவாதிகளால் வைக்கப் பட்ட குண்டு வெடித்ததில் 26 பேர் கொல்லப்பட்டனர்.
1997 - அலஜீரியாவில் நான்கு ஊர்களில் இடம்பெற்ற வன் முறைகளில் மொத்தம் 400 பேர் கொல்லப்பட்டனர்.
2000 - பிலிபபைன்சின் தலைநகர் மணிலாவில் இடம்பெற்ற பல தொடர் குண்டுவெடிப்புகளில் 22 பேர் கொல்லப்பட்டு நூற்றுக்கணக்கானோர படுகாயமடைந்தனர்.
2004 - ஆர்ஜென்டீனாவின் புவனஸ் அயரெஸ் நகரில் இரவு விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீயினால் 194 பேர் கொல்லப்பட்டனர்.
2006 - ஸ்பெயினின் தலைநகர் மாட்ரிட் நகரில் அனைத் துலக விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 2 பேர் கொல்லப்பட்டனர்.
2006 - முன்னாள் ஈராக் அதிபர் சதாம் உசேன் தூக்கி லிடப்பட்டார்.
2006 - நடுக்கடலில் ஏற்பட்ட புயலில் 850 பயணிகளு டன் சென்ற செனோபதி நுசந்தாரா என்ற இந்தோனேசியக் கப்பல் கடலில் மூழ்கியது.
2006 - முல்லைத்தீவு மாவட்ட கத்தோலிக்க ஆலயத்தால், கடல்கோளால் பாதிக்கப்பட்டவர்களை பராமரிக் கும ஆண், பெண் விடுதிகள் மீதும் பொதுமக்கள் வீடுகள் மீதும் விமானத் தாக்குதல் நடைபெற்ற தில் ஐந்து சிறுவர்கள் படுகாயமடைந்தனர்.

**பிறப்புகள்**

1865 - றூடியார்ட் கிப்லிங், இந்தியாவில் பிறந்த பிரித்தானிய எழுததாளர், கவிஞர், நோபல் விருதாளர் (இ. 1936)
1879 - இரமண மகரிஷி, தமிழகத்தைச் சேர்ந்த ஆன் மீகவாதி (இ. 1950)
1975 - டைகர் வூட்ஸ், கோல்ஃப் விளையாட்டு வீரர்
1984 - லெப்ரான் ஜேம்ஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புகள்**

1691 - ராபர்ட் பொயில், அறிவியலாளர் (பி. 1627)
1789 - இராயரகுநாத தொண்டைமான், புதுக்கோட்டை சமஸ்தான மன்னர் (பி. 1738)
1944 - ரொமாயின் ரோலாண்ட், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1866)
1947 - ஆல்பிரட் நொர்த் வொய்ட்ஹெட், பிரித்தானியக் கணிதவியலாளர் (பி. 1861)
1968 - ட்றிகுவே லீ, நோர்வேயின் அரசியல்வாதி (பி. 1896)
1988 - இசாமு நொகுச்சி, சிற்ப, கட்டடக் கலைஞர் (பி. 1904)
2013 - கோ. நம்மாழ்வார், இயற்கை ஆர்வலர் (பி. 1938)

# அவன்கார்ட் கப்பல் குறித்த விசாரணை அறிக்கை தயார்

(கொழும்பு)

அவன்கார்ட் ஆயுத கப்பல் குறித்த விசாரணை அறிக்கைகள் தயார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னதாக காலி கடற்பரப்பிற்கு 12 கடல் மைல் தொலைவில் அவன்கார்ட் நிறுவனத்திற்கு சொந்தமான ஆயுதக் கப்பலொன்று மீட்கப்பட்டிருந்தது.

இந்த ஆயுதக்கப்பல்குறித்து ஆராய இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியிருந்தனர்.

இந்த இரண்டு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அறிக்கைகள் தயார் நிலையில் இருப்பதாகவும் விரைவில் அவை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவன் கார்ட் ஆயுதக் கப்பல் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்காக போலியான தகவல்களை வழங்கியிருந்தது.

கடற்படையினர் குறித்த கப்பலை சோதனையிட்ட போது போலத் தகவல்களை வழங்கியமை தெரிய வந்தது.


பொலிஸ்மா அதிபரின் உத்தரவிற்கு அமைய புலனாய்வுப் பிரிவினர் இந்தக் கப்பல் தொடர்பில் விசாரணை நடத்தியிருந்தனர்.

வெகு விரைவில் இரண்டு விசாரணை அறிக்கைகளும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளன. (இ-7)

# ஹிருணிகாவிடம் 500 மில்லியன் நட்டஈடு கோருகிறார் கம்மன்பில

(கொழும்பு)

**தனக்கு எதிராக அவதூறான செய்திகளை பரப்பியதாகக் கூறி பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவிடம் ரூபா 500 மில்லியன் இழப்பீடு கோரி வழக்கு தொடுக்க விருப்பதாக பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நபர் ஒருவரை கடத்தியமை தொடர்பில் ஹிருணிகா பிரேமச்சந்திர இன்னும் கைது செய்யப்படாமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இது தொடர்பாக தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தியடையும் நிலையில் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் கூட்டு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கறுப்புக்கொடி வாரம் அனுஷ்டிக்கப் போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 8 ஆம் திகதிக்கு பின்னர் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

ஜனவரி 8 ஆம் திகதிக்கு பின்னர் நாட்டின் தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

கலாசாரமும் உண்மையும் வீழ்ச்சியடைந்துள்ளன. ஜனவரி 8 என்பது இருளான யுகத்திற்கு செல்ல வழியை அமைத்த திகதியாகும். இதனால், எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரையான ஒரு வார காலத்திற்கு மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட வீடுகளிலும் தமது வாகனங்களிலும் கறுப்பு கொடிகளை பறக்க விடுமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கறுப்புக் கொடிகளை ஏற்றினால், டிபென்டர் வாகனங்கள் வரும் என்ற அச்சம் இருந்தால், பேஸ்புக் வலைத்தளத்தில் புரொப்பைல் படத்தில் கறுப்பு கொடியை பதிவேற்றம் செய்து உங்களது எதிர்ப்புகளை வெளிப்படுத்துங்கள் எனவும் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பாலம் அமைப்பது வரவேற்கப்பட வேண்டியது

## வாசுதேவ தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பாலம் அமைப்பது வரவேற்கப்பட வேண்டியதாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பாலம் அல்லது சுரங்கப் பாதை அமைத்து புகையிரதப் போக்குவரத்து ஆரம்பித்தால் எதிர்காலத்தில் மக்களின் போக்குவரத்து தேவைகளுக்கு வசதியாக அமையும்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பாலம் அமைக்கப்படும் என இந்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு பாலம் அமைக்க இடமளிக்கப்படாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

ஏன் இவ்வாறு பாலம் அமைக்கப்படக் கூடாது என நாடாளுமன்றில் பிரதமரிடம் கேள்வி எழுப்ப உத்தேசித்துள்ளேன்.

நாடுகள் ஒன்றை ஒன்று இணைந்திருப்பது நல்லது என்றே நான் கருதுகின்றேன்.

உரிய குடிவரவு குடியகல்வு சட்டங்களை அமுல்படுத்தி நாடுகளுக்கு இடையில் புகையிரத போக்குவரத்து ஆரம்பிப்பதில் பிழையில்லை.

யார் நாட்டுக்குள் பிரவேசிக்கின்றார் அதற்கான அனுமதியுண்டா என்பது பற்றி கவனிக்கப்பட வேண்டியது அவசியமானது என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பாலம் அமைத்து போக்குவரத்து செய்வது குறித்து ஊடகமொன்று எழுப்பிய கேள்விகளுக்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## மண்பானை மகத்துவம்

"எங்க அம்மா ஒரு மண்குடம் வாங்கிக் கொடுத்தார்! அதை எடுத்துக் கொண்டுபோய் என் மனைவியிடம் கொடுத்தேன். அவர் அதை ஒரு பொன்குடமாக மாற்றிவிட்டார்!" என்றார் ஒருவர்.

"எப்படி அது?" என்று கேட்டேன். "ஒன்றுமில்லை! கீழே போட்டு உடைத்துவிட்டார்!" என்றார்.

"அப்படியானால், அது எப்படி பொன்குடமாக மாறும்?" என்றேன்.

"நீங்கள் பழமொழி கேட்டதில்லையா? மாமியார் உடைத்தால் மண்குடம்! மருமகள் உடைத்தால் பொன்குடம்! என்று. இது மருமகள் உடைத்தது. அதுதான் பொன் குடம்!" விளக்கம் சொன்னார் அவர்.

மருமகள் உடைக்கவில்லை என்றால் கூட இந்தக் காலத்தில் மண்குடம்-பெண்குடம் மாதிரித்தான். மண்பானையில் அவ்வளவு மகத்துவம் இருக்கிறது.

தண்ணீரை சுத்தமாக்கி குடிப்பதற்கு இப்பொழுது பல பேர் "வோட்டர் பில்டர்" உபயோகப்படுத்துகிறார்கள். அதே மாதிரி தண்ணீரைக் குளிர்ச்சியாக வைக்க பிரிட்ஜ் உபயோகப்படுத்துகிறார்கள்.

இந்த இரு செயல்களையும் செலவே இல்லாமல் செய்து கொடுப்பது தான் மண்பானை! உலோகப் பாத்திரங்களில் நீர் ஊற்றி வைத்திருந்தால் அதில் கிருமிகள் அதிகமாவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால் மண்பானையில் நீர் ஊற்றி வைத்தால் அப்படி ஆவதில்லை. நீரிலுள்ள கிருமிகளையெல்லாம் உறிஞ்சி விடுவதால் குடிநீர் சுத்தமாகி விடுகிறது.

அந்தக் காலத்திலேயே நமது முன்னோர்கள் இதை நன்றாக புரிந்து வைத்திருக்கிறார்கள். மண்பானை என்பது ஒரு தலைசிறந்த "வோட்டர் பில்டர்" என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

ஐதராபாத்தில் உள்ள உணவு ஆராய்ச்சிக் கழகம் இதைக் கண்டுபிடித்திருக்கிறது. இதற்கு பின்பும் நாம் சும்மா இருக்கலாமா? உடனே போய் ஒரு மண்பானை வாங்கிக் கொண்டு வந்து விட வேண்டியது தானே!

முதலில் பானையை எடுத்துக் தட்டிப்பாருங்கள்! வெண்கலப் பாத்திரத்தை தட்டுவது மாதிரி சத்தம் கேட்டால் அது நல்லபானை.

பானைக்கு வெளிப்பக்கம் கறுப்புத் திட்டாக தெரியும். பளபளப்பாகவும் இருக்கும். பானை நன்றாக வெந்திருக்கிறது என்று அர்த்தம். வேறு ஒன்றுமில்லை. சிலது சாம்பல் பூத்து, சொரசொரப்பாக இருக்கும். அது வேண்டாம் வெளிப்பாகத்தில் இருப்பதை போன்று உள்பக்கமும் கறுப்புத் திட்டு இருந்தால் அதை வாங்க வேண்டாம். கொஞ்ச நாளில் உடைந்து விடும்.

புதுப்பானையில் தண்ணீரை ஊற்றியவுடன் "உஸ்" என்ற சத்தம் கேட்கும் பானையில் களிமண்ணுடன் கலந்திருக்கும் மணல் நீரை உறிஞ்சும் சத்தம் தான் அது. பானைக்கு வெளிப்பக்கமோ, உள்பக்கமோ சீமெந்து பூசியிருந்தால் வேண்டாம். அதனால் உஷ்ண காற்று உள்ளேயே தங்கி விடும். தண்ணீர் குளிர்ச்சியாக இருக்காது.

என்னதான் இருந்தாலும் செலவில்லாமல் கைக்கு எட்டிய தூரத்தில் இருக்கும் மண்பானைத் தண்ணீருக்கு ஈடு எதுவுமில்லை. உடனடியாக உண்மையாக தாகத்தை தணிப்பது அதுதான்!

ஒரு பெரிய சங்கீத வித்துவான் கடம் வாசிப்பார். ஒரு கச்சேரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அதற்கு முதல் மனைவியைக் கூப்பிட்டு "உன்கையால் 'ஜில்' என்று தண்ணி கொண்டு வந்துகொடு குடித்து விட்டுப் போகிறேன்" என்றார்.

அந்த அம்மாவும் கொண்டு வந்து கொடுத்தார். வாங்கிக் குடித்தார். வெயிலுக்கு இதமாக இருந்தது.

"ஆகா! மண் பானைத் தண்ணியா? கால மறிந்து நடப்பதில் உன்னை எவரும் மிஞ்ச முடியாது! ரொம்ப தாங்ஸ்" என்றார்.

"உங்களுக்குத்தான் தாங்ஸ் சொல்ல வேண்டும்" என்றார் அந்த அம்மா.

"ஏன்?" என்று கேட்டார் இவர்.

"நேற்று, இன்று ஒரு தகவல் கேட்டேன். இன்றைக்கு நம் வீட்டில் மண் பானையாக உபயோகப்படுத்துவதே உங்கள் 'கடம்'தான்! ரொம்ப தாங்ஸ்" என்றாராம் அந்த அம்மா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அப்போது ஆயுதங்களுடன் போராடியவர்கள் இப்போது பசி வேதனையுடன் போராடுகின்றனர்

போர் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் கடந்த போதிலும் தற்போதும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இவர்கள் சாதாரண மக்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதே மிகப் பாரிய பிரச்சினை.

இவ்வாறு சண்டே லீடர் வாரஇதழில். Tharidu Jayawardana, Idunil Ussgoddarachchi, Udaya Karthikan, R.Indumathi ஆகியோர் இணைந்து எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையின் குருதி தோய்ந்த உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்த போது செல்வியும் தனது ரி-56 ரக துப்பாக்கியைத் தூக்கியெறிந்தார். இதன் பின்னர் மீண்டும் தனது குடும்பத்துடன் இணைந்து சமூகத்தில் வாழ வேண்டும் என அவர் விரும்பினார்.

போர் முடிவடைந்த கையோடு அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பட்ட புனர்வாழ்வு முகாமில் 2009 இன் நடுப்பகுதியில் செல்வியும் இணைந்து கொண்டார்.

இவர் தனது எதிர்கால வாழ்வு சிறப்பானதாக மாறும் என் கின்ற நம்பிக்கையுடனேயே புனர்வாழ்வு பெறச் சென்றிருந்தார். ஒன்றரை ஆண்டுகள் புனர்வாழ்வுப் பயிற்சியை நிறைவு செய்த செல்வி அங்கிருந்து வெளியேறிய போது இவரது ஆசைகள் இன்னமும் அதிகரித்திருந்தன.

இவர் தனது புனர்வாழ்வுக் காலத்தின் பின்னர் தனது சொந்த ஊரான கிளிநொச்சிக்கு திரும்பினார். இவர் தனது கிராமத்திற்குத் திரும்பிய போது 24 வயதான புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளியாகத் திரும்பவில்லை. மாறாக இளமை வயதின் கனவுகள் இவருள் நிறைந்திருந்தது. தனக்கென வீடு, கணவன் மற்றும் பிள்ளைகள் என இவரது புதிய கனவுகளும் புதிய நம்பிக்கைகளும் அதிகரித்திருந்தன.

ஆனால் இவளது சொந்த கிராமத்தவர்கள் இவளை ஏற்க மறுத்த போது இவள் அதிர்ச்சியடைந்தாள். சிலர் இவள் கொடிய யுத்தத்தை நடத்திய தமிழ்ப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி என நோக்கினர். ஏனையவர்கள் இவள் இலங்கை அரசாங்கத்தால் மூளைச்சலவை செய்யப்பட்ட பெண் எனக் கருதினர். ஆகவே ஒட்டுமொத்தத்தில் எல்லோரும் இவளை ஏற்க மறுத்தனர்.

'என்னைப் பொறுத்தளவில் எமது சமூகத்தின் படி ஒரு பெண்ணானவள் திருமணம் செய்யாது, குழந்தை பெறாது வாழமுடியாது. அப்படி வாழ்ந்தால் அவளது வாழ்வு முழுமை பெறாது. ஆனால் ஒவ்வொருவரும் என்னை சந்தேகத்துடன் பார்க்கிறார்கள்' என கண்ணீருடன் செல்வி கூறினாள்.

2006 இல் செல்வி தனது 19 ஆவது வயதில் புலிகளுடன் இணைந்து கொண்டாள். போராளியாக இருந்த இவளது சகோதரன் யுத்தத்தில் இறந்ததால் இவள் தன்னைப் புலிகளுடன் இணைத்துக் கொண்டாள். இதன் பின்னர் யுத்தம் நிறைவடையும் வரை இவளும் அமைப்பில் பணியாற்றினாள்.

'மக்கள் மத்தியில் எங்கள் மீது நிறைய சந்தேகங்கள் உள்ளன. ஆனால் இவர்கள் நினைக்குமளவுக்கு நாங்கள் கெட்டவர்கள் அல்ல. புனர்வாழ்வுக் காலத்தில் நாங்கள் மிகவும் நன்றாகவே கவனிக்கப்பட்டோம்' என் செல்வி கூறினாள்.

செல்வியின் விருப்பம் தனிப்பட்ட ஒன்றல்ல. கெட்ட வாய்ப்பாக, இது புனர்வாழ்வு பெற்ற 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் மத்தியில் காணப்படும் பொதுவான ஆதங்கமும் விருப்பமும் ஆகும்.

'எமது புனர்வாழ்வுக் காலத்தில் எமக்கு நிறைய உணவுகள் வழங்கப்பட்டன. ஆனால் எதுவும் எமக்குப் பயனளிக்கவில்லை' என ஜெயந்திநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த மணிமேகலா தெரிவித்தார். 'நாங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் நாங்கள் தொழில் அற்றவர்களாக இருக்கவில்லை. தொழில் வாய்ப்புக்கள் அதிகம் காணப்பட்டன. ஆனால் தற்போது எமக்கென பொருத்தமான தொழில் வாய்ப்புக்கள் காணப்படவில்லை. இந்நிலையில் நாங்கள் எவ்வாறு வாழ முடியும்?' என சில ஆண்டுகள் போராளியாக இருந்த பின்னர் போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்திடம் சரணடைந்த 34 வயதான மணிமேகலா தெரிவித்தார்.

'சிவில் பாதுகாப்புப் படையில் சில தொழில்வாய்ப்புக்கள் காணப்பட்ட போதிலும் அவை எவையும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. எனது கணவர் மத்திய கிழக்கிற்கு தொழில் தேடி சென்றுள்ளார். ஆனால் இன்னமும் அவருக்கு தொழில் வாய்ப்புக் கிடைக்கவில்லை. நான் சிறிய வேலைகளில் ஈடுபட்டு மாதம் 7 ஆயிரம் ரூபா சம்பாதிக்கிறேன். ஆனால் இது போதுமானதல்ல' என மணிமேகலா தெரிவித்தார்.

இவ்வாறான துன்பங்களை அனுபவிக்கின்ற போதிலும் தற்போது நாட்டில் அமைதி நிலவுவது மகிழ்ச்சியைத் தருவதாகவும் மணிமேகலா தெரிவித்தார்.

மாற்றுவலுவுடைய முன்னாள் போராளியான சத்யனும் சமாதானத்தையே விரும்புகிறார். இவர் 1993 இலிருந்து புலிகள் அமைப்பில் இணைந்து பணியாற்றினார். 1996 இல் இவர் தனது ஒரு காலை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கண்ணிவெடியில் இழந்தார். இவர் யுத்தம் நிறைவடைந்த பின்னர் ஒரு ஆண்டு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டார்.



'நான் புனர்வாழ்விலிருந்து விடுவிக்கப்பட்ட போது 250 ரூபா வழங்கப்பட்டது. இந்தப் பணத்தைச் செலுத்தி முச்சக்கர வண்டியில் கிளிநொச்சியிலுள்ள எனது வீட்டிற்குச் சென்றேன். நான் வீட்டிற்குள் நுழைந்த போது என்னிடம் ஒரு சதமேனும் இல்லை' என்கிறார் சத்யன்.

தம் மீது குத்தப்பட்ட புலி முத்திரையை அழிப்பதென்பது இலகுவான காரியமல்ல எனவும் முன்னாள் போராளிகள் அனைவரும் இந்த முத்திரையுடனேயே தற்போதும் வாழ்வதாகவும் சத்யன் கூறினார். 'நான் செயற்கைக் கால் ஒன்றைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும். இதற்கு மானியமாக 50 ஆயிரம் ரூபாவைப் பெறவேண்டும். இதற்கு கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் அவசியம். ஆனால் இந்த விண்ணப்பப் படிவத்தில் அரசாங்கத்திற்கோ அல்லது இராணுவத்திற்கோ எதிராக பணியாற்றியிருக்கக் கூடாது என்பது உறுதிப் படுத்தப்பட வேண்டும். ஆனால் எனது பின்னணியின் காரணமாக கிராம அலுவலர் விண்ணப்பப் படிவத்தில் கையெழுத்திட தயங்குகிறார்' என சத்யன் ஆதங்கப்பட்டார்.

கிளிநொச்சியில் வாழ்ந்து வரும் சத்யன் தனது மனைவி மற்றும் மூன்று மகள்மாரைப் பராமரிப்பதற்காக கூலித்தொழிலில் ஈடுபடுகிறார். இவர் தனது குடும்பத்திற்காக வீடொன்றைக் கட்டுகிறார். ஆனால் இந்த வீடு எப்போது முழுமை பெறும் என்பது நிச்சயமில்லை. இவர் முச்சக்கரவண்டியை வைத்திருக்கிறார். இவரால் மாற்றுவலுவுடையோருக்கென தயாரிக்கப்பட்டுள்ள சிறப்பு வாகனத்தை கொள்வனவு செய்ய முடியவில்லை. ஏனெனில் இது மிகவும் விலைகூடியது.

'கிராமத்தில் இடம்பெறும் பொது நிகழ்வுகளில் பங்குபெற எனக்கு ஆசை. ஆனால் என் மீது புலி முத்திரை குத்தப்பட்டுள்ளதால் அவற்றில் என்னால் பங்குபெற முடியவில்லை' என சத்யன் தெரிவித்தார். தமது சொந்தக் கிராமத்தவர்கள் முன்னாள் போராளிகளான தம்மை சாதாரண கண்ணோடு நோக்கவில்லை என ஆதங்கப்படுகிறார்கள்.

'2008 இல் திருமணம் செய்த பின்னர் புலிகளுடன் இணைந்தேன். பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் நான் முன்னணி போர் அரங்கிற்கு அனுப்பப்பட்டேன்' என தினேஸ் கூறினார்.

புலிகளுடன் குறுகிய காலமே தான் பணியாற்றியிருந்ததால் ஆறு மாதங்களில் தன்னை விடுதலை செய்வதாக அதிகாரிகள் கூறியபோதிலும் இரண்டரை ஆண்டுகளின் பின்னரே தான் விடுவிக்கப்பட்டதாக தினேஸ் தெரிவித்தார்.

2008 இல் மன்னாரில் இடம்பெற்ற யுத்தத்தின் போது தினேஸின் சகோதரிகளில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இவரது தந்தையார் 2007 இல் புற்றுநோயால் இறந்தார். இவரது குடும்பச் சூழலின் காரணமாக தினேஸ் தனது கல்வியை இடைநிறுத்திவிட்டு தொழில் செய்து தனது குடும்பத்தை காப்பாற்றினார்.

போர்க்காலத்தில் இருந்தது போன்று வன்னியின் நிலை தற்போதில்லை என்பதே முன்னாள் போராளிகள் அனைவரினதும் கருத்தாகும்.

(தொடரும்)

# வெற்றிலைக்கு தடைகோரி வாசுதேவ வழக்கு தாக்கல்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் "வெற்றிலைச்" சின்னத்திற்கு தடை விதிப்பது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்போவதாக தெரிவித்த மகிந்த அணி தரப்பின் எம்.பியான வாசுதேவ நாணயக்கார, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பாக வாசுதேவ நாணயக்கார எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழுவை கூட்டாது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பலவந்தமாக கட்சியின் தலைவர் பதவியை பெற்றுக் கொண்டுள்ளார்.

இது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாப்புக்கு முரணானது. அத்தோடு சட்டவிரோதமானது. எனவே இது தொடர்பில் எதிர்காலத்தில் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்ய உத்தேசித்திருக்கின்றோம்.

வெற்றிலைச் சின்னத்திற்கு தடை விதிக்குமாறு நீதிமன்றத்தை கோரவுள்ளோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய கட்சி ஏதும் ஏற்படுத்தும் நோக்கமில்லை.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனியின் பெயரிலேயே போட்டியிடுவோம். ஆனால் புதியதொரு சின்னத்தை தெரிவு செய்வோம்.

இவ்விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரை சந்தித்து தெளிவுபடுத்தவுள்ளோம். இணைந்த எதிர்க்கட்சியில் உள்ளோர் கொள்கை பிடிப்புடன் இருக்கின்றனர்.

ஒருசிலர் அமைச்சுப் பதவிகளுக்காக மாறலாம். அதைப்பற்றி எமக்கு கவலையில்லை. ஆனால் ஐ.தே. கட்சி ஆட்சியை கவிழ்க்கும் எமது போராட்டம் தொடரும். அதனை கைவிடமாட்டோம். இணைந்த எதிர்க்கட்சியாக செயற்படுவோம். இதில் மாற்றம் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாகன நெரிசலை குறைக்கத் திட்டம்

பொது போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதன் ஊடாக போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது.

பேருந்து மற்றும் புகையிரதங்களின் ஊடாக பயணிகள் போக்குவரத்தை முன்னெடுப்பதன் ஊடாக போக்குவரத்து நெரிசலை குறைக்க முடியும் என அமைச்சின் செயலாளர் எஸ். சோமவீர தெரிவித்துள்ளார்.

அதிகளவிலான பயணிகள் போக்குவரத்திற்காக புகையிரத சேவைகளை நாடும் போதிலும், போதியளவு புகையிரத பெட்டிகள் இன்மையால் அவர்களுக்கான சேவைகளை முறையாக வழங்குவதில் சிக்கல் நிலை காணப்படுவதாக போக்குவரத்து அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

அதனால் மலையக புகையிரத மார்க்கத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக புதிதாக 20 புகையிரத இயந்திரங்கள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் எஸ்.சோமவீர தெரிவித்தார்.

அத்துடன் கண்டி புகையிரத நிலையத்திற்கு அருகில் வாகன தரிப்பிடமொன்றை அமைத்து, வாகனங்களை அங்கு நிறுத்தி வைத்து கொழும்பிற்கு கடமைகளுக்கு செல்வதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. (இ-7)

# ஹிருணிகா எம்.பியினால் ஏன் துமிந்தவை கடத்த முடியாது?

தமது தந்தையின் கொலை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை ஏன் கடத்திச் செல்ல முடியாது என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இலங்கையின் பிரபல பாடகர் மதுமாதவ அரவிந்த இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

குடும்பப் பிரச்சினை ஒன்றுக்காக தாம் ஒரு சட்டத்தரணி என்ற அடிப்படையில் ஹிருணிகா ஒருவரை கடத்திச் சென்று விசாரணை செய்திருக்கிறார்.

இந்தநிலையில் தமது தந்தையாரின் கொலை தொடர்பில் தொடர்ந்தும் குற்றம் சுமத்தி வரும் துமிந்த சில்வாவை ஏன் அவரால் கடத்திச் சென்று தமது சொந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்ய முடியாது என்று அரவிந்த கேள்வி எழுப்பியுள்ளார்.

எனவே சட்டத்துக்கு புறம்பாக செயற்பட்டுள்ள ஹிருணிகா கைது செய்யப்படவேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (இ-7)

## ஆண்டு விழா

நவசம சமாஜக் கட்சியின் 38 ஆவது ஆண்டு விழா இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

# கப்டன் திஸ்ஸ எனும் பெயரில் ராணுவத்தில் எவரும் இல்லை

படுகொலை என சந்தேகிக்கப்படும் பிரபல ரக்பி வீரர் வஸீம் தாஜுதீனின் மரணத்துடன் தொடர்புடையவர் இராணுவத்தின் கப்டன் விமலசேனவா என தற்போது சந்தேகங்கள் எழுந்துள்ளன.

கப்டன் திஸ்ஸ என்ற முன்னாள் ஜனாதிபதியின் சாரதியே இந்த மரணத்துடன் தொடர்புடையவர் என தகவல்கள் வெளியாகிய நிலையில், அவ்வாறு கப்டன் திஸ்ஸ என்ற ஒருவர் இராணுவத்திலேயே இல்லை என இராணுவம் மறுத்த நிலையிலேயே இந்த சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பில் இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீரகருத்துத் தெரிவிக்கையில்,


வஸீம் தாஜுதீன் விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசேட விசாரணை ஒன்றினை நடத்தி வருகிறது. இராணுவம் அதில் சம்பந்தப்பட்டுள்ளதாக பல்வேறு தரப்பினரும் கூறுகின்றனர். இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவு விசாரணை நடத்தும் நிலையில் நாம் உள்ளக விசாரணை எதனையும் மேற்கொள்ளவில்லை.

எனினும் தற்போது பரவலாக கப்டன் திஸ்ஸ என்ற இராணுவ வீரர் இதனுடன் தொடர்புபட்டுள்ளதாக கூறப்பட்டது. எனினும் அந்த பெயரில் எந்த ஒரு இராணுவ வீரரும் எமது படையணிகளில் இல்லை. அவருக்கு நிச்சயமாக வேறு பெயர் ஏதாவது இருக்கவேண்டும்.

அதேவேளை கப்டன் விமலசேன என்பவரை நாம் இனம்கண்டுள்ளோம். அவர மிகமுக்கிய அரசியல்வாதியின் வாகனச சாரதியாக செயற்பட்டுள்ளதை கண்டுபிடித்துள்ளோம் என இராணுவ பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 589

துவேனி





தொலைந்து போன திண்ணை உரையாடல்கள் தான் இன்று "Group Chat" என்று அழைக்கப்படுகிறது...

துவாரகன்



க.மதீசன்



கஜல்விழி



வின்ஜக்சன்



துவாகோபி

விட்டுக் கொடுங்கள் விருப்பங்கள் நிறைவேறும்

மன்னிப்பு கொடுங்கள் தவறுகள் குறையும்

மனம் விட்டு பேசுங்கள் அன்பு அதிகமாகும்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

## 85 ஸ்டூடியோ 1975 இல் மூடப்பட்டது

வஜன் அவரகவே கடலில் இறங்கி, வெகுதூரம் நீந்தி, அதன் அடி ஆழம் வரை போய் முத்தெடுத்தவர் அவர்.

ஆனால், எனக்கோ ஆரம்பம் முதலே பத்திரிகை, எழுத்து, இலக்கியம் என்றே ஆர்வம் இருந்தது. அப்படிப்பட்ட என்னை சினிமா என்னும் ஆழ்கடலுக்கு படகில் கொண்டு போய்த் தள்ளிவிட்டு நீந்திக் கரை சேர் என்று சொன்னால் நான் என்ன செய்யமுடியும்? எனக்குத் திரைப்படத்துறையில் நீந்தத் தெரியவில்லை.

பாஸ் மறைவுக்குப் பிறகு அந்தத் துறையில் நீடிக்க முடியாமல் 1975 இல் ஸ்டூடியோவை மூடியபோது எல்லோரும் ஏன், ஏன் என்று கேள்வி கேட்டார்கள். அதற்கு காரணம் இதுதான்.


இவ்வாறு பாலசுப்பிரமணியன் கூறியுள்ளார்.

### 78 படங்கள்

ஜெமினி தயாரித்த தமிழ்ப் படங்கள் 28, தெலுங்கு 19, ஹிந்தி 24, கன்னடம், வங்காளி, மலையாளம் உட்பட பிறமொழிப்படங்கள் 7. ஆக, ஜெமினி பேனரில் வெளியான மொத்தப் படங்கள் 78.

ஒவ்வொரு திரைப்படமும் தயாரானதும், அதை ஊழியர்களுக்கு திரையிட்டுக்காட்டுவார், வாசன். ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களை எழுதிக் கொடுக்க வேண்டும். அவற்றை பரிசீலித்து தேவையான மாற்றங்களைச் செய்வார்.

ஒரு படத்தைப் பற்றி, ஊழியர் ஒருவர், இந்தப்படத்தைக் கடலில் எறிந்து விடலாம் அதற்குத்தான் லாயக்கு என்று எழுதி விட்டார். வாசன் கோபப்படவில்லை. படத்தை மீண்டும் போட்டுப்பார்த்து தேவையான மாற்றங்களைச் செய்தார்.



வாசனுடன் மகன் பாலசுப்பிரமணியன்

### பெயர் சூட்டினால் பரிசு

சில படங்களுக்கு, தொடக்கத்தில் பெயர் வைக்கப்படுவதில்லை. புரொடெக்ஷன் நம்பர் -10, புரொடெக்ஷன் நம்பர் -15 என்பது போன்ற பெயர்களில் படம் உருவாகும். படம் தயாரித்து முடிந்ததும், படத்தை எல்லோருக்கும் போட்டுக்காண்பிப்பார். பொருத்தமான பெயரை எழுதிக் கொடுப்பவருக்கு பரிசு கிடைக்கும்.

1945 ஆம் ஆண்டு, கண்ணம்மா என் காதலி என்ற பெயரைச்சூட்டிய விளம்பர இலாகா நிர்வாகி கிருஷ்ணாஜி 1000 ரூபா பரிசு பெற்றார்.

சிவாஜி கணேசன் - வைஜந்திமாலா நடித்த இரும்புத்திரைக்கும் இவ்வாறு தான் ஒரு ஊழியர் பெயர் சூட்டி பரிசு பெற்றார்.

### தலைவர்களுடன் நட்பு


எஸ்.எஸ்.வாசன், தேசியவாதி. எப்போதும் கதர் சட்டை, கதர் வேட்டி அணிபவர். என்றாலும் ஈ.வேரா., பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடமும் நட்புறவு கொண்டிருந்தார்.

அதிலும் குறிப்பாக பெரியாரிடம் மிகுந்த பக்தியே அவருக்கு இருந்தது. காரணம் 1920களில், வாசன் விளம்பரங்கள் சேகரித்து பத்திரிகைகளுக்கு கொடுத்து வந்த கால கட்டத்தில் ஈரோடில் பெரியார் நடத்தி வந்த குடியரசு பத்திரிகைக்கு விளம்பரங்கள் சேகரித்து அனுப்பி வந்தார். கமிஷன் போக மீதிப்பணத்தை, குறித்த திகதியில் பெரியாருக்கு அனுப்பி விடுவார். இதன் காரணமாக, வாசன் மீது பெரியாருக்கு அன்பு உண்டு.

பிற்காலத்தில், ஜெமினி அதிபராக உயர்ந்த பிறகும், பெரியாரிடம் வாசன் மிகுந்த மரியாதை வைத்திருந்தார். ஒவ்வொரு ஆண்டும் பெரியார் பிறந்த தினத்தன்று (செப்டெம்பர் 17) அதிகாலை நேரத்தில் சென்னை மீரான்சாகிப் தெருவில் உள்ள பெரியார் வீட்டுக்கு வாசன் காரில் செல்வார். காரை அவரே செலுத்திக் கொண்டு போவார்.

அது ஒரு சிறிய சந்து. காரை வீதியில் நிறுத்தி விட்டு நடந்து போவார். கட்சிக்காரர்கள் வருவதற்கு முன்பாக, முதல் ஆளாகப் பெரியாரைப் போய்ப்பாப்பார். ஒரு கவரை பிறந்த நாள் பரிசாக கொடுப்பார். அதில் இரண்டாயிரம் ரூபாய்க்கு நூறு ரூபாய் தாள்கள் இருக்கும். வாசனைப் பெரியார் உட்காரச் சொல்லுவார். வாசன் உட்கார மாட்டார். பெரியாரிடம் அவ்வளவு மரியாதை.

(தொடரும்)



# 2009ல் நடந்தது என்ன? தலைவர் பிரபாகரன் எங்கே?

## விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் பேட்டி

நேற்றைய தொடர்ச்சி....

**தற்போது ஜனநாயக பாதைக்கு திரும்ப முடிவெடுத்து விட்டீர்களா? வடக்கு மாகாண மக்களுக்கு எந்த வகையான தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

அரசியல் போராட்டங்களில் பல பரிணாமங்கள் இருக்கின்றன. ஒரு இனம் எந்தெந்த முயற்சிகள் செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்தோம். உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டதால் அமைதிப் போராட்டம் நடைபெற்றது. பின்னர் இது ஆயுதப் போராட்டமாக மாறியது.

விடுதலைப் போராட்டத்திற்கு ஆயுதப் போராட்டம் ஒரு கருவி. ஆயுதப் போராட்டத்தின் மௌனிப்பிற்கு பின்னால், புலம்பெயர்ந்த தேசங்களில் வாழும் இளையோர் இப்போது ஜனநாயக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆயுதப் போராட்டத்தை நடத்திவிட்டு அடுத்தகட்ட போராட்டத்தை அடுத்த சந்ததியின் கையில் கொடுத்துவிட்டு தலைவர் சென்றிருக்கிறார். ஆகவே, நாங்கள் அடுத்த ஜனநாயகப்போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

**இலங்கையின் புதிய ஆட்சியினால் தமிழர்களுக்கு விடிவு காலம் பிறக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா?**

நிச்சயமாக இல்லை. ஏனென்றால் காலம் காலமாக சிங்களத் தலைவர்களால் நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். அது வரலாறு. அந்த வரலாறை மூடி மறைக்க முடியாது. இலங்கையில் ஒரு வன்போக்கு அரசியல்வாதியின் ஆட்சி முடிந்திருக்கிறது. மென்போக்கு அரசியல் வாதியின் ஆட்சி தொடங் கியிருக்கிறது. இந்த மென்போக்கு அரசியல் வாதியின் ஆட்சிதான் ஆபத்தாக முடியும்.

மிகப்பெரிய இனப்படுகொலை நடந்து முடிந்த இடத்தில் எங்களுடைய மக்கள் பிரதிநிதிகளை வைத்துக்கொண்டே அங்கு இனப்படுகொலை நடந்ததற்கான சட்ட பூர்வமான எந்த விடயங்களும் இல்லை என்று சொல்லப்படுகின்ற அளவிற்கு தமிழர்களின் மக்கள் பிரதிநிதிகளை கொண்டுவரும் ஆட்சிதான் இப்போது வந்திருகிறது.

மென்போக்கு அரசியல் நடவடிக்கையை மேற்கொண்டு உலகத்தை தங்கள் பக்கம் ஈர்த்து, தமிழர்களின் இருப்பை இல்லாமல் செய்வார்களே ஒழிய, தமிழர்களுக்கு எந்த விதமான தீர்வையும் தர மாட்டார்கள்.

**தமிழ் மக்களே ஜனநாயகத்தை விரும்பி வாக்களித்திருகிறார்கள்? என்ன முடிவைத்தான் நீங்கள் எதிர் பார்க்கிறீர்கள்?**

ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் மக்கள் சிலரை தேர்வு செய்கிறார்கள். பிரிந்து செல்வதா? சேர்ந்து வாழ்வதா என்பதை தமிழீழத்தில் மக்கள் தீர்மானிக்க வேண்டும் என்கிற ஒரு பொதுவாக்கெடுப்பை ஐக்கிய நாடுகளில் இருக்கின்ற சட்டத்தை பயன்படுத்தி, ஜனநாயக சரத்துக்கு அமைவாக எங்களுடைய போராட்டத்தைத் தான் நாங்கள் செய்யப் போகின்றோம்.

ராஜபக்ஷவை வைத்துக் கொண்டு போரை நடத்திய நாடுகள்தான் அதே ராஜபக்ஷவை வெளியேற்ற வேண்டும் என்று நினைத்தார்கள். வெளியேற்றுவதற்கான சூழ்ச்சியையும் செய்தார்கள். வெளியேற்றியும் விட்டார்கள். அதே போல்தான் இந்த அரசும் அதே வேலையைச் செய்யும் என்பது அவர்கள் மிக குறுகிய காலத்தில் கற்றுக் கொள்வார்கள். அப்போது எங்களுடைய போராட்டம் வெற்றி அளிக்கும் என்பதுதான் என்னுடைய வாதம்.

**2009 போர்க்காலம் வரை பிரபாகரனும் நீங்கள் இருந்திருக்கிறீர்கள். தற்போது, பிரபகாரன் உயிரோடு இருக்கிறாரா? இல்லையா? உங்களுக்குத் தெரிந்த தகவல் என்ன?**

சில விசயங்களை நாங்கள் இப்போது சொல்வது என்பது சாத்தியமில்லாத விடயமாக இருக்கும். நாட்டுக்காக இறுதி வரை மக்களோடு மக்களாக நின்று போராடுவேன். வெற்றி பெற இயலவில்லை என்றால் மாவீரர்களோடு இணைந்து விடுவேன். இதுதான் தலைவர் சொன்ன விடயம். இதை சிறுபிள்ளைத்தனமாக நாங்கள் பிரத்துப் பார்ப்பது என்பது நல்லது இல்லை என்பது என் கருத்து.

**பரபாகரனுடைய மனைவி உயிருடன் இருக்கிறாரா? எங்கே இருக்கிறார்?**

தலைவருடைய மூத்த மகனும் மகளும் களத்திலேயே பலியானார்கள் என்பது செய்திகளில் வந்திருக்கும். அதை மூடி மறைப்பதற்கு எதுவுமில்லை. இளைய மகன் என்ன ஆனார் என்பதை ஊடகங்களில் பார்த்திருப்பீர்கள். தலைவரின் மனைவி விடயத்தில் என்ன நடந்திருக்கும் என்பதை யூகித்துக் கொள்ள வேண்டும் என்று சொல்வதுதான் சாலப்பொருத்தம் என்று நான் நினைக்கிறேன்.

(முற்றும்)

# உள்நாட்டு உற்பத்தி பொருட்களுக்கு உயர்வான பெறுமதி வழங்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு





உள்நாட்டு உற்பத்திப்பொருட்களுக்கு உயர்வான பெறுமதியை வழங்கி நாட்டை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்வதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

எமது மரபுகள் மற்றும் எமது உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றுக்கு நாம் மதிப்பளித்து நாட்டில் அதற்கு உயர்வான பெறுமதியை வழங்கி, சர்வதேச சந்தையை வெற்றி கொண்டு உலகின் உன்னத நாடாக எமது நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை ஆயுர்வேத மருந்து கூட்டுத்தாபனத்தின் புதிய தாவரச்சாறு உற்பத்திச் சாலையை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் முற்பகல் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

எமது உற்பத்திப் பொருட்களுக்கு உரிய பெறுமதியை வழங்குவதற்கு கடந்த காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப் படாமையினால் விலை மதிக்க முடியாத எமது பொருட்கள் இன்னமும் மறைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

எமது அபிமானத்திற்குரிய கலாசாரத்துடன் எமது பொருட்கள் தொடர்பாக கதைக்கின்ற போது உள்நாட்டு மருத்துவ முறை மற்றும் ஆயுர்வேத மருத்துவம் என்பன முக்கிய இடத்தைப் பெறுவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி உள்நாட்டு மருத்துவ விஞ்ஞானம். ஆயுர்வேத மருத்துவம் என்பவற்றை முன்னோக்கிகொண்டு சென்றுமென்மேலும் அவற்றை மக்களிடையே பரப்புவதற்கான அனைத்து உதவிகளையும் புதிய அரசு வழங்கும் என தெரிவித்தார்.

இலங்கை ஆயுர்வேத மருந்து கூட்டுத்தாபனத்தின் புதிய தாவரச்சாறு உற்பத்திச்சாலை இல.256. பத்திரகொட வீதி, பமுனுவ எனும் இடத்தில் திறந்து வைக்கப்பட்டதுடன், நினைவுப்பேழையை திரை நீக்கம் செய்து உற்பத்திச்சாலையை திறந்து வைத்த ஜனாதிபதி அதனைப் பார்வையிட்டார்.

புதிய தாவரச்சாறு உற்பத்திகள் அடங்கிய் பொதியினை இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் தலைவர் லால் சமரசிங்க ஜனாதிபதிக்கு வழங்கிவைத்தார்.

சுகாதாரம், போசணை மற்றும்சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்ன, மேல் மாகாண முதலமைச்சர் இசுற தேவப்பிரிய. பாராளு மன்ற உறுப்பினர் சத்துர சேனாரத்ன ஆகியோர் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

### 3 ஆயிரம் பட்டதாரிகள் யாசகம் செய்கிறார்கள்

#### ஆய்வில் அதிர்ச்சி தகவல்

இந்தியாவில் எத்தனை யாசகர்கள் உள்ளனர்? அவர்கள் ஏன் யாசகம் செய்து வந்தனர்? என்று அண்மையில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது.

நாடெங்கும் நடத்தப்பட்ட இந்த ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தியா முழுவதும் சுமார் 3 இலட்சத்து 72 ஆயிரம் யாசகர்கள் உள்ளனர். இவர்களில் 2 இலட்சத்து 92 ஆயிரம் பேர் படிப்பறிவு இல்லாதவர்கள். 79 ஆயிரத்து 415 பேர் படித்த யாசகர்கள்.

இவர்களில் 3 ஆயிரத்து 10 யாசகர்கள் பட்டதாரிகள் ஆவார்கள். குடும்பத் தகராறில் இவர்கள் வீட்டை விட்டு வெளியேறி வேறு மாநிலங்களுக்குச் சென்று யாசகம் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். ஆங்கிலம் உட்பட பல மொழிகளில் பேசி இவர்கள் எளிதாக யாசகம் செய்கிறார்கள்.

பட்டதாரி யாசகர்களில் 2 ஆயிரத்து 600 பேர் கலை, அறிவியல் பட்டதாரிகள். 410 பேர் பொறியியல் மற்றும் முதுகலை பட்டம் பெற்றவர்கள் எனத் தெரிய வருகிறது. (இ-7)

### ரமாடி நகரை கைப்பற்றிய

# ஈராக் படைகளுக்கு அமெரிக்கா பாராட்டு

ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்து ரமாடி நகரை மீட்ட ஈராக் படைகளுக்கு அமெரிக்க இராணுவத்துறை செயலாளர் ஆஷ் கார்ட்டர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிக் ஸ்டேட் இன் ஈராக் அன்ட் சிரியா என்ற நோக்கத்தில் தீவிரவாத இயக்கத்தை ஆரம்பித்த ஐ.எஸ். படையினர், ஈராக் மற்றும் சிரியாவில் சில பகுதிகளை கைப்பற்றி, பரந்து, விரிந்த இஸ்லாமிய சாம்ராச்சியத்தை அமைக்க திட்டமிட்டிருந்தனர். அவர்களது முதல் இலக்காக இருந்த ஈராக்கில் உள்ள அன்பர் மாகாண தலைநகரான ரமாடி நகரை கடந்த ஆண்டு ஜூன் மாதம் கைப்பற்றினர். அங்கிருந்தவாறே சுற்றியுள்ள பகுதிகளையும் ஆக்கிரமிக்க தொடங்கிய தீவிரவாதிகள், ஏராளமான அப்பாவி மக்களை கொன்று குவித்ததுடன், அழகான இளம் பெண்களை கடத்திச் சென்று அவர்களை அடிமைகளாக மாற்றி சித்திரவதை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், ரமாடி நகரை மீண்டும் கைப்பற்றி விட்டால் ஐ.எஸ். தீவிரவாதிகளை அடக்கி விடலாம் என ஈராக் இராணுவ தளபதி முடிவு செய்தார். இதையடுத்து, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் விமானப்படைகள் வானில் பறந்து குண்டுமழை பொழிய, தரை வழியாக முன்னேறிச் சென்று ரமாடி நகரை மீட்டே தீருவது என்ற போர் திட்டம் வகுக்கப் பட்டது. இந்நிலையில், ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்து ரமாடி நகரை மீட்ட ஈராக் படைகளுக்கு அமெரிக்க இராணுவத்துறை செயலாளர் ஆஷ் கார்ட்டர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ரமாடி நகரை தற்போது கைப்பற்றி அங்கிருந்து ஐ.எஸ். தீவிரவாதிகளை விரட்டியடித்த ஈராக் படைகளின் இந்த நடவடிக்கையானது, அந்த காட்டுமிராண்டிகளை தோற்கடிக்கும் பிரசாரத்தின் முதற் படியாக அமைந்துள்ளது. ரமாடி நகரில் இருந்து வெளியேறிய மக்களை அங்கு மீள் குடியேற்றம் செய்வது, மீண்டும் ஒருமுறை தீவிரவாதிகளின் பிடிக்குள் அந்த நகரம் விழுந்துவிடாமல் தடுப்பது, அங்கு அமைதியை நிலை நாட்டுவது போன்றவற்றை உறுதிப்படுத்த வேண்டியது போன்றவை தற்போது ஈராக் அரசின் முக்கிய கடமையாக உள்ளது என இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் ஆஷ் கார்ட்டர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித் துளிகள்

## மக்கள் சட்டவிரோதமாக காணி கையகப்படுத்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடாத் தொகுதியை அண்டிய நாவலடி , வாகனேரி, புனானை ஆகிய பகுதிகளில் வன பரிபாலனத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட காணிகளை அத்துமீறி பொதுமக்கள் கையகப்படுத்துவதை உடனடியாக நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு நேற்று முன்தினம் கடிதமொன்றை அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதியை அண்டிய ஓட்டமாவடிப் பிரதேச செயலக மக்கள் பலவந்தமாக எந்த வித அனுமதியுமின்றி வேலி அமைக்கும் சட்டவிரோதச் செயலில் அண்மைய நாட்களில் ஈடுபடுவதாகவும் இவ் அபகரிப்புக்குப் பக்கபலமாக மட்டக்களப்பு பிரதி அமைச்சர் ஒருவர் செயற்படுவதாகவும் இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கவனத்துக்குக் கொண்டு வரப் பட்டுள்ளதாகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார். (இ

## மிரட்டல் விடுத்துப்பணம் பறித்த பெண் பொலிஸாரிடம் சிக்கினார்

தொலைபேசி ஊடாக மிரட்டல் விடுத்து பணம் பறித்த பெண் ஒருவரை கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்று முன்தினம் மாளிகாவத்தை பிரதேசத்தில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

30 வயதான குறித்த பெண் மாளிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ள பொலிஸார், இவர் 30 ஆயிரம் ரூபாயை ஈசி காஸ் மூலம் தரும்படி நபர் ஒருவருக்கு மிரட்டல் விடுத்துள்ளதைத் தொடர்ந்தே குறித்த பெண்ணை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த பெண்ணை கைது செய்யும் போது இவரிடம் 6 கையடக்கத் தொலைபேசிகளும்,30 ஆயிரத்து 550 ரூபாய் பணமும் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## ஊடகவியலாளர் மீது தாக்குதல் சரத் பொன்சேகாவுக்கு தொடர்பு

யுத்த காலத்தில் ஊடகவியலாளர் கீத் நொயா தாக்கப்பட்டமை தொடர்பில், முன்னாள் இராணுவ தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தொடர்பு கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தாய்நாட்டுக்கான இராணுவ வீரர்களின் அமைப்பு இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், அந்த அமைப்பின் இணைப்பாளர் மேஜர் அஜித் பிரசன்ன இதனை தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் அரசாங்கம், ஊடகவியலாளர் கீத் நொயா மீதான தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள தயக்கம் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இணக்கம் தொடர்பாக பிரதமருக்கு அறிவிப்பு

தமது கோரிக்கைகள் தொடர்பில் இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த தொழில்வாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தமது பிரச்சினைகள் தொடர்பில் பிரதமரால் நியமிக்கப்பட்ட குழுவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே, இந்த இணக்கம் எட்டப்பட்டதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதன்போது, எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் பிரதமருக்கு தெரியப்படுத்துவதாக அந்த குழு வாக்குறுதியொன்றையும் வழங்கியுள்ளதாக சங்கத்தின் இணைப்பாளர் தம்மிக முனசிங்ஹ தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டில் இருந்து தொழில் இன்றி உள்ள, பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவது உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து முன்னர் பிரதமருடன் ஆராயப்பட்டது. அதனை அடுத்தே இந்த குழு பிரதமரினால் நியமிக்கப்பட்டது. (இ-7)

# பயிற்சிக் கட்டணக் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபையின் சாரதிப்பயிற்சிப் பாடசாலையின் தனியார் பயிற்சிக்கான கட்டணம் மக்களின் நலன்கருதி குறைக்கப்பட்டுள்ளதாக இ.போ.ச. பிரதான பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இ.போ.ச.சாரதி பயிற்சி பாடசாலையில் தனியார் பயிற்சிக்கான கட்டணம் கூடுதலாக அறவிடுவதாக மக்கள் விசனம் தெரிவித்தமைக்கு அமைவாகவே இக்கட்ணக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் குறைந்த கட்டணம் அறவிடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இ.போ.ச. பிராந்திய பிரதான முகாமையாளர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒவ்வொரு தனியார் பயிற்சியாளர்களும் பயிற்சிக்காக அறவிடப்படும் பணத்தினை விட அப் பயிற்சியாளர்களுக்கு மேலதிக விசேட பயிற்சிகளை எம்மால் வழங்க முடியும்.

பேருந்து, வான் பயிற்சி பெறுபவர்களுக்கு 10 மணித்தியால பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப் பயிற்சிகளின் முடிவில் இலங்கை போக்குவரத்துச் சபை தலைமையகத்தால் வெளிநாடுகளிலும் ஏற்றுக் கொள்ளப்படும் விசேட சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு, பொறிமுறை, வீதிச்சட்டம், விபத்து தடுப்பு போன்றவற்றுக்கான விரிவான விரிவுரைகளும் அனுபவம் மிக்க சாரதி போதனாசிரியர்களால் வழங்கப்படும். (இ-5)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 29.12.2015

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 141.67 | 145.91 |
| பிரிட்டன் | பவுண்ட் | 210.27 | 218.08 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 154.56 | 160.98 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 142.46 | 148.64 |
| கனடா | டொலர் | 101.39 | 105.78 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 101.83 | 106.80 |
| சிங்கப்பூர் | டொலர் | 100.06 | 104.08 |
| இந்தியா | ரூபா | 2.1707 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6110 |
| குவைத் | டினார் | 473.2432 |
| ஓமான் | ரியால் | 373.2106 |
| கட்டார் | ரியால் | 39.4693 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3097 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1217 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 250 | 200 | 150 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 50 | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 700 | 800 | 8-00 | 800 |
| தக்காளி | 180 | 130 | 110 | 140 | 160 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 160 | 200 | 150 | 160 | 200 | 130 |
| கரட் | 200 | 250 | 200 | 200-300 | 320 | 200 |
| பூசணி | 40 | 60 | 40 | 60 | 60 | 50 |
| புடோல் | 100 | 120 | 100 | 100 | 160 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 180 | 140 | 120 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 250 | 300 | 200 | 300 | 400 | 250 |
| வெண்டிக்காய் | 150 | 200 | 90 | 160 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 240 | 240 | 150 |
| லீக்ஸ் | 150 | 200 | 130 | 160 | 200 | 150 |
| பீற்றூட் | 200 | — | — | — | 240 | — |
| கறிமிளகாய் | 400 | — | — | 300 | 800 | 400 |
| முருங்கைக்காய் | 500 | — | — | — | — | — |
| போஞ்சி | 300 | — | 280 | 300 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 150 | — | 160 | — |
| கீரை - 1 பிடி | 30 | 50 | 40 | 40 | 50 | 20 |
| தேசிக்காய் | 150 | 120 | 80 | 150 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-45 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 200 | 200 | 80-100 | 150 | 150 | 250 |
| வெங்காயப்பூ | 400 | 250 | — | 260 | — | 300 |
| முள்ளங்கி | 120 | 150 | — | 100 | 160 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 25 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 60 | 50 | — | 80 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கையில் புதிய சட்டம்: பிரிவினை கேட்டால் மரண தண்டனை 66

### இராஜினாமா

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று கண்டனம் தெரிவித்து கருணாநிதியும் அன்பழகனும் தங்கள் எம்.எல்.ஏ. பதவிகளை இராஜினாமா செய்தனர்.

இராஜினாமாவை விளக்கி இருவரும் ஓர் அறிக்கை வெளியிட்டனர். அதில் அவர்கள் கூறியிருந்ததாவது:-

1.இலங்கையில் வரலாறு காணாத அளவிற்கு அண்மையில் நடைபெற்றுள்ள தமிழ் இனப்படுகொலை குறித்து இதுவரையில் இந்திய பேரரசின் தலைமை அமைச்சரோ அல்லது இந்திரா காங்கிரஸ் கட்சியினர் பெரும்பான்மையுள்ள நாடாளுமன்றமோ ஒரு கண்டனத்தைக் கூட அறிவிக்கவில்லை.

### இராணுவம்

2.இலங்கைத் தமிழர்களைப் படுகொலையில் இருந்து பாதுகாக்கவும், அவர்களுக்கு ஒரு நிரந்தரமான நிம்மதியான வாழ்வளித்திடவும் உடனடியாக முடிவுகளை மேற்கொண்டு இந்திய இராணுவத்தை அனுப்ப தவறியது மட்டுமல்லாமல், எத்தனையோ வெளிநாடுகளுடைய பிரச்சினைகளை ஐக்கிய நாடுகள் சபைக்கு கொண்டு சென்று அதன் கவனத்தை ஈர்த்த இந்திய அரசு, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அந்த முறையை எவ்வளவோ கோரிக்கைகளுக்குப் பிறகும் ஏற்க மறுத்து விட்டது.

3. ஐ.நா.மன்றத்தில் (செக்யூரிட்டி கவுன்சில்) பாதுகாப்பு சபையை வலியுறுத்தி, உடனடியாகப் பாதுகாப்பு சபையின் சார்பில் அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பி, தொடர்ந்து நடைபெறும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு தனது அக்கறையற்ற தன்மையின் காரணமாகத் தவறி விட்டது.

### நரசிம்மராவ்

4. இந்திய வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவ் இலங்கைக்கு வந்த போது, தமிழர் தலைவர்களைச் சந்திக்க இயலாத ஒரு நிலை ஏற்பட்டதோடு, தமிழ் அகதிகள் இலட்சக்கணக்கில் அடைபட்டு அவதியுறும் அகதிகள் முகாமிற்கே செல்ல முடியாமல் திரும்பக் கூடிய நிலை ஏற்பட்டது. அதேநேரத்தில் அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் சகோதரர் இந்தியாவிற்கு சென்று இந்திய அரசிடம் இலங்கையின் நிலைமைகளைச் சிங்களவர்கள் சார்பாக விளக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆனால், இலங்கையில் உள்ள தமிழர்களின் தலைவர்



கருணாநிதி

கள் இந்தியாவிற்கு அழைக்கப்பட்டோ அல்லது இந்திய அரசு வலியுறுத்தி அந்தத் தமிழர் தலைவர்கள் இந்தியாவிற்கு சென்று இலங்கையின் நிலவரங்களை விபரிக்கின்ற சூழ்நிலைகளை உருவாக்குவதன் மூலம் உண்மை நிலைகளை அறிய இந்திய அரசு முயற்சி மேற்கொள்ளாததாலும், அப்படி ஒரு முயற்சியை



அன்பழகன்

இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நமது தமிழக அரசு இந்திய அரசை வலியுறுத்தாததும் பெரும் குறையாகும்.

### உணவு

5. இலங்கையில் அகதிகளாக உள்ள இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் முறையான கவனிப்பின்றி மேலும் மேலும் துன்பத்திற்கும் வேதனைக்கும் ஆளாகின்ற நிலைமையும் அவர்களுக்கென அனுப்பப்படுகின்ற உணவு வகைகளோ ஏனைய மருந்து போன்ற பொருட்களோ அவர்களுக்குப் போய்ச் சேராமல் சிங்கள இராணுவத்திற்குப் போய்ச் சேருகிறது என்ற கொடுமையைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் மற்ற சமுதாய அமைப்புக்களும் சுட்டிக்காட்டியும் அந்தப் பொருட்களும், நிதியும் தமிழர்களுக்குப் போய்ச்சேர மத்திய - மாநில அரசுகள் முயற்சி எடுக்கவில்லை.

### கண்டனத் தீர்மானம்

6. இலங்கைப் பிரச்சினை குறித்துப் பாராளுமன்றத்தில் தமிழர்களைக் காப்பாற்றக் கூடிய கண்டனத் தீர்மானம் ஒன்று கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்திப் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்கள் எல்.கணேசன், வை.கோபால்சாமி இருவரும் மேற்கொண்ட உண்ணா நோன்பின் உணர்வைப் புரிந்து கொள்ளாமல், இந்திய அரசு அப்படி ஒரு தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் இதுவரை தெரிவிக்காதது வருத்தத்திற்குரியது.

7. தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் நண்பர் நெடுமாறன் அவர்கள் தலைமையில் நடைபெறுகின்ற தியாக பயணத்தில் செல்பவர்களை இந்திய அரசு இடையிலேயே தடுத்து விடும்.





அகதி முகாமில் உணவுக்காக வரிசையில் நிற்கும் தமிழர்கள்

(தொடரும்)

ஏமாற்றுதல் என்பது அற்பர்களால் உண்டாகும் அற்ப ஆனந்தம் காணும் செயலாகும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எம் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தில் நீங்கள் காட்டும் இரகசியம் ஏன்?

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வோம் என்று கூறிக் கூறி ஏமாற்றியமை தலைவர் பிரபாகரனுக்கு செய்த முதலாவது தீங்கு என்பதை தமிழ் மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.

தமிழ் மக்கள் பேரவையை இரகசியமாக கூட்டியது ஏன்? என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர். மதத்தலைவர்கள், சமூகப் பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டதன் அடிப்படையில் தமிழ் மக்கள் பேரவை இரகசியமாகக் கூட்டப்பட்டது என்று கூறுவது எந்த வகையிலும் நியாயமாகாது. இந்து மதத் தலைவர்கள், கத்தோலிக்க மதத் தலைவர்கள் பங்குபற்றி இருக்கும் போது அது சமய ரீதியில் வடக்கு கிழக்கு மக்களை இணைத்துக் கொள்கிறது. இதேபோல சிவில் சமூகப் பிரதிநிதிகள் பங்குபற்றியமையானது ஏதோ ஒரு வகையில் மக்கள் சமூகத்தின் பிரதிநிதித்துவத்தைக் கொண்டதாக இருக்கும்.

இதேநேரம் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்ற வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பேரவையில் கலந்து கொண்டதை இரகசியக் கூட்டம் என்று சொல்லுவோர் மறந்து போனது ஏன் என்று தெரியவில்லை.

வடபுலத்து தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுள்ள வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் போது அதனை இரகசியக் கூட்டம் என்று கூறுவது எந்த வகையிலும் நியாயமாகாது.

இது தவிர, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சிவில் சமூகப் பிரதிநிதிகளின் பிரசன்னத்தை தமிழ் மக்கள் பேரவை இரகசியமாக–பூட்டப்பட்ட அறையில் நடந்தது என்று கூறுவோர் ஒரு கணம் நினைத்தாக வேண்டும்.

தமிழ் மக்கள் பேரவை இரகசியமாக நடந்தது என்று கூறுவோர்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை இரகசியமாக வைத்திருப்பது குறித்து தங்கள் ஆதங்கத்தை பகிரங்கமாகக் கூறாதது ஏன்?

தீர்வுத்திட்டம் சிங்கள மக்களுக்குத் தெரிந்தால் அதனை சிங்கள மக்கள் எதிர்ப்பர் என்று கருதியே நாம் அத் தீர்வுத்திட்டத்தை வெளிப்படுத்தவில்லை என்று நியாயம் கூறித்தப்புவர். இவ்வாறு தமக்கு நியாயம் கூறுவோர் தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தைப் பகிரங்கமாகக் கூட்டினால் அதனைக் குழப்புவதற்கும் ஆட்கள் இருப்பர் என்பதை மறந்து போனமை எதற்கானது.

எதுவாயினும் தமிழ் மக்கள் பேரவை தொடர்பில் எதிர்க்கருத்துக்களை கூறுவதால் தமிழ் மக்களுக்கு எந்தப் பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை. எனவே பயனற்ற பிரசாரங்களை கை விட்டு, தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் அமைப்பை கட்டி எழுப்ப தமிழ் அரசியல்வாதிகள் முன்வர வேண்டும் என்பதே நம் விருப்பம்.

சொல்லொணாத் துன்பத்தில் மூழ்கியிருக்கும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை தரும் நடவடிக்கைகளை அனைவரும் முன்னெடுப்பதே பொருத்தமானது என்பது நம் தாழ்மையான கருத்து.

# கடற்றொழில் உபகரணங்களை வழங்குவதற்கு உத்தரவுப் பட்டியல் கிடைக்கப்பெறவில்லை

## நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு அரசினால் வழங்கப்படும் உபகரணங்களை வழங்குவதற்குரிய உத்தரவுப் பட்டியல் தலைமைக் காரியாலயத்தால் இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் பா. ரமேஷ் கண்ணா தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர்களுக்கு உரிய கடற்பாதுகாப்பு கவசங்கள் இதுவரை நீரியல் வளத்துறை திணைக்களத்தால் வழங்கப்படவில்லை என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத்தினர் தெரிவித்தமை தொடர்பாக அவரை தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எரிபொருள் மானியத்துக்கு பதிலீடாக 2014ஆம் ஆண்டிலிருந்துவலை உபகரணங்களும் பாதுகாப்பு அங்கிகளும் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி 2012,13 காலப்பகுதியில் எரிபொருள் முத்திரைபெற்ற பயனாளிகளுக்கு இத்திட்டம் 2014 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் 2 ஆயிரத்து 600 பயனாளிகள் இத்திட்டத்துக்கு தகுதியானவர்களென தெரிவு செய்யப்பட்டு விண்ணப்பங்களை தலைமை அலுவலகத்துக்கு அனுப்பியிருந்தோம். அவர்கள் விண்ணப்பங்களை பரிசீலித்த பின்னர் முதற்கட்டமாக ஆயிரத்து 543 பயனாளிகளின் பெயர், விபரப்பட்டியலை தயாரித்து எமது திணைக்களத்துக்கு அனுப்பியிருந்தார்கள். அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் 98 வீதமான அளவு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டபட்டியலுக்காக நாம் எதிர்பார்த்திருக்கிறோம். ஆனால் இதுவரை அப்பட்டியல் எமக்கு அமைச்சினால் அனுப்பி வைக்கப்படவில்லை. அவர்கள் விபரங்களை பரிசீலிப்பதற்கு கால அவகாசம் தேவையெனகேட்டுள்ளனர்.

அனைத்து பயனாளிகளுக்குமான கடற்பாதுகாப்பு அங்கிகள் எமக்கு அனுப்பிவைக்கப்பட்டபோதிலும் அவர்களுக்குரியவலைகள் இன்னும் வழங்கப்படவில்லை முதற்கட்ட பயனாளிகளுக்கே வலை மற்றும் கடற்பாதுகாப்பு கவசங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையவர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

எமது உயிரைநாமே பாதுகாக்க வேண்டியது எம் ஒவ்வொருவரதும் கடமையாகும். ஆனால் பாதுகாப்பு அங்கிகளை பெற்றுக்கொண்ட பல கடற்றொழிலாளர்கள் அவற்றை பயன்படுத்துவதில்லை. கடற்றொழிலில் ஈடுபடும் போது பாதுகாப்பு அங்கிகளை அணியவேண்டும் என்பது கட்டாய சட்டமாக இருந்துவருகின்ற போதிலும் அதை பலர் கடைப்பிடிப்பதில்லை.

இரண்டாம் கட்ட பயனாளிகளுக்குரிய உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு அங்கிகளை வழங்குவதற்கு நாமும் பல்வேறுபட்ட அழுத்தங்களை தலைமை காரியாலயத்துக்கு கொடுத்துக் கொண்டு வருகிறோம் விரைவில் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகிறோம் எனஅவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# சிவ ஆராதனையும் ஆன்மீக யாத்திரையும்

வீணாகான குரு பீடத்தில் குரு முதல்வர்களது நல்லாசிகளுடன் சிவ ஆராதனையும் சிவ ஆன்மீக யாத்திரையும் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில் எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை நடைபெறவுள்ளது.

வீணாகான குருபீட சந்நிதாச்சாரியார் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வேதபாராயணம், திருமுறை பாராயணம, நிருத்தாஞ்சலி, நாதஸ வர தவில் இசையர்ப்பணம், கீர்த்தனாஞ்சலி, பஜனை, சமர்ப்பணம் என ஒவ்வொரு உபசாரமும் 108 இற்கு மேற பட்ட கலைஞர்கள் கலந்து கொண்டு சமர்ப்பணம் செய்யவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 2.30 மணிக்கு ஆன்மீக யாத்திரை நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு பருத்தித்துறை வீதி வழியாக ஆரியகுளம் சந்தி, வேம்படிச் சந்தி, வைத்தியசாலைச் சந்தி, முட்டாஸ்கடைச் சந்தி வரை சென்று அவ்வீதி வழியாக வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தை சென்றடையவுள்ளது.

தமிழர்கள் தம் வரலாற்றில் யுத்தத்தின் பின்னரும் தீர்வு காண முடியாத பல பிரச்சினைகளைச் சுமந்தவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

இதனைக்கருத்திற்கொண்டும் தமிழ்மக்கள் நிம்மதியாகவும் அமைதியாகவும் வாழ்வதற்கு பிரார்த்தனை மற்றும் யாத்திரை என்பன நடைபெறவுள்ளன. (இ-5)

# போதையில் மகளின் கழுத்தை கத்தியால் வெட்டிய தந்தை

மதுபோதையில் மகளின் கழுத்தை கூரிய கத்தியால் வெட்டிப் படுகாயப்படுத்திய தந்தை தப்பியோடிய சம்பவம் அரியாலை நாவலடிப் பகுதியில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம் பெற்றது.

இதில் சிவராசா தர்சினி என்ற 28 வயதுடைய யுவதியே யாழ்.போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தந்தையும்மகளும்வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர் எனவும் வாய்த்தர்க்கம் முற்றியதால் தந்தை மகளை கத்தியால் வெட்டியுள்ளார்.

இரத்த வெள்ளத்தில் கிடந்த அவ் யுவதியை உறவினர்கள் அதிகாலை 3 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் சந்தேக நபர் தப்பியோடியுள்ளார். (இ-5-30)

## யாழ்.நகரப் பகுதியில்

# தற்காலிக கடைத்தொகுதிகளை அமைப்பதற்கு இட ஒதுக்கீடு

யாழ்.நகரப்பகுதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த வர்த்தகர்களிற்கு தற்காலிக கடைத் தொகுதிகளை அமைப்பதற்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் யாழ் நகர்ப்பகுதியில் நீண்ட காலமாக நடைபெற்றுவந்த நடைபாதை வியாபாரத்தினால் பொது மக்களுக்கு பல இடையூறுகள் ஏற்பட்டு வந்தன. அவர்களிற்கான மாற்று இட வசதி தொடர்பாக இழுபறி நிலை தொடர்ந்தது.

இந்நிலையில் நகரப் பகுதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்ட சுமார் 25 வர்த்தகர்களிற்கு கடந்த சில தினங்களுக்கு முன்னர் தற்காலிக கடைகள் அமைப்பதற்காக வைத்தியசாலைக்கு அருகில்அமைந்துள்ள வாகன தரிப்பிடத்தில் மாற்று இட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக பாதசாரிகளின் போக்குவரத்து பிரச்சினை தீர்க்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட நடைபாதை வியாபாரிகளும் இத்திட்டத்தினால் நன்மை அடைந்துள்ளனர். (இ-9)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### உலகப்பற்றை விடுங்கள்



✦ மனிதனுக்கு எட்டுவித பந்தங்கள் இருக்கின்றன. அதை வெட்கம், வெறுப்பு, அச்சம், ஜாதிச்செருக்கு, வம்சா வழிச் செருக்கு, சீலம், துயரம், உள்ளத்தில் ஒளித்துவைத்தல் என்பனவாகும். குரு கடாட்சமின்றி இவற்றை யாரும் விட்டு விட முடியாது.

✦ மலத்தில் உதித்து மலத்திலேயே வாழ்ந்துவருகிற புழு ஒன்று, சந்தனத்தில் எடுத்துவைத்தால் அது செத்துப்போகும். அதுபோன்று கலகப் பற்றுடைய ஒருவனை நல்லார் இணக்கத்தில் சேர்த்துவைத்தால் அவன் பெருந்துன்பத்துக்கு ஆளாவான்.

✦ உலக வாழ்க்கையில் சத்து ஒன்றும் இல்லை. ஆயினும் உலகப் பற்றுடையவன் அதைத் தெரிந்திருந்தும் அதை விட்டுவிடமாட்டான்.

✦ கயமையில் உழல்பவர்களுக்குக் கடவுள் விசுவாசம் வருவதில்லை. அவர்கள் எப்பொழுதும் சந்தேகப் பேர்வழிகள். ஆனால் சந்தேகம் யாருக்குமே அடியோடு அகன்று போவதில்லை. பிரம்மஞானம் அடைய பெற்றவனுக்குத்தான் சந்தேகம் ஒன்றும் வருவதில்லை.

✦ உலகில் பெரும் பற்றுதல் வைத்து சுக ஜீவனம் செய்து வருபவர்களிடம் உலகிலுள்ள கஷ்ட நஷ்டங்களைப்பற்றி மிகைபடப் பேசலாகாது.

✦ உலகப் பற்றுடையான் வெறும் பொய் வேஷக்காரன். கடவுளை நேசிப்பவன் போன்று அவன் பாசாங்கு பண்ணுகிறான். உண்மையின் சகலப் பொருள்களிடத்துதான் அவன் பற்றுதல் வைத்திருக்கிறான். ஈசனே அனைத்துக்கும் இறைவன் என்னும் மெய்ஞ்ஞானம் வரும் வரையில் மனிதனுக்குப் பிறவிகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

✦ ஒருவனுக்கு தேகாத்ம புத்தி இருக்கும்பொழுது பிறப்பு, இறப்பு, பிணி, துயரம், இன்பம், துன்பம் ஆகியவைகளைப் பற்றிய உணர்வு இருக்கிறது. ஆனால் ஆத்மாவோ இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம்

# யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு-2015 சென்றலைட்ஸ் 2ஆவது வருடமாக முதலிடத்தில்








ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 2010ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 6 வருடங்களாக நடத்திவரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 132 போட்டிகள் 01.01. 2015 இல் இருந்து இதுவரை நடைபெற்றுள்ளது.

அப்போட்டிகளுக்கு வழங்கப் பட்ட புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸ் அணி 19 போட்டிக ளில் பங்கு பற்றி 15 போட்டிகளில் வெற்றி பெற்று 100.49 புள்ளி களைப் பெற்று முதலாம் இடத்தி லும் கே.சீ.சீ.சீ. அணி 19 போட்டி களில் பங்குபற்றி 10 போட்டிகளில் வெற்றிபெற்று 77.74 புள்ளிக ளைப் பெற்று 2ஆம் இடத்திலும் யாழ். ஜொனியன்ஸ் அணி 16 போட்டிகளில் பங்குபற்றி 10 போட்டி களில் வெற்றி பெற்று 75.38 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத் திலும் உள்ளன.

ஹாட்லியைற்ஸ் அணி 16 போட் டிகளில் பங்குபற்றி 10 போட்டிக ளில் வெற்றி பெற்று 74.15 புள்ளிக ளைப் பெற்று 4ஆம் இடத்திலும் சிறி காமாட்சி அணி 17 போட்டிக ளில் பங்குபற்றி 10 போட்டிகளில் வெற்றி பெற்று 70.77 புள்ளிகளைப் பெற்று 5ஆம் இடத்திலும் ஜொலிஸ் ரார்ஸ் அணி 15 போட்டிகளில் பங்கு பற்றி 10 போட்டிகளில் வெற்றி பெற்று 69.35 புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்திலும் திருநெல் வேலி சீ.சீ 15 போட்டிகளில் பங்குப ற்றி 09 போட்டிகளில் வெற்றிபெ ற்று 68. 33 புள்ளிகளைப் பெற்று 7 ஆம் இடத்திலும் யாழ்.சென்றல் அணி 15 போட்டிகளில் பங்குபற்றி 06 போட்டிகளில் வெற்றி பெற்று 56. 70 புள்ளிகளைப் பெற்று 8 ஆம் இடத்திலும் ஸ்கந்தாஸ்ரார்ஸ் அணி 13 போட்டிகளில் பங்குபற்றி 07 போட்டிகளில் வெற்றிபெற்று 52.15 புள்ளிகளைப் பெற்று 9ஆம் இடத்திலும் யூனியன்ஸ் அணி 12 போட்டிகளில் பங்குபற்றி 06 போட் டிகளில் வெற்றிபெற்று 51.07 புள்ளி களைப் பெற்று 10 ஆம் இடத்திலும் மானிப்பாய் பரீஸ் 08 போட்டிகளில் பங்குபற்றி 05 போட்டிகளில் வெற்றி பெற்று 49.22 புள்ளிகளைப் பெற்று 11 ஆம் இடத்திலும் கிறாஸ் கொப்பர்ஸ் 11 போட்டிகளில் பங்கு பற்றி 06 போட்டிகளில் வெற்றி பெற்று 42.86 புள்ளிகளைப் பெற்று 12 ஆம் இடத்திலும் பற்றீசியன்ஸ் 12 போட்டிகளில் பங்குபற்றி 04 போட்டிகளில் வெற்றிபெற்று 40.31 புள்ளிகளைப் பெற்று 13ஆம் இடத்திலும் ஓல்ட்கோல்ஸ் 08 போட் டிகளில் பங்குபற்றி 03 போட்டிக ளில் வெற்றி பெற்று 35.57 புள் ளிகளைப் பெற்று 14 ஆம் இடத் திலும் யாழ்.பல்கலைக்கழக அணி 08 போட்டிகளில் பங்குபற்றி 04 போட்டிகளில் வெற்றிபெற்று 34. 30 புள்ளிகளைப் பெற்று 15 ஆம் இடத்திலும் ஷறிபேக்ஸ்ரார் 07 போட்டி களில் பங்குபற்றி 03 போட்டிகளில் வெற்றிபெற்று 31.52 புள்ளிகளைப் பெற்று 16ஆம் இடத்திலும் விங்ஸ் அணி 08 போட்டிகளில் பங்குபற்றி 05 போட்டிகளில் வெற்றி பெற்று 30.69 புள்ளிகளைப் பெற்று 17 ஆம் இடத்திலும் ஸ்ரான்லி அணி 08 போட்டிகளில் பங்கு பற்றி 02 போட் டிகளில் வெற்றிபெற்று 26.13 புள்ளி களைப் பெற்று 18ஆம் இடத்திலும் நியூஸ்ரார்ஸ் அணி 06 போட்டிக ளில் பங்குபற்றி 02 போட் டிகளில் வெற்றிபெற்று 22.21 புள்ளி களைப் பெற்று 19 ஆம் இடத்திலும் விக்ரோறி அணி 07 போட்டிகளில் பங்குபற்றி 01 போட்டியில் வெற்றி பெற்று 19.62 புள்ளிகளைப் பெற்று 20 ஆம் இடத் திலும் சென்றலைட்ஸ் பி 03 போட்டி களில் பங்குபற்றி 02 போட்டிகளில் வெற்றி பெற்று 13.97 புள்ளிகளைப் பெற்று 21ஆம் இடத்திலும் றெஜின்போ 05 போட்டிகளில் பங்குபற்றி 01 போட்டியில் வெற்றிபெற்று 13.92 புள்ளிகளைப் பெற்று 22ஆம் இடத்திலும் திருநெல்வேலி YMHA 05 போட்டி களில் பங்குபற்றி 01 போட்டியில் வெற்றிபெற்று 12.31 புள்ளிகளைப் பெற்று 23 ஆம் இடத்திலும் உள்ளன. (கு)

# தேசிய மட்ட கராத்தே போட்டியில் சென்.ஜோன்ஸ் மாணவர்கள் சாதனை





2015 இற்கான அகில இலங்கை ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டி அண்மையில் கொழும்பு மகரகம வில் இளைஞர் சேவை மன்றலில் நடைபெற்றது. இப்போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரியை சேர்ந்த கரா த்தே வீரர்கள் மூன்று தங்கம் உட்பட 9 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

அவர்களுடன் கராத்தே பிரமு கர்கள் பொறுப்பா சிரியர் R.நிசானும் மற்றும் கராத்தே பயிற்சி ஆசிரியர் சென்சே விஜய ராஜையும் படத்தில் காணலாம். வெற்றி பெற்றவர்களின் விப ரம், V.நிவேதன் 12 வயதுப் பிரிவு காட்டா தங்கம், V.திருசாந் 13 வயதுப் பிரிவு காட்டா தங்கம், A.துசியந் தன் 16 வயதுப்பிரிவு காட்டா தங்கம் குமி த்தே வெண் கலம், S. எழிலன் 16 வயதுப் பிரிவு குமித்தே வெள் ளிப் பதக்கம், குழுக் காட்ட வெண் கலம், A. தனுசன் 16,17 வயதுப் பிரிவு காட்டா வெள் ளிப்பதக்கம், குழுக் காட்டா வெண் கலப் பதக்கம்.

இவர்கள் மாகாண மட்டப் போட்டி யில் 22 பதக்கங்கள் பெற்று சாதனை படைத்துள்ளார் கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)



அச்சுவேலி றொக்கட் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 11 பேர் 10 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டி தொடரின் இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்தது. அவ் அணியினரை படத்தில் காணலாம்.

# யாழ்.மாவட்ட பட்மின்டன் அணி தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை/கழ கங்களிலிருந்து தெரிவு செய்யப் பட்ட 3 வீரர்கள், வீராங்கனை களை உள்ளடக்கி யாழ்.மாவட்ட பட்மின் டன் அணி தெரிவு செய்யப்படவுள் ளது.

இதற்கு பதிவு செய்யப்பட்ட கழக பாடசாலை வீரர்களின் பெயர் விப ரங்கள் செயலாளரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (கு)

## அரசியல் தீர்வை...

பல்வேறுபட்ட கருத்துக்களையும் சூழ் நிலைகளையும் கொண்டுள்ளது. குறிப்பாக தற்போது வடக்கு கிழக்கு இணை ந்த வகையிலே தமிழ் மக்கள் பேரவை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. தமிழ் மக்களை பொறுத்தவரையில் தீர்வில்லாத நிலை ஒன்று காணப்படுகின்றது.

மாறிமாறி அரசாங்கங்கள் ஆட்சிக்கு வருகின்ற போதிலும், தற்போது ஆட்சியில் உள்ள அரசு ஆட்சிக்கு வருவதற்கு கணிசமான பங்கினை தமிழர்கள் ஆற்றியிருக்கின்றார் கள். அவ்வரசு ஆட்சியிலமர்ந்து ஒருவருடம் நிறைவுறுகின்ற நிலையிலும், மீள்குடியேற்றங்கள் நடைபெறவில்லை. அரசியல் கைதிகளின் விடுதலை தோற்கடிக்கப்பட்ட விடயமாகவே உள்ளது.

இதனை விட தமிழர் தீர்வு விடயத்தில் இழுத்தடிப்புக்களும் நடைபெற்றுக் கொண்டுள்ளன. இந்த காலகட்டம் என்பது தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. வடக்கு கிழக்கு இணைந்த தீர்வு கிடைக்குமா? அல்லது சமஷ்டி அடிப்படையில் தீர்வு கிடைக்குமா? சமஷ்டி அடிப்படையிலான யாப்பிற்கு இலங்கை அரசு தயாராகுமா?

அவ்வாறு பாராளுமன்றத்தில் அந்த யாப்பு நிறைவேற்றப்பட்டாலும் கூட சிங்கள மக்கள் ஒரு பொதுசன வாக்கெடுப்பில் அதற்கு வாக்களிப்பார்களா? என்ற சதேகங்கள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன. இதனை விட காணி அதிகாரம், நிதி அதிகாரம், வடக்கு மாகாண சபைக்கான அதிகாரம், எனப் பல்வேறுபட்ட சந்தேகங்கள் தமிழ் மக்களிடம் இருக்கின்றது.

இந்த சந்தேகங்களுக்கு மத்தியில் அமைப்புக்கள் உருவாவது இயல்பானது. ஒரு அமுக்கம் தான் பாதிக்கப்பட்ட மக்களிலிருந்து அமைப்புக்களாக புறப்படுவதுண்டு. விடுதலைப்போராட்டங்களை நாம் பார்க்கின்ற போது ஆயிரக்கணக்கான அமைப்புக்கள் உருவாக்கி இருக்கின்றன. இதில் சில அமைப்புக்கள் தான் இறுதிவரை போராடி இருக்கின்றன.

தமிழர் வரலாற்றில் கூட விடுதலை இயக்கங்களில் முப்பத்தியாறு இயக்கங்கள் இருந்தன. பல்வேறுபட்ட கட்சிகளும் இருந்திருக்கின்றன. ஆகவே இந்த பேரவையை விமர்சிக்க வேண்டிய தேவையோ அல்லது அதனை பார்த்து பயப்பட வேண்டிய தேவையோ எங்களுக்கு இல்லை. அண்மையில் சம்பந்தன் ஐயாவோடு பேசும் போது கூட, இது நல்ல விடயம் சிறிதரன்.

நாங்கள் ஒரு கட்சியாக இருக்கின்றோம். தீர்வு தொடர்பில் அரசாங்கத்திடம் பேசும் போது இவ்வாறான அமைப்புக்களின் அழுத்தங்கள் இருப்பதாக அரசிடமும் சொல்லலாம். சர்வதேச நாடுகளுக்கும் நாங்கள் சொல்லலாம் என கூறியிருந்தார். ஆகவே விடுதலைக்காக போராடுகின்ற இனம், தனது இலக்கை உருவாக்கி கொள்ளவதற்காக இவ்வாறான அமைப்புக்களை உருவாக்கி கொள்வதில் எந்தவிதமான தடைகளும் இல்லை.

தமிழ் மக்கள் பேரவையினையும் சந்தேகம் கொண்டு பார்க்கத்தேவையில்லை. ஆனால இந்த அமைப்பில் அரசியல் கட்சிகள் சார்ந்த தலைவர்கள் உள்ளார்கள். தமிழரசு கட்சி தவிர்ந்த ஏனைய பங்காளி கட்சிகளை அழைத்து இரகசியமான முறையில் கூட்டத்தை நடத்தியது சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

தேசிய செயற்பாட்டாளர்களையும் பல தலைவர்களையும் கொண்ட கட்சியான தமிழரசு கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படாமல் ஏனைய கட்சிகளை அழைத்தமை என்ன காரணத்திற்காக ஏனென்று தெரியவில்லை. இது தமிழர்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கான காரணத்தை தமிழ் மக்கள் பேரவை இதுவரை கூறவில்லை.

தமிழ் மக்களின் தீர்வை ஒரு சிலரிடம் நாம் விட்டுவிட முடியாது. மாறாக தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, முஸ்லிம் மக்கள், புலம்பெயர் மக்கள் ஒன்றிணைந்து தீர்வை நோக்கி செல்ல முடியும். இவ்வாறான அனைவரும் ஒரு புள்ளியில் சந்தித்து ஒரு நிரந்தர தீர்வினை பெற்றுக் கொள்வதுதான் மிக மிக முக்கியமானது.

அறுபதுகளில் நடைபெற்ற தேர்தலில் தந்தை செல்வா வெற்றி பெற்ற போது ஜி. ஜி.பொன்னம்பலத்தையும் இணைத்து தமிழர் விடுதலை கூட்டணியை உருவாக்கி தீர்வு முயற்சியினை முன்னெடுத்திருந்தார். இதே வேளை பல்வேறுபட்ட ஆயுத இயக்கங்களை தடை செய்து ஒரு தேசிய விடுதலை இயக்கத்தை கட்டி எழுப்பிய தலைவர் வே.பிரபாகரன் கூட,

2001 இல் பல்வேறு பட்ட தடைசெய்யப் பட்ட இயக்கங்களை ஒன்று சேர்த்து ஒரு கட்சியை உருவாக்கி அரசியல் பயணத்தை ஆரம்பித்து வைத்தார். ஆகவே இந்த பார்வைகள் எல்லாம் சம்பந்தன் ஐயாவிடம் இருக்காமல் இல்லை. அவர் சொல்கின்ற 2016இல் தீர்வு என்பது, இவர்களை இணைத்து கொண்டு ஒரு கூட்டு தலைமையின் தலைவராக அவர் செயற்படுவார் என்றே நினைக்கின்றேன்.

எங்களுடைய பக்கத்திலும் நிறைய பிழைகள் உள்ளன. பல்வேறு பட்ட கருத்துக்கள் இருக்கின்றன. ஒரு ஜனநாயக கட்சியில் கருத்து முரண்பாடுகள் இருக்கின்றன. இவை கட்சிக்குள் பேசி தீர்க்கப்பட வேண்டிய விடயம். கூட்டமைப்பென்றால் கூட்டமைப்போடு நின்று பேச வேண்டும். இவை களையப்பட்டு சரியான பாதையில் செல்வோம்.

மக்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு எதற்காக வாக்களித்தார்களோ, அந்த மக்களின் ஆணையை நிராகரித்து ஒருபோதும் தவறான பாதையில் கூட்டமைப்பு செல்லாது. ஆகவே தமிழ் மக்கள் பேரவை தனது மக்கள் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுக்கட்டும். அது வரவேற்கத்தக்கது. இறுதியில் அனைவரும் இணைந்து ஒரு தீர்வை காண்போம் என்றார் சிவஞானம் சிறிதரன். (செ-4)

## வடக்கு அமர்வு...

சம்பந்தமான விமர்சனங்களும் எழுந்துள்ளன.

இத்தகைய நிலையில் வட மாகாண சபையில் இது சம்பந்தமான வாதப் பிரதிவாதங்கள் எழக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் அறிய முடிகிறது. (செ-12)

## 700 ஏக்கர்...

பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்டிருந்த 468.5 ஏக்கர் நிலமும் வலி.கிழக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்டிருந்த 233 ஏக்கர் நிலமுமே இவ்வாறு மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. 25 வருடங்களுக்குப் பின்னர் தமது சொந்த மண்ணை இடம்பெயர்ந்திருந்த மக்கள் நேரில் சென்று ஆவலுடன் பார்வையிட்டனர். இவர்களுடன் தெல்லிப்பழை பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன், வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சோ. சுகிர்தன், அப்பகுதி கிராம அலுவலர்கள் ஆகியோர் சென்றிருந்தனர். வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திற்குட்பட்டிருந்த 6ஆயிரத்து 800 ஏக்கர் நிலத்தில் ஒருபகுதி நிலம் கடந்த தை மாதம் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. இரண்டாம் கட்டமாக வலி.வடக்கு மற்றும் வலி.கிழக்கு பகுதிகளில் மொத்தமாக 701.5 ஏக்கர் நிலம் நேற்று மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப் பட்டிருக்கின்றது.

வலி.வடக்கு பகுதியில், காங்கேசன்துறை தெற்கு, பளை வீமன்காமம் வடக்கு, தையிட்டி தெற்கு, பலாலி தெற்கு, பலாலி கிழக்கு, பலாலி வடக்கு ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் மொத்தமாக 468.5 ஏக்கர் நிலம் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. இதேபோன்று வலி.கிழக்கு பிரதேச எல்லைக்குட்பட்ட வளலாய் பகுதியில் 233 ஏக்கர் நிலம் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் வளலாய் பகுதி அதாவது வலி.கிழக்கு முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளமை சிறப்பு அம்சமாகும்.

இந்தக் காணிகளில் இருந்து இராணுவத்தினர் வெளியேற்றப்பட்டு, இடம்பெயர்ந்தவர்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக முன்வைக்கப் பட்டு அதற்காகப் பல போராட்டங்கள் நடத்தப்பட்டு வந்துள்ளன.

இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதையடுத்து, இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் இருந்து ஆயிரம் ஏக்கர் வரையிலான காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன. அதன் தொடர் நடவடிக்கையாகவே இப்போது 700 ஏக்கர் காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

நேற்றுமுன்தினம் திங்களன்று கொழும்பில் ஜனாதிபதி செயலாளரின் தலைமையில் நடைபெற்ற உயர் மட்டக் கூட்டத்தில், இது தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## தமிழ் மக்கள்...

உறுப்பினருமாகிய செல்வம் அடைக்கலநாதன் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிய அறிக்கையின் விபரம் வருமாறு,

**ஊடக மறுப்பறிக்கை**

“எதிரிகள்- துரோகிகளுடன் தமிழ் மக்கள் பேரவை - ஒருபோதும் இணையோம்” என்ற தலைப்புடன் 29.12.2015 அன்று உள்ளூர் பத்திரிகை ஒன்றிலும் சில இணையத் தளங்களிலும் வெளிவந்த செய்திகளை கண்டு அதிர்ச்சியும், கவலையும் அடைகின்றேன். அச்செய்தியில் நானும் எமது கட்சியின் உப-தலைவரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரமும் (ஜனா) கூறியதாக வெளிவந்த செய்தி எம்மால் குறிப்பிடப்பட வில்லை அது உண்மைக்கு புறம்பானது. இச்செய்தியானது தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினதோ அல்லது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எமது கருத்தோ அல்ல என்பதையும் மிகவும் தெளிவாக கூறி வைக்க விரும்புகின்றேன்.

கடந்த 27.12.2015ல் கூடிய எமது கட்சியின் தலைமைக்குழு கூட்டத்தில் தமிழ் மக்கள் பேரவை சம்பந்தமாக கட்சியின் நிலைப்பாட்டை (கட்சியின் செயலாளர் நாயகத்தினால்) ஊடக அறிக்கை மூலமாக தெளிவு படுத்தி இருந்தோம். தமிழ் மக்களின் ஒற்றுமை என்ற பலத்தின் ஊடாகவே எமது அரசியல் உரிமைகளையும், இனப்பிரச்சினைக்கான தீர்வையும் வென்றெடுக்க முடியும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக உள்ளோம். இந்த நிலையில் எப்படி இந்த வார்த்தையை நாம் பிரயோகித்திருக்க முடியும். இக்கருத்தினை நாம் ஒருபோதும் கொண்டிருக்கவுமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ)

செல்வம் அடைக்கலநாதன், பா.உ.
குழுக்களின் பிரதித் தவிசாளர்
இலங்கைப் பாராளுமன்றம்.
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை.
இலங்கை.

## உ/த பரீட்சை...

நுட்ப பிரிவு உள்ளடங்களாக ஆறு பிரிவுகளின் அடிப்படையில் இம்முறை பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளன.

தொழில்நுட்ப பிரிவின் கீழ் சுமார் 14000 மாணவ மாணவியவர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இவர்களில் இரண்டாயிரம் பேர் தொழில்நுட்பத்துறை பட்டக் கற்கைநெறிகளுக்காக பல்கலைக்கழங்களில் உள்வாங்கப்படவுள்ளனர்.

அதேவேளை இம்முறை உயர்தரப் பரீட்சைக்காக சுமார் மூன்று லட்சத்திற்கும் அதிகமான பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஸ்பகுமார குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## பிரசாந்தன்...

ந்தன் மற்றும் அவரது சகோதரர் பூபாலப்பிள்ளை ஹரிதாஸ் ஆகியோர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, இரண்டு சந்தேகநபர்களை யும் அடுத்த வருடம் ஜனவரி 12 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

ஆரையம்பதி பகுதியில் 2008 ஆம் ஆண்டு டிசம்பர் 29ஆம் திகதி பாடசாலை ஆசிரியரான தமிழ்நாடு என அழைக்கப்படும் கிருஸ்ணபிள்ளை மனோகரன் உட்பட இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்

இந்த கொலைச் சம்பவம் தொடர்பி லேயே இரண்டு சந்தேகநபர்களும் கடந்த ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## கிணற்றினுள் வீழ்ந்த 5 வயது சிறுவன் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

5வயது சிறுவன் ஒருவன் கிணற்றில் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான். நாரந்தனை 3 ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த மதன கேஸ்வரன் ரவிகரன் (வயது 5) என்ற சிறுவனே நேற்று முன்தினம் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

வீட்டில் சம்பவ தினத்தன்று மாலை தாயாருடன் இருந்த பிரஸ்தாப சிறுவன் அங்கு விளையாடிக்கொண்டிருந்துள்ளான். விளையாடிக்கொண்டிருந்த சிறுவனை தனியே வீட்டில் விட்டு விட்டு, தாயார் பக்கத்து வீட்டிற்கு பிறிதொரு அலுவலாக சென்றுள்ளார்.

தனியாக இருந்த சிறுவனை காணவில்லை என தாயார் தேடிய நிலையில் கிணற்றில் சிறுவன் சடலமாக மிதப்பதை கண்டுள்ளார். சடலம் ஊர்காவற்துறை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. சடலம் தொடர்பான விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். (செ-4)

## போதைப்பொருள் பாவனையால் மரணம் அதிகம்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது அதிகமான உயிரிழப்புகள் போதைப்பொருள் பாவனையினால் ஏற்படுவதாக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் வெல்லாவெளிப் பிரதேச செயலகப் பிரிவின் முகாமைத்துவப் பணிப்பாளர் கே. உதயகுமார் தெரிவித்துள்ளார்.

சமுதாய அடிப்படை அமைப்புகளை பலப்படுத்துவது தொடர்பான செயலமர்வு, வெல்லாவெளி பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட போது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் நோய்த் தாக்கத்தினால் நாளொன்றுக்கு சுமார் 100 பேர் மரணமடைவதாக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதிகமான உயிரிழப்புகள் போதைப்பொருள் பாவனையினால் ஏற்படுவதாகவும் போதைப்பொருள் பாவனை, புகைத்தல், மதுபானம் அருந்துதல் போன்றவை குடும்பங்களை வறுமை நிலைக்கு இட்டுச் செல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புகைத்தல், மதுபானம், போதைப் பொருள் ஆகியவற்றுக்காக செலவிடும் பணத்தை ஒருவர் சேமிப்பராயின், அவரது குடும்ப வாழ்விலும் மகிழ்ச்சி ஏற்படும் எனவும் இது வறுமை இல்லாமல் போக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## நசுக்குவது என்...

கருத்து குறித்து, சமூக வலைத்தளங்களூடாக என் மீது பாரிய தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது.

என்னை நசுக்க முற்படுகின்றனர். என்னை நசுக்க முற்படும் அனைவரிடமும் நான் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். நீங்கள் நசுக்க முற்படுவது என்னையல்ல. இந்த நாட்டின் கலாசாரத்தை, நமது நாட்டிற்கே உரித்தான மரபுகளை, எமது உரிமைகளை. அவற்றை பலவீனமாக்கவும் அழிக்கவும் முயற்சிக்கின்றனர்.

அவர்கள் கோருகின்ற கலாசார சுதந்திரம் என்ன? ஆடையின்றி வீதியில் செல்லும் சுதந்திரத்தையா கோருகின்றீர்கள்? அது மாத்திரம் தான் குறையாகவுள்ளது. அதனால தான் கோருகின்றனர். அதனை மறுக்கும் போது, அதனை வழங்குமாறு கோரி என்னை தாக்குகின்றனர். எமக்கு உரித்தானவற்றைப் பாதுகாப்பதற்கும் தேசிய அடையாளத்தைப பாதுகாப்பதற்கும் அதிக முக்கியத்துவம் வழங்குங்கள்.

2014 ஆம் ஆண்டிற்கான தேசிய கைவினைப்பொருட்கள் உற்பத்தி விருது வழ்ங்கல் விழா நேற்று முற்பகல் பத்தரமுல்ல அபேகம கேட்போர் கூடத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற போதே அவர் இக்கருத்துக்களைத் தெரிவித்தார். (செ-12)

## மற்றொரு சடல...

ததுடன், மற்றைய ஒருவர் காணாமற்போயிருந்தார். ஒருவர் நீந்திக் கரைக்குத் திரும்பியிருந்தார்.

காணாமற்போன மீனவரைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், அவரின் சடலம் நேற்று கரையொதுங்கியுள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த 34 மற்றும் 38 வயதான இருவரே இதில் உயிரிழந்துள்ளனர்.

நேற்று கரையொதுங்கிய பருத்தித்துறையைச் சேர்ந்த அலோசியஸ் அன்ரனின் சடலம், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்ற பிரேதப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை கடலுக்குச் சென்ற 3 மீனவர்களின் படகே கடும் காற்று காரணமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியிருந்தது. (செ-5-12-60)

## யாழில் அதிக...

யுள்ளது. நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் யாழ்ப்பாணத்தில் 103.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் கோவில்காடு பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீசிய பலத்த காற்றினால் 12 வீடுகள் சேதமடைந்துள்ளன. இவ்வாறு வீசிய பலத்த காற்றினால் சேதமடைந்த வீடுகளில் வசித்த மக்கள் தற்போது உறவினர் வீடுகளில் தற்காலிகமாக தங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். (செ-12)


கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி
German Language Academy
ஜேர்மன், சுவிஸ், ஒஸ்றியா ஆகிய நாடுகளுக்கான டொச் மொழிகள் இலகுவான வழியில் ஜேர்மன் தூதரகம் கேட்கும் A1 பரீட்சைக்கு ஏற்றவகையில் கற்பிக்கப்படும்.
புதிய பிரிவுகள் 01/01/2016 அன்று ஆரம்பமாகவுள்ளது.
அரச அங்கீகாரம் பெற்றது (2998)
0779707322 - ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
ஆரம்பம் 01.01.2016 வெள்ளி காலை 9.00 மணி
A/L 2018
கலை வர்த்தகம் கணிதம் உயிரியல் தொழில் நுட்பம்
Note: NEC கல்வி நிறுவனத்தின் 10 வருட நிறைவினை முன்னிட்டு 27.12.2015 தொடக்கம் 01.01.2016 வரைக்கும் அனுமதி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் அனுமதிக்கட்டணம் இலவசம் (சி-3241)
புதிய அனுமதிகளை இன்றுமுதல் பெற்றுக்கொள்ளலாம்.

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள். (C-3229)
அழையுங்கள் - 077 29 31 062
CNR World wide Express No.401 Clock tower road, Jaffna. (பெருமாள் கோவில் அருகாமை)

FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1025 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி. ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 09.01.16 சனி 2 மணி
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 11.01 @ 4pm.
கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 13.01 @ 4pm
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

* இலங்கையில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில் 1092 கிளைகள். எமது தலைமை நிறுவனம் பிரான்ஸில் உள்ளது.
* எமது DELF A1 சான்றிதழைப் பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சைக்கு தோற்றவேண்டியதில்லை.
* இலவசம்: படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை...
* யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.
* பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களுக்கான பிரெஞ் மொழி பெயர்ப்புகள். பாடசாலை / பல்கலைக்கழக மாணவர்களுக்கு கட்டணம் மிக குறைவு (சி-3002)
ஆரம்பம்:-10.01.2016 முதலில் தொலைபேசி ஊடாக பதிவை உறுதிப்படுத்துங்கள்.
021 222 8093 ஏ, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ் நிலையம் → புகையிரதக்கடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

குடும்ப விசாவில் வெளிநாடு செல்லும் பெண்களுக்கு என விசேடமாக தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு தொழில் உத்தரவாதமான
UK Certified Hotel Management With English Course Free
SIKARAM HOTEL SCHOOL
மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள www.sikaram.lk
புதிய பிரிவு ஆரம்பம் - ஜனவரி 13ஆம் திகதி , 1.00 PM
VISIT VISA – SPOUSE VISA – WORK VISA - DEPENDANT VISA
15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...
எந்தவொரு நாட்டுக்குமான எந்தவகை விசா என்றாலும்....
077 36 16 798, 021 222 0011
Sikaram Institute of Hospitality & English
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

DCM
யாழ்.நகர்
A/L 2018
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஆரம்பம் ஜனவரி 02 8.00 மணி (C-3239)

புத்தி சாதுரியமான மாணவச் செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு
ஞானோதய அக்கடமி
(சங்கத்தானை, சாவகச்சேரி)
A/L 2018 A/L Day Class
◆கலை ◆வர்த்தகம் ◆கணிதம் ◆உயிரியல்
◆தொழில்நுட்பம் (செயன்முறைப் பயிற்சிகளுடன்)
◆B.A பட்டப்படிப்பு வகுப்புகள்
◆ஆண்டு 09, 10, 11 வகுப்புக்கள் (3012)
ஆரம்பம்: 01.01.2016 - வெள்ளிக்கிழமை - காலை 9.00 மணி அனுபவமும் திறமையும் வாய்ந்த யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.
-நிர்வாகம்

ECONOMICS HALL
நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (புகையிரத பாதைக்கு அருகில்)
A/L 2018
ஆரம்பம் ஜனவரி 02 காலை 9.00
T.P-0776624387
வர்த்தகப்பிரிவு
பொருளியல் உதயன் | கணக்கீடு A.P.பகீரதன் | வணிகக்கல்வி யசோதரன்
கலைப்பிரிவு
தமிழ் சந்திரலிங்கம் | அரசியல் சுகாஷ் | புவியியல் செந்தூரன்
வரலாறு விஜயரூபன்(விக்கி) | I.C.T R.நஜன் | இந்து நாகரீகம் ஜெயக்குமார்
கிறிஸ்தவ நாகரீகம் S.I.கிளனி(தேவா) | விவசாயம் விக்கி | அளவையியல் என்.பிரதீபன்
Note:- எம்மால் வழங்கப்பட்ட கூப்பன் அட்டையை கொண்டு வரும் மாணவர்களுக்கு அனுமதி இலவசம்

ஜீவக வாத தைலம்
Jeewaka Vata Thailaya
முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு, அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.
25ml-150ரூபா 50ml-280ரூபா 100ml-450ரூபா
Manufactured & Marketed by Jeewaka Herbals No.17/3, wedagedara'Koskandawala yakkala Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621. Contact: 071 227 1526
ஏக விநியோகஸ்தர்கள், சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 2567 (C-3228)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு
◆மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களுக்கான உடனடி வேலைவாய்ப்பு
◆ஆண்களுக்கான வாய்ப்புக்களை எமது இணையத் தளத்தில் பார்வையிடலாம்.
◆அரச அங்கீகாரம் பெற்று யாழ்.நகரில் இயங்கும் ஒரே வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்.
தொடர்புகளுக்கு (C-3243)
IKEA TRAVELS & TOURS (PVT) LTD
62/34, Stanley Road (Old Post Office Rd) Jaffna.
T.P : 021 222 4220, 077 818 1892
www.ikeatourslk.com


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.